











# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 392 • 20 ஏப்ரல் 2018 வெள்ளிக்கிழமை • ஷஃபான் 1439 • விலை 40.00




## மாகாண எல்லை நிர்ணயம்

# விவாதிப்பதற்கான திகதி தீர்மானிப்பதில் இழுபறி



பழைய முறையின் கீழோ அல்லது விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலோ அரசாங்கம் ஒருபோதும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தமாட்டாது எனவும், ஆனால் 1988 இன் மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்குத் தயாராக இருப்பதாகவும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார். புதிய முறையில் தேர்தல் நடத்துவது என்பது 2015 ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதி எனவும் அவர் நினைவுபடுத்தினார்.

சப்ரகமுவ, வட மத்தி, கிழக்கு மாகாணத் தேர்தல்களை நடத்துவது தொடர்பில் நான் புத்தாண்டுக்கு முன்னர் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசினேன். பழைய முறையில் தேர்தல் வைக்கப்பட வேண்டும் என்ற கருத்து அப்போது முன்வைக்கப்பட்டது. (பக். 14)

## புதிய அமைதி காக்கும் படைக்கு பணிப்பாளர் சபை



உலக நாடுகளுக்கு இலங்கையிலிருந்து அனுப்பி வைக்கப்படும் அமைதி காக்கும் படையை வினைத்திறன் மிக்கதாக மாற்றும் நோக்கில் இலங்கை இராணுவப் படையில் வெளிநாட்டு நடவடிக்கைப் பிரிவுக்கான பணிப்பாளர் சபையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஷ் சேனாநாயக்கவின் ஆலோசனையின் படி, சாம மதுர எனும் பெயரில் இந்த பணிப்பாளர் சபை கொழும்பு 03 இல் உள்ள பழைய ஒல்லாந்தர் கட்டடத்தில் தனது பணிகளை கடந்த 12 ஆம் திகதி முதல் ஆரம்பித்துமுள்ளது. வெளிநாட்டு நடவடிக்கைகள் பணிப்பாளராக மேஜர் ஜெனரல் மர்வின் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். (பக். 14)

# யுத்த நீதிமன்றம் நிறுவினால் 35 மில்லியன் டொலர் உதவி



இலங்கைக்கு நிதியுதவி அளிப்பதற்கு அமெரிக்கா நான்கு நிபந்தனைகளை விதித்துள்ளது. காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினைக்குத் தீர்வு காணல், வடக்கு கிழக்கிலுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையைக் குறைத்தல், அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் பாலியல் குற்றங்களுக்கு இலக்கான இலங்கைப் படையினர் தொடர்பில் முறையான விசாரணைகளை நடத்துதல் ஆகிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. (பக். 14)

## சி.வி. புதிய கட்சி மூலம் முதலமைச்சராகிறார் ?



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபையின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக சி.வி. விக்னேஸ்வரனுக்கு வாய்ப்பளிக்க மறுக்கப்பட்டால் புதிய கட்சியொன்றின் மூலம் வட மாகாண முதன்மை வேட்பாளராக அவரைக் களமிறக்குவதற்குத் தாம் தயாராக இருப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அடுத்த தேர்தலில் சி.வி.விக்னேஸ்வரனுக்கு முதன்மை வேட்பாளருக்கான வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது என அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்

## புத்தரின் புனித தந்தம் இம்முறை இலங்கை வராது



எதிர்வரும் வெசாக் காலத்தில் மக்களின் பார்வைக்கு வைப்பதற்காக புத்தரின் சரீரப் பாகங்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு இந்திய அரசாங்கத்தின் கலாச்சார அமைச்சின் கீழுள்ள தேசிய நூதனசாலை விடுத்த வேண்டுகோளை இந்திய எம்.எஸ். பல்கலைக்கழகம் மறுத்துள்ளது.

இம்மாத இறுதியில் நடைபெறும் வெசாக் தினத்தில் மக்களின் பார்வைக்கு வைப்பதற்காக புத்தரின் சரீரப் பாகங்களை இலங்கை அரசாங்கம் கோரியிருந்தது. (பக். 14)

## சிறந்த ஆரம்ப சுகாதார சேவைக்கு இலங்கையைப் பாருங்கள்



தரமான ஆரம்ப சுகாதார சேவைகளின் உண்மையான அர்த்தத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்றால் பொதுநலவாய நாடுகள் இலங்கையை நோக்க வேண்டும் என மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் ஸ்தாபகர் பில் கேட்ஸ் தெரிவித்துள்ளார். பொதுவான எதிர்காலத்தை நோக்கி என்ற தொனிப்பொருளில் லண்டனில் நடைபெறும் பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டின் பூர்வாங்க அமர்வில் உரையாற்றும் போதே பில்கேட்ஸ் இவ்வாறு தெரிவித்தார். (பக். 14)

## கண்டி தாக்குதல் முறைப்பாடு நாளை வரை

இனவாதிகளால் நடத்தப்பட்ட கண்டித் தாக்குதல்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் செய்வதற்கான முறைப்பாடுகள் நாளை (21) வரை ஏற்கப்படுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தீபிகா உடுகம தெரிவித்துள்ளார்.

ஆரம்பமாக எழுத்து மூலமான தகவல்களும் சான்றுகளும் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தும் அவர்களுடன் அக்கறையுள்ளவர்களிடமிருந்தும் சேகரிக்கப்படவுள்ளன. ஆணைக்குழுவின் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளதன்படி, (பக். 11)



## 20 ஆவது திருத்தம் மீண்டும் பாராளுமன்றில்

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்கான 20 ஆவது திருத்தச் சட்டமூலமொன்றை அடுத்த பாராளுமன்ற அமர்வின் போது சமர்ப்பிப்பதற்கு ஜேவிபி தயாராகி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், முன்னாள் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (பக். 11)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பேர்ச்சஸிங்

- மொஹமட் இன்ஷாப்

வெளிநாடுகள் போட்டுக்கொடுத்த கார்ப்பட் ரோட்டில், சீனாவில் உற்பத்தியாகி இங்கே 50 ரூபாவுக்கு விற்கப்படும் சிங்ஹலே ஸ்டிக்கருடன், ஆட்டோ ஒன்று வந்து நின்றது.

அதிலிருந்து 'தேசப்பற்றாளர்கள்' இருவர் இறங்கி, கடைத்தெருவில் அங்குமிங்கும் நடந்தனர். புத்தாண்டு பேர்ச்சஸிங் வந்திருந்த சிங்கள மக்களிடம் (முக்கியமாக பெண்களிடம்) மறைமுக மிரட்டலுடன் சொன்னார்கள்...

'எதுவா இருந்தாலும் சிங்களவர்ட்ட தான் வாங்கனும். என்ன புரிஞ்சுதா?'

பிறகு, புதுவருடத்தை வரவேற்பதற்காய் 4 சாராய போத்தல்களை (அதுவும் வெளிநாட்டு சாமான் தான்) வாங்கிய கையோடு, அவசரவசரமாக முஸ்லிம் நாடுகளிலிருந்து வரும் பெற்றோலை ஃபுல்டேங்க் நிரப்பிக்கொண்டு, தாம் வந்த நோக்கம் நிறைவேறிவிட்ட பெருமிதத்தில் வேகமாய்ச் சென்று மறைந்தது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அந்த 4 ஸ்ட்ரோக் பஜாஜ் ஆட்டோ.

# இலங்கை முஸ்லிம்களுக்கு

- இம்ரான் ஹுஸைன்

நமது வரலாற்றில் மிகவும் நெருக்கடியான காலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதாக ஒரு உணர்வு ஏற்பட்டுள்ளது. ஆனால், இதைவிட பலமடங்கு மோசமான வன்முறைகளை நாம் 1500 களில் சந்தித்தோம். அன்று, போர்த்துக்கேய ஆக்கிரமிப்பினால் முஸ்லிம்களின் கரையோர பூர்வீக குடியிருப்புக்கள் அனைத்தும் அழிந்துபோனது.

ஆனால், இஸ்லாமும் முஸ்லிம்களும் இந்த மண்ணிலிருந்து மறையவில்லை. எல்லா அடக்குமுறைகளையும் தாண்டி இன்றும் தலைநிமிர்ந்து வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறோம்.

30 வருட சிவில் யுத்தத்தில் நாம் இழந்தவைகள், சந்தித்த நெருக்கடிகள் இதைவிட அதிகம். அனைத்தையும் கடந்துதான் இன்றைய நிலைக்கு வந்துள்ளோம்.

இந்த இனவாத அலையையும் நம்மால் சரியாக எதிர்கொள்ள முடியும். அதற்கான தயார்படுத்தல்களையும், நமது சமூகத்தின் உள்ளக பலவீனங்களைக் களையும் வேலையையும் தொடர்ச்சியாகச் செய்யவேண்டும். அதற்கான சகல வளங்களும் நமக்குள் உண்டு. அதற்கான பிரக்ஞையை ஊட்டி சமூகத்தை சிறிது சிறிதாக ஒன்றுதிரட்டி ஒரு திசையில் பயணிக்கச் செய்வதே அவசியம்.

அந்த வேலையைச் செய்ய தலைவர்களை அல்லாஹ் வானத்திலிருந்து இறக்கமாட்டான். நானும் நீங்களும்தான் நமது கரங்களால், நமது அறிவால், நமது பணத்தால் அதற்கான சீராக்கல் பணியைச் செய்யவேண்டும். பலவீனர்களை ஒன்றிணைப்பதும் ஒழுங்குபடுத்துவதும்தான் பலப்படுத்துவதற்கான முதல் படி.

நமக்குள் இருக்கும் 20% கருத்து, சுயநல வேற்றுமைகளைப் பற்றி சிந்திக்காமல், 80% இருக்கும் ஒற்றுமைக்கான ஒன்றிணைவுக்கான, சாத்தியங்கள் குறித்து சிந்தித்து அதன்படி சமூகத்தை உயிர்ப்பிப்போம்.

இவை அனைத்தையும் செய்ய 83 ஜூலை ஒன்று ஏற்படும்வரை காத்திருக்கத் தேவையில்லை, கொழும்பிலிருந்து பெரிய தலைவர்கள் வந்து 'ரிப்பன் வெட்டி' ஆரம்பிக்கும்வரை இருக்கவும் அவசியமில்லை.

சிறிதாக, தொடர்ச்சியாக இலக்கு நோக்கி நகர ஆரம்பித்தால் அனைத்தும் சாத்தியம்.




## வேசாக் விடுமுறை

சித்திரையில் விட்டதை வெசாக் விடுமுறையில் பிடித்துவிடும்-நுவரெலியா

நியாஸ் அஹமட்

## உன் மதம் தான் என்ன?

மசூதியை இடித்துவிட்டாய்...
ஆலயத்தை எரித்துவிட்டாய்...
கோவிலையும் அசிங்கப்படுத்தி
விட்டாய்...
உண்மையை
சொல்லடா..
உன் மதம் தான் என்ன?



ஜெரீனா ஜமால்

இந்தியாவின் காஷ்மீர் பிரதேசத்தில் இந்துத்வா இனவெறி காமுகர்களால் கோவிலில் வைத்து கசக்கப்பட்டு உயிரிழந்த ஆஸிபா என்ற சிறுமியின் கொலையை அடுத்து வெளியான கவிதை.

# பிரதேச சபை வருமானம்

- பைரூஸ் மாஹாத்



இலங்கையின் அதிக வருமானம் பெறும் பிரதேச சபைகளுள் திருமலை ப/சூ பிரதேச சபை குறிப்பிடத்தக்கது. ப்ரீமா , மிட்சுயி, பெற்றோலியம் போன்றன இதற்குள் இருப்பதே காரணம்.

இதனால், வரும் வருமானம் நியாயமாக எல்லாப் பகுதிகளுக்கும் பகிரப் படாமை பெரும் குறைபாடாகும்.

தற்போது தனது செயல்பாட்டை ஆரம்பிக்கும் சபை இதை கருத்தில் கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம்.

# சிறுகதைப் போட்டி

எஸ்.எம்.எம்.முர்ஷித்

சமூக ஊடக நண்பர்கள் வட்டம் அகில இலங்கை ரீதியாக சிறுகதைப் போட்டிகளை நடாத்தவுள்ளனர். அந்த வகையில் போட்டி நிபந்தனைகளாக

01. கண்டி மாவட்டத்தில் அண்மையில் நடந்த கலவரங்களைப் பின்னணியாகக் கொண்டு மாத்திரம் கதைகள் எழுதப்பட வேண்டும்.

02. இலங்கையரான எந்த இனத்தைச் சார்ந்தவரும் போட்டியில் பங்குபற்ற முடியும்.

03. கதைகள் தமிழ் மொழியில் எழுதப்பட்டதாக இருப்பதுடன், இதற்கு முன் எந்தப் போட்டிக்கும் அனுப்பப்படாததாகவும், எதிலும் பிரசுரமானதாகவும் இருக்கக் கூடாது.

04. ஒருவர் ஒரு கதை மாத்திரமே அனுப்புதல் வேண்டும்.

05. ஏ4 தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமல் 12 புள்ளி எழுத்தில் கணினித் தட்டச்சு செய்யப்பட்டுக் கதைகள் அனுப்பப்பட வேண்டும்.

06.கதையை எழுதியவர் தானே எழுதியது என்பதை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றைக் கதையுடன் இணைத்து அதில் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம், தொடர்பிலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடல் வேண்டும். எக்காரணம் கொண்டும் கதை இடம்பெற்றுள்ள தாளில் எந்தவொரு இடத்திலும் பெயர், விபரங்கள் குறிப்பிடப்படலாகாது.

07. கதைகளைப் பதிவுத் தபாலில் அல்லது வேகத் தபாலிலோ அனுப்புவது பாதுகாப்பானது.

08. விதிகளைப் பின்பற்றாத கதைகள் நிராகரிக்கப்படும்.

09. நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது. தெரிவு பெறும் கதைகளும் நடுவர்களால் பரிந்துரைக்கப்படும் கதைகளும் அமைப்பின் வெளியீடு ஒன்றில் பிரசுரமாகும் உரிமை கொண்டிருக்கும்.

10. கதைகள் யாவும் எதிர்வரும் 31. 05.2018 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.



11. Ashroff Shihabdeen, 37, Dhankanatha Road, Mabola, Wattala,

வெற்றி பெறுபவர்களுக்கு முதற் பரிசாக ரூபாய் பத்தாயிரமும் (10,000), இரண்டாம் பரிசாக ரூபாய் ஏழாயிரத்து ஐநூறும் (7500), மூன்றாம் பரிசாக ரூபாய் ஐயாயிரமும் (5000) சான்றிதழ்களும் வழங்கப்படும்.

பரிசுக்குத் தகுதி பெறாத, ஆனால் நடுவர்களால் விதந்துரைக்கப்படும் பட்சத்தில் மேலும் ஐந்து சிறுகதைகளுக்கு தலா ரூபாய் ஆயிரமும் (1000) சான்றிதழ்களும் வழங்கப்படும்.

# முஸ்லிம் அல்லாதவர்களை மஸ்ஜிதிற்குள் அனுமதிப்பது பற்றிய அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் மார்க்கத் தெளிவு

மஸ்ஜித் என்ற அரபுப் பதத்தின் பொருள்; சிரம் சாய்க்கும் (ஸுஜூத் செய்யும்) இடம் என்பதாகும். அல்லாஹ்வை சிரம் சாய்த்து வணங்குவது (ஸுஜூத் செய்வது) மஸ்ஜிதில் நடைபெறும் பிரதான வணக்கமாகும்.

மஸ்ஜித்கள் பற்றி அல்லாஹு தஆலா கூறும் போது 'மஸ்ஜித்கள் அல்லாஹ்வுக்கென்று நிர்மாணிக்கப்பட்டவைகளாகும். அதில் அல்லாஹ் அல்லாத எதையும் அழைக்க வேண்டாம்' என்று கூறுகின்றான். (72:18)

மேலும், அல்லாஹுதஆலா திருமறையில் 'இறை இல்லங்களில் அவனது பெயர் கூறப்பட வேண்டும் என்றும், அவற்றின் கண்ணியம் உயர்த்தப்பட வேண்டும் என்றும் கட்டளையிட்டுள்ளான். அவற்றில் காலையிலும் மாலையிலும் முஸ்லிம்கள் அவனைத் துதி செய்து கொண்டிருப்பார்கள்' என்று கூறுகிறான். (24:36)

'மஸ்ஜித்கள் அல்லாஹ்வை நினைவுகூர்ந்து போற்றுவதற்கும், தொழுவதற்கும், குர்ஆன் ஓதுவதற்கும் உரியதாகும்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறியதாக அனஸ் பின் மாலிக் றழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள். (நூல் : சஹீஹுல் புகாரி)

அல்லாஹ்வின் இல்லமான மஸ்ஜித் கண்ணியமான இடமாகும். அது முஸ்லிம் சமூகத்தின் சமய, சமூக, கலாசார, ஆன்மீக, மற்றும் கல்வி சார் செயற்பாடுகளின் முன்னேற்றத்திற்கு உதவுதல் போன்ற விடயங்கள் நடைபெறும் இடமாகும். எனவே, அதன் புனிதத்துவத்தைப் பாதுகாப்பதற்காக முஸ்லிம்கள் அதற்கான ஒழுங்கு விதிகளைக் கடைபிடிக்க வேண்டும் என்பதை யாரும் அறிவர்.

அவற்றில், மஸ்ஜிதிற்குள் நுழையும் ஆண், பெண் இருபாலாரும் ஒழுக்கமான ஆடையை அணிந்திருத்தல், வீண் பேச்சுக்களைத் தவிர்த்தல், சப்தத்தைத் தாழ்த்தல், இஃதிகாப் நிய்யத்துடன் வீற்றிருத்தல் துர்வாடையின்றி மணமாக இருத்தல், ஜனாபத் உடைய சந்தர்ப்பங்களில் மஸ்ஜிதில் தரிக்காதிருத்தல் என்பவை முக்கியமானவையாகும்.

எமது நாட்டில் உள்ள மஸ்ஜித்களில் நடைமுறையில் இருப்பது போன்று, முஸ்லிம் பெண்கள் மஸ்ஜிதிற்குள் நுழைவதாயின் அவர்களுக்கென்று தனியாக ஒதுக்கப்பட்ட இடங்களைப் பயன்படுத்துவதோடு, அவர்கள் மாதவிடாய், பிரசவ ருது போன்றவற்றிலிருந்து சுத்தமாக இருப்பதும் அவசியமாகும்.

மேலும், முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் கூறுவதும், இஸ்லாத்தைப் பற்றி அவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவதும் முஸ்லிம்களது கடமையாகும். நாம் இஸ்லாம் கூறும் பிரகாரம் வாழத் தவறியதும், அதைப் பிறருக்கு முறையாக எட்டச் செய்யாமையும்; அவர்களுக்கு இஸ்லாம் பற்றிய பல சந்தேகங்கள் அதிகரிப்பதற்கான காரணங்களாகும்.

மேலும், 'ஒவ்வொருவரையும் அவரது அந்தஸ்திற்கேற்ப கண்ணியப்படுத்துங்கள்' (ஸஹீஹு முஸ்லிமின் முன்னுரை) என்ற நபி மொழிக்கேற்ப, முஸ்லிம் அல்லாதவர்களை அழைத்து இஸ்லாத்தை எடுத்துக் கூறும் போது, சமயத் தலைவர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் அனைவரையும் அவர்களது அந்தஸ்திற்கேற்ப கௌரவிப்பது மார்க்கத்தில் உள்ள ஒரு விடயமாகும்.

முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இஸ்லாம் பற்றிய தெளிவை ஏற்படுத்[illegible] தமது வீடுகளைப் [illegible]



பாடசாலைகளையும், மத்ரஸாக்களையும் அல்லது பொதுவான மண்டபங்களையும் இதற்காகப் பயன்படுத்த முடியும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவில் சபா மலைக்கு அருகாமையில் தமது குடும்பத்தினர் அனைவரையும் அழைத்து இஸ்லாத்தை தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

மேலும், முஸ்லிம் அல்லாதவர்கள் மஸ்ஜிதில் நுழைவதற்கான தேவையிருந்தால் அவர்களை அனுமதியளிக்கும் விடயத்தில் மார்க்க அறிஞர்களிடம் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், மஸ்ஜிதுல் ஹராம் தவிர்ந்த ஏனைய மஸ்ஜித்களுக்கு, அவற்றில் பேண வேண்டிய ஒழுங்குகளுடன் நுழைய அனுமதிக்கலாம் என்று ஷாபிஈ மத்ஹபுடைய அறிஞர்கள் கூறுகின்றனர்.

நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஸுமாமா இப்னு உஸால், ழிமாம் இப்னு ஸஃலபா போன்ற சில தனிப்பட்ட நபர்களுக்கு மஸ்ஜிதிற்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். அதேபோன்று சில குழுக்களுக்கும் மஸ்ஜிதிற்குள் நுழைய அனுமதியளித்துள்ளார்கள். இவை சஹீஹான ஹதீஸ்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறு முஸ்லிமல்லாதவர்கள் மஸ்ஜித்களுக்குள் நுழையும் அவசியம் ஏற்படின் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளும் உள்ளன. அவற்றில் சில பின்வருமாறு:

1. இதற்காக பொருத்தமான மஸ்ஜித்களை மாத்திரம் தெரிவு செய்தல்.
2. மஸ்ஜித் வளாகத்தில் இதற்கென்று பிரத்தியேக இடமொன்றை ஒழுங்கு செய்து கொள்வதும் பொருத்தமாகும்.
3. ஏகத்துவம் பகிரங்கப்படுத்தப்படும் இடமாகிய மஸ்ஜிதில் இணைவைத்தலுடன் சம்பந்தமான எந்தக் காரியமும் நிகழா வண்ணம் ஏலவே உத்தரவாதப்படுத்திக்கொள்ளல்.
4. மஸ்ஜிதைத் தரிசிக்க வருவோருக்கு மஸ்ஜிதின் மகத்துவம் மற்றும் ஒழுங்கு முறைகள் பற்றிய தெளிவொன்றை ஆரம்பத்திலேயே வழங்குதல்.
5. ஆண், பெண் இருபாலாரினதும் ஆடைகள் ஒழுக்கமான முறையில் இருத்தல்.
6. மஸ்ஜிதில் நுழைய விரும்பும் பெண்களுக்கு பிரத்தியேக ஆடையொன்றை ஏற்பாடு செய்தல்.
7. பாதணிகளுடன் மஸ்ஜிதிற்குள் நுழைவதை அனுமதிக்காதிருத்தல்.
8. போதையுடன் இல்லாதிருத்தல்.
9. எக்காரணம் கொண்டும் தொழுகை மற்றும் ஜுமுஆ போன்ற வழிபாடுகளுக்கு இடையூறு இல்லாததாக இருத்தல்.
10. றமழானுடைய மாதத்தில் இப்தாருடைய நேரத்தில் அவர்களை அழைக்கும் பொழுது இப்தாருடன் சம்பந்தப்பட்ட வணக்கங்களுக்கு இடையூறு ஏற்படும் என்பதால், அந்நேரங்களில் அவர்களை அழைப்பதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளல்.

எல்லாம் வல்ல அல்லாஹ்வே நன்கு அறிந்தவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• நேசன்

# இனவன்முறைகளுக்கு அனுசரணை வழங்குவது யார்?

திகன தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களுக்கும் காயப்பட்டவர்களுக்கும் அரசாங்கம் நஷ்டஈடுகளை அறிவித்துள்ளது. இனவாதத் தாக்குதலின் போது உயிரிழந்தவர்களுக்காக ஐந்து இலட்சம் ரூபாவும், காயமடைந்தவர்களுக்கு 250,000 ரூபாவும் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இனவாதக் கும்பல் முஸ்லிம்கள் மீது மேற்கொண்ட வெறித்தனமான தாக்குதல்களின் போது அப்துல் பாஸித் என்ற 24 வயது இளைஞன் கொல்லப்பட்டான். இவருடன் சேர்த்து இந்தத் தாக்குதல் காலப்பிரிவில் உயிரிழந்த இரண்டு சிங்கள இளைஞர்களுக்கும் நஷ்டஈடு பிரேரிக்கப்பட்டிருக்கிறது.

இனவாதக் கும்பல் தனது வீட்டைத் தீக்கிரையாக்கியதன் போதே அவர் மூச்சுத் திணறி உயிரிழந்திருக்கிறார் என்ற வகையில் அப்துல் பாஸித் இந்த நஷ்டஈட்டைப் பெறுவதற்குத் தகுதியானவர். ஆனால் உயிரிழந்த ஏனைய இரண்டு சிங்கள இளைஞர்களைப் பொறுத்த வரையில் நிலைமை வித்தியாசமானது. உயிரிழந்த இருவரில் ஒருவரான லொறிச் சாரதி குமாரசிங்க, தனிப்பட்ட பிரச்சினையொன்றின் காரணமாக இரு நபர்களுக்கிடையில் அல்லது தரப்புகளுக்கிடையில் நடந்த கைகலப்பின்போது தாக்கப்பட்டு பின் ஒரு வாரத்துக்குப் பின்னரே உயிரிழந்தார்.

திகன இனவன்முறைக்கு முன்னரேயே இந்த உயிரிழப்பு நிகழ்கிறது என்ற வகையில் இனவன்முறைக்கு வழங்கப்படும் நஷ்டஈடு வகையறாவில் இவரை உள்ளடக்க முடியாது. உயிரிழந்த இரண்டாமவர், பூஜாபிட்டிய பிரதேசத்தில் முஸ்லிம்களின் மீது தாக்குதலுக்காக வந்த வேளையில் ஏற்பட்ட வெடிவிபத்து காரணமாக உயிரிழந்துள்ளார். இன வன்முறையின்போது தாக்கப்பட்டு உயிரிழந்த அப்துல் பாஸித்துக்கு வழங்கப்படுகின்ற நஷ்டஈட்டுத் தொகையையே இவர்களுக்கும் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.


அளுத்கம வன்முறைகளின் போது இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கால்களை இழந்து காயமடைந்தது போன்றதான சேதங்கள் கண்டி வன்முறைகளின் போது இடம்பெறவில்லை. இதனால் காயமடைந்தோரின் எண்ணிக்கை பெருவாரியானதாகப் பதியப்படவில்லை. தாக்குதல் நடத்திய இன வெறியர்களிடமிருந்து தம்மைத் தற்பாதுகாத்துக் கொள்ள தாக்குதலுக்கு உள்ளானவர்கள் எடுத்த முயற்சியின் போது இனவாதிகளில் சிலர் காயங்களுக்கு உள்ளாகியிருப்பதற்கான வாய்ப்புக்களும் இல்லாமல் இல்லை.

இந்த வகையில் அரசு அறிவித்திருக்கின்ற காயமடைந்தவர்களுக்கான நஷ்டஈட்டிலும் தாக்குதல் நடத்தியவர்களும் பயன்பெறவிருக்கிறார்கள்.

இனவாதிகள் எதனையும் செய்யலாம், இனவாதத் தாக்குதல்களின் போது நீங்கள் உயிரிழந்தாலோ, காயமடைந்தாலோ அதற்கான நஷ்டஈட்டை அரசாங்கம் பொறுப்பெடுக்கும் என்று இனவாதிகளை உற்சாகப்படுத்துவது போல இருக்கிறது அரசாங்கத்தின் இந்த அறிவித்தல். இது ஒன்றுதான் இனவாதிகளை உற்சாகப்படுத்தும் அரசாங்கத்தின் ஒரே நடவடிக்கை என்று சொல்வதற்கில்லை. கண்டி தாக்குதல்களின் போது நடைபெற்ற எல்லாமே இந்தத் தாக்குதல்களிலான அரச அனுசரணையை வெளிப்படுத்தும் வகையிலேயே அமைந்திருந்தது அனைவராலும் அவதானிக்கப்பட்டது.

அரச படைகளில் குறிப்பாக எஸ்.டி.எப்.பினதும் பொலிஸினதும் நடவடிக்கைகள் இந்தத் தாக்குதல்களின் பின்னாலுள்ள அரசாங்கத்தின் அனுசரணையை வெளிப்படுத்தப் போதுமையானவையாக அமைந்திருந்தன. தாக்குதல் நடத்தப்படுவதற்கு முந்திய தினமான மார்ச் 04 ஆம் திகதி ஸ்ரீ சிங்ஹலே புத்தி மண்டபய, எக்ஸத் ஜனதா ஆரக்ஷன சபாவ என்ற பெயரில் 17-30 வயதுக்கிடைப்பட்ட இளைஞர்கள் சிலரினால் தாக்குதல் தினமாகிய அடுத்த நாள் 05 ஆம் திகதியை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் தொடர்பில் ஏன் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை? ஸ்ரீ சிங்ஹலே புத்தி மண்டபய, எக்ஸத் ஜனதா ஆரக்ஷன சபாவ பற்றி இதுவரை எதனையும் அரசாங்கம் தேடாததும் வெளிப்படுத்தாததும் ஏன்? இவர்களது துக்க தின அறிவித்தலுக்கு உதவும் வகையில் கடைகளை மூடச் சொல்லி பொலிசார் எப்படி உத்தரவு போட முடிந்தது? வீடுகளில் இருங்கள், வெளியே வராதீர்கள், பாதுகாப்பை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்லி முஸ்லிம்களை வீடுகளில் அடக்கி வைத்த பொலிசார், பாதுகாப்புத் தராமல் குண்டர்களுக்கு ஆதரவளித்தது ஏன்?

இது பொலிசாரின் அசமந்தப் போக்கல்ல. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இவர்கள் தாக்குதல்கள் நடத்துவதற்கு உடந்தையாக இருக்கும் வகையில் வழிநடத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதனை மேலும் பல விடயங்கள் உறுதிப்படுத்துகின்றன.



உயிரிழந்த குமாரசிங்கவுடைய மரணச் சடங்கு நடைபெற்ற இடத்திலிருந்து திகன 30 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. திகன - மஹியங்கன வீதியில் 10 கிலோ மீட்டர் தொடராக இருக்கும் பலகொல்ல, கெங்கல்ல, திகன நகரங்கள் 30 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து வந்தவர்களால் தாக்கப்பட்டுள்ளன. 2000 பேரளவில் தாக்குதலுக்கு வந்ததாக நேரில் கண்டவர்கள் கூறுகிறார்கள். 2000 பேர் 30 கிலோமீட்டர் தாண்டி வந்து பட்டப் பகலில் தாக்குதல் நடத்தியதை பொலிசார் தடுக்காதது ஏன்?

| பொலிஸ் நிலையம் | திகனவுக்கான தூரம் | அடைவதற்கான நேரம் |
|---|---|---|
| பல்லேகலே | 4.2 கி.மீ | 11 நிமிடம் |
| மனிக்ஹின்ன | 5.2 கி.மீ. | 12 நிமிடம் |
| தெல்தெனிய | 8.2 கி.மீ. | 14 நிமிடம் |
| ரன்கல | 17.3 கி.மீ | 34 நிமிடம் |
| கண்டி | 17.4 கி.மீ | 47 நிமிடம் |

தாக்குதல் நடத்தப்பட்ட தினத்தில் பகல் 1 மணி முதல் 2 மணி வரை முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. இந்த ஒரு மணித்தியாலயத்தில் கண்டியில் இருந்து பொலிசார் வரவழைக்கப்பட்டிருந்தால் கூட தாக்குதல் நடத்தியவர்களை உடனுக்குடன் கைதுசெய்து தாக்குதலை நிறுத்தியிருக்கலாம்.

ஆனாலும் இவர்களை இங்கு வரவிடாமல் தடுத்தது யார்? திகன மொபைல் போன் கடை உரிமையாளர் மொஹமட் நவாஸ் சொல்வதன்படி, 'கல்லடிக்கத் துவங்கும் போதே நான் பொலிசுக்கு கோல் பண்ணினேன், டவுனில் தான் இருக்கிறோம், உடனே வருகிறோம் என்று சொன்னார்கள். 45 நிமிடங்களின் பின்னர் கடை பற்றியெரிந்து முடிந்த வேளையில் தான் அவர்கள் வந்து சேர்ந்தார்கள் என்று கூறுகிறார்.

இது போலத் தெரிவிக்கப்படுகின்ற பலருடைய கருத்துக்களின் படி, அரசாங்கத்தின் பொலிஸாரை இங்கு வரவிடாமல் உயர்மட்ட அழுத்தங்கள் தடுத்திருக்கின்றன என்பது புலனாகிறது.

பல்லேகலையைச் சுற்றி பல இராணுவ முகாம்களும் ரைபிள் படை முகாமும் இருந்த போதிலும் இங்குள்ள அரச படைகள் எதுவும் தாக்குதலைத் தடுக்கவில்லை. குறிப்பாக விஷேட அதிரடிப் படையான எஸ்.டி.எப். பினரே முன்னின்று தாக்குதல்களை நடத்தியதற்கான வாக்குமூலங்களும் வீடியோ, CCTV, புகைப்படப் பதிவுகளும் இங்குள்ள மக்களால் சேகரிக்கப்பட்டுள்ளன.

ரஜவல்ல ஜும்ஆப் பள்ளிவாசல் தாக்குதல் தொடர்பில் நியாஸ் கான் (45) விபரிக்கும் போது, STF பார்த்துக் கொண்டிருக்கும் போதே பள்ளிவாசல் தாக்கப்பட்டதை நான் கண்ணால் கண்டேன். தாக்குதல் ஆரம்பிக்கும் வேளையில் அவர்கள் அந்தப் பக்கமாவது வரவில்லை என்கிறார். தாக்குதல்களுக்கு வந்தவர்களுக்கிடையே நிராயுதபாணியான பொலிசாரும் இருந்ததை பதிவு செய்த CCTV கமரா பதிவுகள் இருக்கின்றன. சைற்றம் மாணவர்களை தடுத்து நிறுத்திய அரச படைகள் ஏன் இவர்களை தடுத்த நிறுத்த முயலவில்லை?

அரசாங்கத்தின் விஷேட அதிரடிப் படையினரும் தாக்குதல்களுக்கு அனுசரணை வழங்கிய சந்தர்ப்பங்களும் பதிவாகி இருக்கின்றன. அம்பதன்ன, வெலேகடேயில் ஊரடங்கு நேரத்தில் (CCTV கமெரா பதிவு 2018.03.07 காலை 9.59) தாக்குதல் நடத்தும் பொழுது விஷேட அதிரடிப் படையினர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததும் பதிவாகியிருக்கிறது. 07 ஆம் திகதி காலை மணிக்கு ஊரடங்கு நேரத்தில் தனது மரஆலை தீக்கிரையாக்கப்படும் போது 04 பேர் பாதுகாப்புக் கடமையில் இருந்ததாக ஃபஷன் ஹுட் மரஆலை உரிமையாளர் எம்.எம்.ரியாஸ் (38) தெரிவிப்பதும் இதற்கு நல்ல சான்று.

இவற்றுக்கு மேலதிகமாக அரசாங்கத்தின் விஷேட அதிரடிப்படையினரே முன்னின்று தாக்குதல் நடத்திய சம்பவங்களும் பதியப்பட்டுள்ளன. ஹிஜ்ரா புர பள்ளிவாசலில் அஸர் தொழுகையின் பின்னர் பலாத்காரமாக கேட்டைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்த விஷேட அதிரடிப் படையினர், அங்கிருந்த மௌலவியைக் கூட தாக்கியுள்ளனர். அங்கிருந்தவர்களின் வாக்குமூலப்படி, காதிலும் கேட்க முடியாத தூஷன வார்த்தைகளால் அவர்கள் பள்ளிவாசலுக்குள் திட்டியுள்ளனர், ஹம்பயா என்ற வார்த்தைகளினூடாக அங்கிருந்தவர்களை ஏசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது தொடர்பில் பைஸல் மொஹமட் என்பவரிடம் கேட்டறிவதற்காகச் சென்ற மதத்தும்புர பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் மொஹமட் பாஸிலிடம் விஷேட அதிரடிப் படையினர் பெட்ரோல் குண்டுகள் அடங்கிய பொதியொன்றைக் கொடுத்து, அவரைக் குற்றவாளியாக்கி அவரது கைகளையும் கால்களையும் கட்டி அடித்து அவர்களே வைத்தியசாலையில் அனுமதித்த சம்பவமொன்று தொடர்பிலும் பிரதேசவாசிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

(பக்.14)

• இயான் மிஷ்அல்

# முதல் கல்லை எறியப் போவது யார்?

சிங்கள - தமிழ் புத்தாண்டு காலத்தை இனவாத செயற்பாடுகள் அமைதியாக அனுஷ்டித்திருந்தன. தமிழருக்கு அடுத்தது நாங்கள்தான் என்று யுத்த காலத்தில் முஸ்லிம்கள் எதிர்பார்த்திருந்தது போல புத்தாண்டுக்குப் பின்னர் மீண்டும் தமக்கெதிரான இனவாத வன்முறைகள் தொடரும் என்ற எதிர்பார்ப்பிலேயே முஸ்லிம் சமூகம் புத்தாண்டு காலத்தை கழித்திருக்கிறது.

வழமையான நுவரெலியா சுற்றுலாவை முஸ்லிம் சமூகத்தில் பெரும்பாலானவர்கள் தவிர்த்திருந்தார்கள். புதுவருட வியாபாரம் இம்முறை இனவாதமாக்கப்பட்டிருந்ததால், புதுவருட வியாபாரத்துக்கென முதலீடு செய்வதை முஸ்லிம் வியாபாரிகள் அடக்கி வாசித்திருந்தார்கள். பாடசாலைகளில் முதலாம் தவணையில் நடைபெற வேண்டிய கல்விச் சுற்றுலாக்கள் ரத்து செய்யப்பட்டிருந்தன. அடுத்த அழிவுக்கான காத்திருப்புக்களுக்குரிய ஆயத்தங்கள் முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் அந்தர்லீலையாக நகர்ந்து கொண்டிருந்தன.

கண்டித் தாக்குதல்கள் எந்தச் சமூகத்தையும் கிளர்ந்தெழச் செய்யும் வகையிலான கிளர்ச்சியூட்டும் வன்முறைகள் தான். இந்தச் சமயத்தில் முஸ்லிம் சமூகத்தைக் கிளர்ந்தெழச் செய்ய வேண்டும் என்பதுதான் தாக்குதல் நடத்தியவர்களின் பிரதான குறிக்கோளாகவும் இருந்தது. முஸ்லிம் சமூகம் இதற்குப் பதிலடி கொடுக்கத் தொடங்கியிருந்தால் அது நாடு தழுவிய இனக் கலவரமாக மாறி நாட்டின் ஸ்திரத் தன்மையையே ஆட்டங் காணச் செய்திருக்கும். இதனைப் பயன்படுத்தி குளிர்காய நினைக்கும் சக்திகளுக்கெல்லாம் வட்டிலப்பம் கிடைத்தது போலிருக்கும்.




இந்த நிலை ஏற்படாமல் தமக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களை பொறுத்துக் கொண்ட முஸ்லிம் சமூகத்துக்கு இந்த நாடு கடமைப்பட்டிருக்கிறது. ஆங்காங்கு உருவான தலைமைகளால் வழிநடத்தப்பட்ட முஸ்லிம் சமூகம், கட்டுக்கோப்பை இழக்காமல் சுதாகரித்துக் கொண்டு களத்தில் செயற்பட்டதனால் நாடு பேரழிவொன்றிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளது.

இந்த வகையில் முஸ்லிம் சமூகம் இழந்த கோடிக்கணக்கான [illegible] அனைத்தும் நாட்டைப் பாதுகாப்பதற்காக அர்ப்பணம் செய்யப்பட்டவையாகவே வரலாற்றில் பதியப்பட வேண்டும். முஸ்லிம்கள் இந்த நாட்டைப் பாதுகாப்பதற்கு ஆயிரம் ஆண்டு காலத்துக்கும் மேலாக செய்து வரும் அர்ப்பணிப்புக்களின் தொடராகவே இதனை நோக்க வேண்டும்.

இனவாத வன்முறைகளைப் பரப்பிவிட்டு அதில் குளிர்காய நினைக்கும் சக்திகளின் முயற்சிகள் ஓரிரண்டு செயற்பாடுகளினால் முடிவடைந்து போகப் போவதில்லை. தமது முயற்சியில் வெற்றி பெறும் வரை அவர்கள் பல வடிவங்களிலும் முயற்சி செய்வார்கள் என்பது தான் வரலாறு. அந்தத் தொடரில் இன்னும் [illegible] காலங்களில் நடந்தேறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே இருக்கின்றன. முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் அமைதி நிலையைப் பேணி தமது ஆட்டத்துக்கான பகடைக்காய்களாக மாறாமல் இருந்துவிட்டால், இலங்கையை மற்றுமொரு மியன்மாராக மாற்றும் வரை இந்தச் சக்திகள் ஓயப் போவதில்லை.

இவ்வாறானதொரு தேவை இந்திய அரசாங்கத்துக்கு இருப்பது தெளிவாகத் தெரிகிறது. ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை அண்மையில் வெளியிட்ட செய்தியொன்றில், இந்தியாவில் உள்ள அமெரிக்க - இஸ்ரேல் தூதராலயம் மீதும் விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படைத் தலைமையகம் மீதும் தாக்குதல் நடத்துவதற்கு முயற்சி செய்த நான்கு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக இந்திய தேசிய புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது. இந்த நால்வரும் சாகிர் ஹுசைன், அருண் செல்வராஜ், சிவபாலன், தமீம் அன்சாரி என அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

அமெரிக்க புலனாய்வுச் சேவை வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை தெரிவிக்கிறது.

இது போன்ற பல செய்திகள் இதற்கு முன்னரும் வெளிவந்திருக்கின்றன. அவற்றில் சில முஸ்லிம்களை பயங்கரவாதிகளாகச் சித்திரிக்கும் இந்தியத் திரைப்படப் பாணியிலான செய்திகளாகவும் இருக்கின்றன. 2013 டிசம்பரில் பங்களாதேஷில் ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவர் அப்துல் காதர் முல்லா தூக்கிலிடப்பட்ட போது கூட, தமது தூதரகத்துக்கும் தூதரக அதிகாரிகளுக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலவுவதாகக் கூறி தமது பாதுகாப்பை பலப்படுத்தும்படி இந்திய அரசு இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியிருந்தது.

இதேபோல இந்தியாவின் பூனே பிராந்தியத்தைச் சேர்ந்த 16 வயது யுவதி ஒருத்தியை ஐஎஸ்ஸில் இணைப்பதற்கு இலங்கையைச் சேர்ந்த ஒருவர் ஏஜன்டாகத் தொழிற்பட்டதாக இந்திய பயங்கரவாத தடுப்பு அணியின் உதவி ஆணையாளர் பானுபிரதாப் பார்கே இலங்கையிலுள்ள பத்திரிகையொன்றுக்கு 2015 டிசம்பரில் செய்தி வெளியிட்டிருந்தார். முஹம்மத் சிராஜுதீன் என்ற ஒருவரே இந்த இலங்கை ஏஜன்ட் சம்பந்தமான தகவல்களை இந்த யுவதிக்கு வழங்கியதாகவும், அந்த ஏஜன்டை கைது செய்வதற்காக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அந்தப் பத்திரிகைக்கு கூறியிருந்தார். ஆனால் இன்று வரை அப்படி ஒரு ஏஜன்ட் இலங்கையில் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஐஎஸ் இல் இணைந்ததாகச் சொல்லப்பட்ட அபூ சுரையா சைலானியும் அந்த 32 பேரும் தொடர்பிலும் அவர்களை அடையாளப்படுத்தி வெளிப்படுத்தும் வகையிலான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. அடுத்த தாக்குதலுக்கு முன்னர் அல்லது தாக்குதலின்போது இவ்வாறானவர்கள் வெளிப்படுத்தப்படவும் முடியும். ஆகவே இலங்கை முஸ்லிம் சமூகம் இது குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டிய தேவை எழுகிறது.

மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் தொடங்கி இன்று வரை முஸ்லிம் சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டு (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## தலைவர்களும் ஜனநாயகமும்

ஜனநாயக நாட்டில் மக்களில் பெரும்பாலானவர்களின் விருப்பத்துக்குரியவர்களே தேர்தல்களின் மூலம் தலைவர்களாகத் தெரிவு செய்யப்படுகின்றனர். ஜனநாயகத்தின் வழிமுறையாக தேர்தலை அங்கீகரித்துள்ள எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பெரும்பான்மையின் கருத்தே தீர்மானமாக அமைவது என்பது உலகம் ஏற்றுக் கொண்ட பொதுவிதியாகவுள்ளது.

ஜனவரி 08 புரட்சியின் போதும் நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் தமது ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவை தெரிவு செய்தனர். அன்றிலிருந்து இன்று வரை அவரே நாட்டின் ஜனாதிபதியாகத் தொழிற்பட்டு வருகிறார். இந்தப் பதவி, ஏக காலத்தில் அவரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் மாற்றியிருக்கிறது. இது கட்சியின் யாப்பு ரீதியான பதவி என்பதால் இங்கு கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத் தெரிவுக்கான அவகாசம் வழங்கப்படவில்லை. நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி தலைவராக உள்ள கட்சியில் அவருக்குப் பெரும்பான்மை விருப்பத் தேர்வு இல்லை என்பது தெளிவாகப் புலனாகியது.

அதேபோல, பிரதமர் தலைவராக உள்ள ஐக்கிய தேசியக் கட்சியிலும் பிரதமருக்கு பெருவாரியான விருப்பத் தேர்வு இல்லை என்பதனை அவர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பின் போது தெளிவாகியது. இந்த இடத்தில் பிரதமராக அவர் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணையை வெளிப்படுத்துவதை விட கட்சியின் தலைவராக அவர் மீதுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைத்தே கட்சியின் பலரும் இந்தப் பிரேரணையை வெல்ல வைக்க வேண்டிய முயற்சியில் இறங்கியிருந்தனர். கட்சித் தலைவர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை முயற்சிகளில் இதுதான் முதலாவதும் அல்ல.

கூட்டாட்சியில் இணைந்துள்ள இரண்டு பிரதான கட்சிகளினதும் தலைவர்கள் இருவருக்குமே தத்தமது கட்சிகளில் பெரும்பான்மை விருப்புக் கிடையாது என்பதையே இவை உணர்த்துகின்றன. இந்த வகையில் இரு தலைவர்களுமே தத்தமது கட்சிகளைப் பொறுத்தவரையில் ஜனநாயகப் பொதுவிதியான பெரும்பான்மையின் விருப்பின்படி செயற்படுதல் என்ற ஜனநாயகப் பெறுமானத்தை புறந்தள்ளியே செயற்படுகின்றன.

இவ்வாறான தலைமைகளிடம் ஜனநாயகத்தை எதிர்பார்ப்பது என்பது கேள்விக்குறியாகி வருகிறது. பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சி அதிகார பீடங்களுக்கு வருபவர்கள் பின்னர் தம்மைத் தெரிவு செய்த மக்களின் விருப்புக்கு எதிராகச் செயற்படும் போது அவர்கள் சர்வாதிகாரி வடிவத்தைப் பெறுகிறார்கள். இந்த நிலையில் தாங்கள் விரும்புவதையே மக்கள் மீது திணிக்கின்ற அராஜகத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவர்கள் முயல்வார்கள். அப்போது ஜனநாயகத்தின் அச்சாணியான கட்சிகள் வெளித்தோற்றத்துக்கு இருந்த போதிலும் அதன் உயிர் மூச்சான ஜனநாயகம் அங்கு அடங்கிப் போகிறது.

இலங்கை அரசியலும் இந்த நிலையை நோக்கித் தான் பயணிக்கிறது. கட்சிகளின் தலைவர்கள் எதேச்சாதிகாரப் போக்கில் பயணிக்கின்றதொரு சூழலில் தான் அரசியல் நகர்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தாலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவாக இருந்தாலும் அனைத்துமே தமது தலைவர்களின் தன்னிச்சையான போக்கினாலேயே கொண்டு செல்லப்படுகின்றன.

இந்த ஜனநாயக விரோத செயற்பாடுகள் முதலில் கட்சிகளுக்குள்ளால் களையப்பட வேண்டும். அங்கத்தவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கின்ற, அவர்களை சுதந்திரமாகச் செயற்படவிடுகின்ற நிலைமைக்கு கட்சித் தலைமைகளை மாற்றியமைக்க வேண்டும். கட்சிகள் இருப்பது நாட்டின் ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்காகும். கட்சிகளிலேயே ஜனநாயகம் புதைக்கப்படுமானால் அந்தக் கட்சிகளின் ஊடாக நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த முடியாது.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. 96, கிருள வீதி, கொழும்பு 05
தொலைபேசி 011-5353635
பெக்ஸ் 011-5335500
ஈமெயில் [illegible]
இணையத்தளம் www.pccsl.lk

# முஸ்லிம் அரசியல்: கூர் மழுங்கிய கருவிகள்

• முகம்மது தம்பி மரைக்கார்

''ஒரு மரத்தை வெட்டுவதற்கு, எனக்கு ஆறு மணி நேரம் வழங்கப்பட்டால், அதில் நான்கு மணி நேரத்தைக் கோடாரியைத் தீட்டுவதற்கே பயன்படுத்திக் கொள்வேன்'' என்று ஆபிரஹாம் லிங்கன் சொன்னார்.

எல்லாச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் கருவிகள் தேவையாக இருக்கின்றன. கருவிகள் என்பவை 'ஆயுதங்களாக' மட்டும் இருப்பதில்லை. ஒரு தேர்தலில் வெற்றி பெறுவதற்குப் 'பிரசாரம்' என்பது மிக முக்கியமான கருவியாகும்.

அரசியலில் வெற்றி பெறுவதற்கும், வெற்றிகரமாக அரசியலை மேற்கொள்வதற்கும் கருவிகள் அவசியமாகும். ஆனாலும் அரசியலரங்கில் கணிசமானோர், கூர் மழுங்கிய கருவிகளை வைத்துக் கொண்டுதான், கட்சிகளையும் அதனூடாக அரசியலையும் நடாத்திக் கொண்டிருக்கின்றனர்.



தமிழர்களின் அரசியலில் கூரான கருவிகளே அநேகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இப்போதும், அவர்களின் அரசியல் வெற்றிகரமான திசையில் சென்று கொண்டிருப்பதற்குக் காரணம், கூர்மையான கருவிகளை அவர்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றமை ஆகும்.

நாடாளுமன்றத்தில் த.தே.கூட்டமைப்பு, எதிர்க்கட்சியாக இருந்து கொண்டே, தமது சமூகத்தின் நலனுக்காகப் பல்வேறு விடயங்களைச் சாதித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், ஆளுந் தரப்பில் இருக்கும் நிலையில் கூட, முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளும் அபிலாஷைகளும் நிறைவேற்றப்படாமல் உள்ளமை கவலைக்குரியதாகும்.

குறிப்பாக, அரசாங்கத்தில் இரண்டு முஸ்லிம் கட்சிகள் அங்கம் வகித்துக் கொண்டிருக்கும் நிலையில், முஸ்லிம் சமூகம் அச்சத்துக்குள்ளும் அவமானங்களுக்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கின்றமை, வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

முஸ்லிம் கட்சிகளிடமும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் அரசியலை மேற்கொள்வதற்குரிய கூர்மையான கருவிகள் இல்லை என்பதே இதற்கான காரணமாகும். அரசியல் கருவிகளைத் தேவைக்கேற்றவாறு ஆயுதங்களாகவும் கேடயங்களாகவும் பயன்படுத்தத் தெரிந்த கட்சிகள், தமது சமூகத்தினருக்கு வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

ஆனால், முஸ்லிம் அரசியலரங்கில் அதிகமானோர் தம்மிடமுள்ள கருவிகளால், அநேகமான தருணங்களில் முதுகுகளைச் சொறிந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் கசப்பான உண்மையாகும்.

ஆட்சியாளர்களிடம் பொன் முட்டையிடும் பறவைகளை, தட்டிக் கேட்டுப் பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்களில் எல்லாம், தங்கத்தாலான பிச்சைப் பாத்திரங்களையே அநேகமான சந்தர்ப்பங்களில், முஸ்லிம் அரசியல் கட்சிகள் கேட்டுப் பெற்றுக் கொண்டன என்பதுதான் வரலாறாகும்.

தற்போதைய தேசிய அரசாங்கம், அமைவதற்குப் பெரிதும் காரணமாக சிறுபான்மை மக்களே இருந்தனர். ஆனாலும், அதற்கான பிரதியுபகாரங்களை இந்த ஆட்சியாளர்களிடமிருந்து, முஸ்லிம் சமூகத்துக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு, முஸ்லிம் அரசியல் கட்சிகள் தவறியுள்ளன.

தற்போதைய அரசாங்கத்துக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கும் போதெல்லாம், அதற்குப் பிரதியுபகாரமாகத் தமது சமூகம் சார்பான தேவைகளை, கோரிக்கைகளாக முன்வைத்து, அந்தக் கட்சி, கேட்டுப் பெற்றுக் கொண்டு வருகிறது. ஆனால், முஸ்லிம் கட்சிகளோ, அரசாங்கத்துக்கு ஆதரவாகக் கைகளை உயர்த்தும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சமூகம் சார்பான கோரிக்கைகள் எவற்றையும் முன்வைத்து, வென்றெடுத்ததாகத் தெரியவில்லை.

அண்மையில், மாகாணங்களுக்கான ஆளுநர்கள் ஏழு பேரை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்திருந்தார். அவர்களில் ஆறு பேர் சிங்களவர்கள். வடமேல் மாகாணத்துக்கு ஆளுநராக நியமிக்கப்பட்ட கே.சி. லோகேஸ்வரன் மட்டும் தமிழராவார்.

இந்த நிலையில், முஸ்லிம்கள் எவரும் இலங்கையில் ஆளுநர் பதவியில் தற்போது இல்லை. இது குறித்து, முஸ்லிம் அரசியல் கட்சிகளோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ அக்கறை காட்டுவதாகவும் தெரியவில்லை.

வட மாகாணத்தில் பெரும்பான்மையாகத் தமிழர்கள் வாழ்கின்றமையால், அந்த மாகாணத்துக்கு தமிழர் ஒருவரை ஆளுநராக நியமிக்க வேண்டும் என்று, தமிழர்களின் அரசியல் கட்சிகள் உரத்துக் குரல் கொடுத்து வருகின்றன. ஆனால், அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஆயினும், தமிழர் ஒருவரை வடமேல் மாகாணத்துக்கான ஆளுநராக ஜனாதிபதி நியமித்திருக்கின்றார்.

இந்தநிலையில், முஸ்லிம் ஒருவரை மாகாண ஆளுநராக நியமிக்க வேண்டும் என்பதில் முஸ்லிம் கட்சிகளோ, முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களோ அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்காக முஸ்லிம் கட்சிகளும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கைகளை உயர்த்துகின்ற ஒரு தருணத்திலாவது, 'முஸ்லிம் ஒருவரை மாகாண ஆளுநராக நியமிக்க வேண்டும்' என்கிற நிபந்தனையை ஏன் முன்வைக்க முடியாமல் போனது என்கிற கேள்விக்கு, முஸ்லிம் அரசியல் கட்சிகள் விடை கூற வேண்டும்.

முஸ்லிம் ஆளுநர் ஒருவரை, ஜனாதிபதி நியமிக்கவில்லை என்பது, தற்போது அரசியலரங்கில் பேசுபொருளாக மாறியுள்ளது. ''மேல் மாகாண ஆளுநர் பதவியை, அலவி மௌலானாவுக்கு வழங்கி, முஸ்லிம்களை, மஹிந்த ராஜபக்ஷ கௌரவித்தார் என்பதை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இனவாதியாகச் சித்திரிப்பவர்களுக்கு ஞாபமூட்ட விரும்புகிறேன்'' என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தமை இங்கு அவதானத்துக்குரியதாகும்.

நல்லாட்சி அரசாங்கம், முஸ்லிம்களை கௌரவிக்கவில்லை என்பதை, இதனூடாக நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டி இருக்கின்றார். நடப்புகளைப் பார்க்கின்றபோது, அது பொய்யில்லைப் போல்தான் தெரிகிறது. இலங்கையில், கடைசியாக மாகாண ஆளுநர் பதவியை வகித்த முஸ்லிம், அலவி மௌலானா ஆவார்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த 2002 ஆம் ஆண்டு காலப்பகுதியில், மேல் மாகாண ஆளுநராக அலவி மௌலானா நியமிக்கப்பட்டார். பின்னர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷவும் அலவி மௌலானாவை மேல் மாகாண ஆளுநராக நியமித்தார். அந்தவகையில், 2002 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை, ஆளுநராக அலவி மௌலானா பதவி வகித்தார்.

இதற்கு முன்னர், முஸ்லிம் ஆளுநராக பாக்கீர் மாக்கார் பதவி வகித்தார். 1988 ஆம் ஆண்டு தொடக்கம் 1993 ஆம் ஆண்டுவரை தென் மாகாண ஆளுநராக பாக்கீர் மாக்கார் இருந்தார். முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தருமான இம்தியாஸின் தந்தையாரான பாக்கீர் மாக்கார், சபாநாயகராகவும் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. முஸ்லிம்களில் இவர்கள் இருவர் மட்டுமே மாகாண ஆளுநர்களாகப் பதவி வகித்துள்ளனர்.

தற்போதைய நல்லாட்சி அரசாங்கமானது முஸ்லிம்களின் பேராதரவுடன் அமையப் பெற்றுள்ள போதும், முஸ்லிம் ஆளுநர் ஒருவரை நியமிப்பது தொடர்பில், ஆட்சியாளர்கள் அக்கறை காட்டவில்லை. மேலும், அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் கட்சிகளும், இது குறித்து அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்ததாகவும் தெரியவில்லை. ஆனால், தற்போது நியமிக்கப்பட்டுள்ள ஏழு ஆளுநர்களில், முஸ்லிம் ஒருவர் கூட இல்லை என்பது, முஸ்லிம் சமூகத்துக்குள் ஏமாற்றமானதொரு மனநிலையை ஏற்படுத்தியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

இன்னொருபுறம், இலங்கையில் மாவட்ட அரசாங்க அதிபராகவும் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த எவரும் தற்போது பதவிகளில் இல்லை என்பதும், முஸ்லிம் சமூகத்துக்கு மற்றுமோர் ஏமாற்றமாகும்.

முஸ்லிம் சமூகத்திலிருந்து எம்.எம். மக்பூல் மட்டுமே முதலும் கடைசியுமாக அரசாங்க அதிபராகப் பதவி வகித்தார். யாழ்ப்பாணத்தைச் சொந்த இடமாகக் கொண்ட மக்பூல், மன்னார் அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய பொழுது, 1988 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தமிழர் ஆயுதக் குழுவொன்றால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அரச நிர்வாக சேவையில் முக்கிய பதவிகளை வகித்த பல முஸ்லிம்கள், தமிழர் ஆயுதக் குழுக்களால் ஒரு காலத்தில் மிகத் திட்டமிட்டுக் கொல்லப்பட்டார்கள். அதற்கு முதலில் பலியானவர், முன்னாள் அரசாங்க அதிபர் மக்பூல் எனக் கூறப்படுகிறது. அதே போன்று, வாழைச்சேனையைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர் ஏ.கே. உதுமான், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வை. அஹமட், மூதூர் உதவி அரசாங்க அதிபர் ஏ.சி. ஹபீப் முஹம்மட், குச்சவெளி உதவி அரசாங்க அதிபர் இப்றாஹிம் மற்றும் காத்தான்குடி பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய நற்பிட்டிமுனை பளீல் உள்ளிட்ட பலர், தமிழர் ஆயுதக் குழுக்களால் கொல்லப்பட்டனர்.

மன்னார் அரசாங்க அதிபர் மக்பூல் மரணித்த பிறகு, முஸ்லிம் சமூகத்திலிருந்து எவரும் அரசாங்க அதிபராக நியமிக்கப்படவில்லை. ஆனாலும், அந்தப் பதவிக்கு நியமிக்கப்படக் கூடிய பல முஸ்லிம்கள், இலங்கை நிருவாக சேவை சிரேஷ்ட தரங்களில் இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்காவது முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர்கள் நியமிக்கப்பட வேண்டிய நியாயம் உள்ளமையை மறுக்க முடியாது.

வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களில், தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள மூன்று மாவட்டங்களுக்கு, தமிழர் சமூகத்திலிருந்து மாவட்டச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ரூபவதி கேதீஸ்வரன் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராகவும் நாகலிங்கம் வேதநாயகன் யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகவும் சுந்தரம் அருமைநாயகம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழர் சமூகத்தின் அரசியல் வெற்றியாகவும் இதனைப் பார்க்க முடிகிறது. ஆனால், முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள இரண்டு மாவட்டங்களில் ஒன்றுக் கேனும் முஸ்லிம் ஒருவர் மாவட்டச் செயலாளராக நியமிக்கப்படவில்லை என்பது விசனத்துக்குரியதாகும்.

நாட்டில் 25 நிருவாக மாவட்டங்கள் உள்ளன. எனவே, வீகிதாசார அடிப்படையில் மாவட்டச் செயலாளர்கள் நியமனம் வழங்குவதென்றாலும், 10 சத வீதமாகவுள்ள முஸ்லிம் சமூகத்திலிருந்து ஆகக் குறைந்தது இரண்டு அர சாங்க அதிபர்களேனும் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதிகளால் பரப்பப்படும் முஸ்லிம் பீதி



றவூப் ஸெய்ன்




1915 இல் இடம்பெற்ற கம்பளைக் கலவரத்துக்கான அடித்தளத்தை இட்டவர் சிங்கள மஹா போதி சபையை ஸ்தாபித்த அநகாரிக தர்மபால. கலவரத்திற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அதற்கான பிரச்சாரங்களை அவர் வெற்றிகரமாக முன்னெடுத்தார். இதற்கெனவே அவரது மது ஒழிப்பு இயக்கம் பயன்படுத்தப்பட்டது. தர்மபாலவின் பிரச்சாரம் இரண்டு பகுதிகளில் முனைப்புப் பெற்றிருந்தது. ஒன்று, ஐரோப்பியர்கள் மற்றும் இந்தியத் தமிழர்களுக்கு எதிரானது. இரண்டாவது, இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரானது.

''சிங்கள இனம் ஓர் இணையற்ற இனம். அவர்களது உடலில் அடிமை இரத்தம் ஓடவில்லை. அவ்வினத்தை அழிவுக்காரர்களாலோ பிற மதத்தவர்களான தமிழர்களாலோ அடிமையாக்க முடியவில்லை. கடந்த மூன்று நூற்றாண்டுகளாக இந்நாட்டை அழித்து பௌத்த ஆலயங்களை நாசம் செய்து நூலகங்களைத் தீக்கிரையாக்கி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எம்மினத்தைப் பூண்டோடு ஒழிக்க முயல்பவர்கள் ஐரோப்பியர்கள். மாமிசத்தைப் புசிக்க வேண்டுமென சபிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் தாழ்ந்தவர்கள். சிங்களவர்கள்தான் சிங்கள நாட்டை ஆள வேண்டும்'' (பார்க்க. தர்மபால லிபி) எனக் குரலெழுப்பிய தர்மபால மறுபுறம் முஸ்லிம்களையும் முனைப்பாக இலக்கு வைத்தார்.

''அந்நியரான முஹம்மதியர் ஷைலொக்கிய வழிமுறைகளால் யூதர்களைப் போன்று செல்வந்தர்களாக மாறினர். 2358 வருடங்களாக அந்நிய முற்றுகையிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காக இரத்தத்தை ஆறு போல் ஓட்டி தமது மூதாதையர்களை இழந்த மண்ணின் மைந்தர்களான சிங்களவர்கள் பிரித்தானியர்களின் கண்களில் நாடோடிகளாகவே தென்படுகின்றனர். தென்னிந்திய முஹம்மதியர்கள் இலங்கைக்கு வந்து வியாபாரத்தில் எந்த அனுபவமும் அற்ற கிராமவாசிகளைச் சுரண்டுகின்றார்கள். இதன் விளைவு முஹம்மதியர் முன்னேறுகின்றார்கள். மண்ணின் மைந்தர்கள் பின்னடைகிறார்கள்.'' (பார்க்க. தர்மபால லிபி)

இத்தகைய பிரச்சாரங்களால் வெறியூட்டப்பட்டிருந்த சிங்கள இளைஞர்கள் 1915 கலவரத்தில் முஸ்லிம்களுக்கெதிரான தமது பகையுணர்வைக் கொட்டித் தீர்த்தனர். கலவரத்துக்கான உடனடிக் காரணம் வேறு இருப்பினும் அதற்கான சித்தாந்த அடித்தளத்தை இத்தகைய இனத் தேசியவாதிகளின் பிரச்சாரங்களே ஏற்படுத்தியிருந்தன. அக்காலத்தில் சுதேச வர்த்தகத்திலும் சர்வதேச வணிகத்திலும் முஸ்லிம்கள் பெற்றிருந்த செல்வாக்கைத் தகர்ப்பதற்கு இத்தகைய இனக் கலவரங்கள் தூண்டிவிடப்பட்டன.

தற்போதைய குறிப்பாக 2012 இற்குப் பின்னர் ஏற்பட்ட இனப் பதட்டத்திற்கு ஒற்றைக் காரணத்தைத் தேட முடியாது. கடந்த ஆறு ஆண்டுகளாக முஸ்லிம்கள் குறித்து சிங்கள மக்கள் மத்தியில் பல்வேறு வகையான அச்சங்களும் ஐயங்களும் விதைக்கப்பட்டு வருகின்றன. அவை வெறும் கற்பிதங்கள் என்பதோடு திட்டமிட்டுப் பரப்பப்படுகின்றன என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இத்தகைய அச்சங்களை சிங்கள சிவில் சமூகத்திற்கு அவை வெறும் கற்பிதங்கள் என்பதனை விளக்குவதற்கு முஸ்லிம்கள் முன்வரவில்லை. இது துரதிஷ்டமானது. முஸ்லிம் தலைமைகளின் பலவீனமே இதற்கான காரணமாகும். மறுபுறம் முஸ்லிம்கள் குறித்து இனவாதிகள் பரப்பும் போலிக் குற்றச்சாட்டுக்களையும் அச்சங்களையும் சிங்கள மக்கள் நம்புவதற்கு ஏற்ற சூழல் மாறி வரும் முஸ்லிம் சமூகத்தில் உள்ளதா என்பதும் ஊன்றிக் கவனிக்க வேண்டிய விடயமாகின்றது.

முதலில் நாம் முஸ்லிம்களுக்கெதிராக சிங்களவர்களின் உணர்வலைகளைத் தட்டியெழுப்ப முயலும் இனவாதிகள் தொடர்ச்சியாக முன்வைத்து வரும் போலிக் குற்றச்சாட்டுக்கள் எவை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவற்றை ஒரு பரிமாற்று வசதிக்காக பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

1. நாட்டில் முஸ்லிம் சனத்தொகை அதிகரித்து வருகின்றது. இதனால் 2100 ஆம் ஆண்டில் இலங்கை முஸ்லிம் பெரும்பான்மை நாடாக மாறிவிடும்.
2. சிறுபான்மையாக உள்ள முஸ்லிம்களுக்கு பெருந்தொகையான பள்ளிவாயல்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. அவை மிக ஆடம்பரமாகவும் பெரும் செலவிலும் உருவாக்கப்படுகின்றன.
3. முஸ்லிம்கள் இனவாதம் சார்ந்த அரசியலை முன்னெடுக்கின்றனர்.
4. ஒப்பீட்டு ரீதியில் இலங்கை முஸ்லிம்கள் நாட்டுப்பற்று அற்றவர்களாகவும் சுயநலமிகளாகவும் வாழ்கின்றனர்.
5. பௌத்த கலாசார சின்னங்களையும் தொல்பொருள் சான்றுகளையும் அழித்து வருகின்றனர்.
6. சிங்களவர்களின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்குச் சூழ்ச்சி செய்கின்றனர்.
7. ஹலால் சான்றிதழ் மூலம் சிங்கள பௌத்தர்களின் பணத்தைச் சுரண்டுகின்றனர்.
8. பாரம்பரிய இஸ்லாத்திலிருந்து விலகி தீவிர வாத வஹ்ஹாபிய இஸ்லாத்திற்கு மாறுகின்றனர். இது ஓர் அடிப்படைவாதமாகும்.
9. திட்டமிட்ட வகையில் சிங்களவர்களை இஸ்லாம் மதத்திற்கு மாற்றுகின்றனர்.
10. பள்ளிவாயல்கள் மற்றும் அறபு மத்ரஸாக்களில் தீவிரவாதத்தைப் போதிக்கின்றனர்.
11. நாட்டின் வர்த்தகத்தில் முஸ்லிம்களே ஆதிக்கம் செலுத்துகின்றனர்.
12. முகமூடி போன்ற ஆடைகளை அணிந்து பௌத்த கலாச்சாரத்திற்கு அச்சுறுத்தல் விடுகின்றனர்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களை 1990 களிலிருந்து தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றனர். இவற்றை முன்னெடுக்கும் இனவாத இயக்கங்களின் பெயர்களும் முகங்களும் மாறிவந்துள்ள போதும் பிரச்சாரத்தின் உள்ளடக்கம் ஒன்றாகவே இருக்கின்றது. முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களுடன் தொலைக்காட்சி விவாதத்தில் ஈடுபட்ட கங்கொடவில சோம தேரர் தான் முதல் குற்றச்சாட்டைக் காட்டமாக முன்வைத்தவர். அவர் 2050 ஆம் ஆண்டிற்குள் இலங்கை பெரும்பான்மை முஸ்லிம் நாடாக மாறிவிடும் என்று விஷப் பிரச்சாரம் செய்து வந்தார். இதனை அறிவு பூர்வமாகவும் புள்ளிவிபர ரீதியிலும் பின்னர் நோக்குவோம்.

கங்கொடவில எனும் தனிப்பட்ட மதகுரு ஒருவரோடு பரவலாக்கப்பட்ட விஷப் பிரச்சாரம் பின்னர் பல்வேறு சிங்கள, பௌத்த அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்டது. 1990 களில் 40 சிங்கள பௌத்த இயக்கங்கள் ஒன்றுசேர்ந்து உருவாக்கிய சிங்கள ஆணைக்குழு இதே வகைப் பிரச்சாரத்தை முன்னெடுத்தது. 1997 இல் உருவாக்கப்பட்ட ஆணைக்குழு முன்பாக பேராதெனிய, கொழும்பு, களனி, ஜயவரதனபுர போன்ற பல் கலைக்கழகங்களைச் சேர்ந்த சிங்களக் கல்விமான்களும் பௌத்த பிக்குகளும் கூட முஸ்லிம்களுக்கெதிராகச் சாட்சியமளித்தனர்.

'சிங்கள பூமி புத்ரய' கட்சி இதன் அரசியல் பரிமாணமாக செயற்படத் தொடங்கியது. அதன் தலைவர் ஹரிச்சந்திர விஜயதுங்க ''இலங்கையின் பெரும்பாலான வர்த்தகம் முஸ்லிம்களிடமே உள்ளது. இலங்கையில் இஸ்லாமிய அரசாங்கமொன்றை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகள் திஹாரியில் காணிகளை வாங்கியுள்ளனர். புத்தளத்தில் முஸ்லிம்களின் குடியேற்றம் அதிகரித்து வருகின்றது. அக்குறனை நகரினூடாக சிங்களவர்களின் பூதவுடல்களைக் கொண்டு செல்வது கூட அனுமதிக்கப்படுவதில்லை. கிரிந்திவலை, நிட்டம்புவ நகரங்களில் முஸ்லிம்களின் கடைகள் அதிகரித்து வருகின்றன. 1976 இல் மீரிகமை நகரில் ஒரேயொரு முஸ்லிம்கடையே இருந்தது. தற்போது 56 கடைகள் இருக்கின்றன.'' எனத் தெரிவித்திருந்தார். (திவயின 07.04.1997)


சிங்கள ஆணைக்குழுவின் முதலாவது சுற்றறிக்கை 1997 செப்டம்பர் 17 இல் வெளியிடப்பட்டது. கடந்த 30 ஆண்டுகால இனவாத வரலாற்றில் இவ்வாணைக்குழு ஒரு முக்கிய நிறுவனமாகும். சிங்கள சமூகத்திலுள்ள எல்லாத் தரப்பினரையும் இணைத்த ஒரு வலைப் பின்னலை அது ஏற்படுத்தியது. சிங்கள ஆணைக் குழுவைத் தொடர்ந்து 'சிங்கள வீரவிதான' இயக்கம் உருவாக்கப்பட்டது. அதன் இன்னொரு கிளை இயக்கமாக பயங்கரவாதத்திற்கு எதிரான அமைப்பு முஸ்லிம்களுக்கெதிராகக் களமிறங்கியது.

2000 களில் இனவாதத்தை மூலதனமாகக் கொண்ட அரசியல் இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கிட்டிய எதிர்காலத்தில் அவை அரசியல் கட்சிகளாக மாறி ஆட்சியில் பங்காளர்களாக தம்மைத் தகவமைத்துக் கொண்டன. அதில் ஜாதிக ஹெல உறுமய முக்கியமான இயக்கமாகும். இதன் சித்தாந்த அடிப்படைவாதியாக இருப்பவர் இன்றைய அமைச்சர் சம்பிக்க ரணவக்க என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அவ்வியக்கத்தின் முக்கிய மதகுருவான ஓமல்பே சோபித தேரர் கடந்த வாரமும் முஸ்லிம்களுக்கு அதிக சலுகை வழங்கப்படுவதாகக் கூறியிருந்தார்.

2013 இல் தலையெடுத்த 'பொதுபல சேனா' இன்றைய இனப்பதட்டத்தின் அடிநாதமாக உள்ளது. இதன் மடியில் வளர்ந்த சிங்கள இயக்கங்களான சிங்கள ராவய, ஹெல சிங்கள ஹிரு, ராவண பலய, சிங்கலே, மஹ சொஹொன் பலகாய போன்றன முஸ்லிம் சிறுபான்மையை இலக்குவைத்துச் செயல்படுகின்றன. வெளிப்படையாகப் பெயர்களில் இவை வேறுபட்டாலும் சித்தாந்த உள்ளடக்கத்திலும் முஸ்லிம் விரோதப் பிரச்சாரத்திலும் ஒன்றுபட்டு செயல்படுகின்றன.

இவை சிங்களவர்களுக்கு மத்தியில் மேற்கொண்டு வரும் விஷப் பிரச்சாரம் குறித்தும் முஸ்லிம்கள் குறித்த போலிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் முஸ்லிம் தலைமைகளும், சமூக நிறுவனங்களும் சிங்கள சிவில் சமூகத்திற்கு விளக்கமளிக்க முன்வர வேண்டும். இத்தகைய இனவாதிகளுடன் இவை தொடர்பில் விவாதம் செய்ய வேண்டியதில்லை. ஆனால், பெரும்பான்மை மக்களுக்கு முஸ்லிம்கள் குறித்து நிலவும் ஐயங்களைத் தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. ■

# மீண்டும் முருங்கையேறும் கிரீஸ் பூதம்



எவன்கிரேட் மிதக்கும் ஆயுதத் தொழிற்சாலை மற்றும் பொது நிதியை தவறாகக் கையாண்டமை தொடர்பாக குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கியுள்ள முன்னாள் பாதுகாப்புத் துறை செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ சமீபகாலமாக அரசியல் வட்டாரங்களின் கவனத்தை ஈர்த்து வருகிறார்.

2020 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக கோத்தாபயவை களமிறக்க மஹிந்த அணி தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்நிலையில், கடந்த ஏப்ரல் 10 ஆம் திகதி டெய்லி மிரர் ஆங்கிலப் பத்திரிகைக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் வழங்கியுள்ள நேர்காணலின் முக்கிய பகுதிகள் இங்கு தமிழில் தரப்படுகின்றன.

**★ உங்களைப் பற்றி நிறையப் பேசப்படுகின்றது. அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நீங்கள் இருக்கப் போவதாகக் கூறப்படுகின்றது. உண்மையில் யாரேனும் உங்களை அணுகி வேட்பாளராக இருக்குமாறு வேண்டினார்களா?**

இல்லை. ஆனால், இது பற்றிய பேச்சுக்கள் அடிபடுகின்றன. இதைத் தீர்மானிப்பதற்கு போதுமான கால அவகாசம் உள்ளது. ஏனெனில், தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை ஆண்டுகள் உள்ளன. இதைத் தீர்மானிப்பவர் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷதான். அடுத்த தேர்தலில் களமிறங்கி வெல்வதற்குப் பொருத்தமான வேட்பாளர் யார் என்பதை மஹிந்த ராஜபக்ஷதான் தீர்மானிக்க வேண்டும்.

**★ தற்போதுள்ள சூழ்நிலையில் இந்தப் பணியினை நீங்கள் ஆற்றுவது குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

வேட்பாளராக நிற்பதற்கு மஹிந்த ராஜபக்ஷவைத் தவிர மிகப் பொருத்தமான வேறு எவரும் இல்லை. ஏனெனில், அவருக்கு மக்கள் ஆதரவு, தலைமைத்துவ ஆற்றல், மக்கள் அபிமானம் உள்ளது. போதுமான அனுபவமும் உள்ளது. துரதிஷ்டவசமாக 19 ஆது திருத்தத்தின் பிரகாரம் அவரால் போட்டியிட முடியாது. எனவே நீங்கள் அடுத்த மிகச் சிறந்த நபரைக் கண்டுபிடிக்க வேண்டும். யார் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவைப் பெறுகிறாரோ அவரால் வெற்றி பெற முடியும்.

**★ உங்களைக் களமிறக்குவதனால் நீங்கள் தயாராக உள்ளீரா?**

முன்னாள் ஜனாதிபதி அப்படிச் சிந்தித்தால் நான் கண்டிப்பாகப் போட்டியிடுவேன். வேட்பாளராக நான் முன்வருவேன். என்னால் அதைச் செய்வதற்கான ஆற்றல் உண்டு என நம்புகின்றேன்.

**★ நீங்கள் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டிருப்பது இதற்குத் தடையாக இருக்குமல்லவா?**

ஆம், மீண்டும் 19 ஆவது திருத்தத்தின்படி இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவருக்கு தேர்தலில் குதிக்க முடியாது. ஆனால், முன்னாள் ஜனாதிபதி என்னைத் தெரிவுசெய்தால் இரட்டைப் பிரஜாவுரிமையை நான் ரத்துச் செய்வதற்குத் தயாராக உள்ளேன்.

**★ சமீபத்தில் கண்டியில் நடந்த இன வன்முறைகள் குறித்து உங்களுடைய அபிப்பிராயம் என்ன?**

கண்டியில் மட்டுமன்றி, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெறும் சம்பவங்களைப் பார்த்தீர்களென்றால், இன்று [illegible] எல்லா இடங்களிலும் பரவியுள்ளன. சட்டத்தின் ஆட்சியில் ஒரு தெளிவான பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அதுதான் இன வன்முறைகளுக்கான பிரதான காரணம்.

கண்டி கலவரங்களைப் பொறுத்தவரை மிக விரைந்து செயற்பட்டிருந்தால் அவற்றைத் தடுத்திருக்கலாம். நான் அறிந்த வகையில் இப்பிரச்சினை இரண்டு தரப்பாருக்கிடையில் நடந்தது. முதல் சம்பவம் இடம்பெற்று ஒருவர் இறந்து அடுத்த சம்பவம் தொடங்குவதற்குள் ஒரு வார காலம் இடைவெளி இருந்தது. எனவே அரசாங்கம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று நான் நினைக்கின்றேன். இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றால் முதல் தரப்பிலிருந்து எதிர்வினைகள் ஏற்படும் என்பதை யாருக்கும் எதிர்பார்க்கலாம். அரசாங்கம் அவற்றை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**★ இந்த அனர்த்தம் குறித்து புலனாய்வுத் துறை அதிகாரிகள் செயல்படத் தவறிவிட்டனர் என்று சிலர் கூறுகின்றனர். அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**

அவர்கள் பொலிஸ் புலனாய்வுப் பிரிவைத்தான் குறிப்பிடுகிறார்கள் என நினைக்கின்றேன். ஏனெனில், இது ஏனைய புலனாய்வுப் பிரிவுக்கு உட்பட்ட விடயமல்ல. எங்களது ஆட்சிக் காலத்தில் எங்களிடம் சிறந்த புலனாய்வுப் பிரிவு இருந்தது. இதுபோன்ற சூழ்நிலைகளை நாம் சிறப்பாகக் கையாண்டோம். இங்கு பொலிஸ் புலனாய்வுத் துறை அதிகாரிகள் செயற்படவில்லை என்றால் அரசாங்கமே அதற்காக குற்றம் சாட்டப்பட வேண்டும்.

இந்த அரசாங்கம் புலனாய்வுப் பிரிவின் பணிகளை குறைத்து மதிப்பிடுகின்றது. இது தொடர்பான பல சம்பவங்கள் நடந்துள்ளன. புலனாய்வுப் பிரிவின் செல்வாக்கு குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது. அதனால்தான் அவர்கள் பலவீனமாக அல்லது பொடுபோக்காகச் செயல்படுகின்றனர். (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிங்கள மக்களுக்கு இஸ்லாம் பற்றிய தெளிவைக் கொடுப்பதே தற்போதைய பிரச்சினைக்கான தீர்வு

(கடந்த இதழின் தொடர்)

முஸ்லிம்களது வியாபார நிலையங்கள் மற்றும் முஸ்லிம்களது வழிபாட்டுத்தளங்கள் பலவற்றுக்கு தீ மூட்டியதன் பின்னரும் கூட இஸ்லாம் தொடர்பில் சிங்கள மக்களுக்குத் தெளிவூட்டுவதற்கு முஸ்லிம்களிடம் உள்ள பணம், உழைப்பு, வளங்களைச் செலவு செய்வதற்கு முயற்சிப்பது எவ்வாறிருப்பினும், சிங்கள மக்களை தன்சல் அன்னதான நிகழ்வுக்கு அழைப்பதன் மூலமும், பௌத்த தேரர்களுக்கு உபசரிப்பதனாலும், சிங்கள மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வைப்பதனாலும் அவர்களது உள்ளங்களை மாற்றி, எமது தேவைகளுக்கு ஏற்ற வகையில் மென்மேலும் இந்த நாட்டில் சுதந்திரமாக வாழ்வதற்கான சான்றிதழை பெற்றுக் கொள்ள முடியும் என்று முஸ்லிம்கள் நம்புகிறார்கள்.

முஸ்லிம்கள் உடனடியாக சிங்கள மக்கள் மத்தியில் இஸ்லாத்தை பிரசாரப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்வதே தற்போது ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை மாற்றுவதற்கு ஒரே மாற்றீடாக உள்ளது. நிச்சயமாக அது பாரதூரமான சவாலாக அமையும் எனினும் இஸ்லாம் மதத்தை பிரசாரப்படுத்துவதன் மூலம் சிலர் இஸ்லாத்தை தழுவும் வாய்ப்பு உள்ளதுடன், முஸ்லிம்கள் தங்களது பொறுப்புக்களை சரியாக நிறைவேற்றாத பொழுது இஸ்லாம் மதத்தை தழுவிய சில நபர்களால் இஸ்லாமியப் பிரச்சார நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படும்.

ஒரு முஸ்லிம் முகம்கொடுக்கின்ற எந்தவொரு கவலையான சந்தர்ப்பத்திலோ அல்லது பிரச்சினையின் போதோ அவர்களுக்கு சரியான வழியைக் காண்பிக்கின்ற ஒரே வழிமுறை அல்குர்ஆனும், ஸுன்னாவுமாகும். பெரும்பாலான நபர்கள் வெள்ளிக்கிழமை ஜும்ஆ பிரசங்கத்தின்போது அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் அடிப்படையாகக் கொண்டு தீர்வுகளை வழங்குவதற்குப் பதிலாக அவரவர் அறிவை மையமாகக் கொண்டு தீர்வுகளை வழங்கி வரும் நிலையைக் காண முடிகிறது. ஊடகங்களால் மாத்திரமே அதனைத் தீர்க்க முடியும் என ஒரு சிலர் தெரிவிக்கின்றனர்.

அல்லாஹ் மீது மாத்திரமே நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். எமக்கான பாதுகாப்பையும் வெற்றியையும் அல்லாஹ்விடமிருந்து மாத்திரமே பெற முடியும். அல்லாஹ்வின் விருப்பமின்றி ஒருபோதும் எந்தவொரு விடயமும் இடம்பெறாது. இஸ்லாத்துக்கும் அதற்கு எதிராக நிற்பவர்களுக்கும் இடையில் ஏற்படுகின்ற மோதல்களுக்கான காரணம் என்ன என்பதை அல்குர்ஆன் எமக்கு தெளிவுபடுத்தியுள்ளது. பனூ இஸ்ரவேலர்களுக்கு தாக்குதல் நடாத்துவதற்கு அல்லாஹ்வினால் மனிதர்கள் அனுப்பப்பட்டமைக்குரிய காரணங்கள் என்ன? அது தொடர்பில் அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் என்ன?

மக்களுக்கு நல்வழியைக் காண்பிப்பதற்கு தௌராத் வேதத்தை இறக்கி, அல்லாஹ்வை வழிபட வேண்டியது எப்படி என்பது குறித்தும், இஸ்லாத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சக்திகளுக்கு எதிராக போராடி இஸ்லாமிய சட்டத்தை ஸ்தாபிக்கும் பொறுப்பு குறித்தும் பனூ இஸ்ரவேலர்களுக்கு அல்லாஹ் தெளிவுபடுத்திக் காட்டினான். எனினும் அவர்கள் அப்படி நடந்துகொள்ளாமல், அல்லாஹ்வினால் தங்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றாமல், அல்லாஹ்வினை நிராகரித்தமையினால் அவர்களுக்கு தொடர்ந்தேர்ச்சியாக தண்டனைகளை இறக்கியதாக ஸூரா பகராவில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி, நாமும் எம்மிடம் உள்ள குர்ஆன், ஸுன்னாவை ஒதுக்கி எம்மால் இஸ்லாத்திற்காக வேண்டி உயிர் உடைமைகள் தியாகம் செய்யப்படாமல், பனூ இஸ்ரவேலர்களைப் போன்று சுயமாகவும் (Own View) சிதைந்து போன பகுத்தறிவுப் பார்வையிலும் (Distorted Rational View) நடந்துகொள்வதின் மூலம் பனூ இஸ்ரவேலர்களுக்கு நடந்தவைகள் எமக்கும் உரித்தாகி விடும்.

பிறிதொரு சமூகம் எமது சமுதாயத்தை ஆக்கிரமித்துவிடும் (Replace) காலம் வெகுதொலைவில் இல்லை. இதனால் இலங்கையில் வாழும் சகல முஸ்லிம் ஆராய்ச்சியாளர்களும் அல்குர்ஆன், ஸுன்னாவை ஆராய்வது தொடர்பில் மிகுந்த ஈடுபாடு கொள்ள வேண்டும் என்பதுடன், அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் அடிப்படையாகக் கொண்டு இந்தப் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது குறித்தும் அவர்கள் ஆராய வேண்டும்.

உதாரணத்திற்கு தனது உயிர் மற்றும் உடைமைகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பில் அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது நீங்கள் உயிரிழந்தால் உங்களுக்கு ஷஹீத் (அல்லாஹ்வுக்காக வேண்டி உயிர் நீத்தவர்) அந்தஸ்து கிடைக்கும்.

| கேகாலை மாவட்டம் | |
|---|---|
| வரக்காபொல பிரதேச சபை | |
| 09 வரக்காபொல ✱ | முகமத் புஹாரி முகமத் ஷெரீப் |
| கேகாலை பிரதேச சபை | |
| பட்டியல் | முஹம்மத் இம்தியாஸ் காதர் |
| ரம்புக்கன பிரதேச சபை | |
| பட்டியல் | முகமத் முஸம்மில் பவ்ஸுல் அஸ்மியா |
| மாவனெல்ல பிரதேச சபை | |
| 06 ஹிங்குல் ஓயா | அப்துல் காதர் உடயார் முகமது அஸ்கர் |
| 07 மஹவத்த | குன்சி மரிக்கார் அமானுல்லா |
| 12 கிரிங்கதெனிய | முஹம்மது மஹ்ரூப் அப்துல் கஃப்பார் |
| 14 உயன்வத்த | முஹம்மது முஸ்தபா முஹம்மது ஃபைசல் |
| 21 கின்ஹப்பிட்டி | முஹம்மது ரசீத் லெப்பே முஹம்மது இஸ்மாயில் ரீஸா |
| 23 மடுல்போவ | முஹம்மது சாலி முகமது சரீபு |
| பட்டியல் | முகம்மது சாலி முகம்மது காமெல் |
| | முஹம்மது ரபீக் முகம்மது அசாம் |
| | சரைதீன் மரிக்கார் முஹம்மது நஃபீர்கான் மரிக்கார் |
| அரநாயக பிரதேச சபை | |
| 11 ஹபலக்கவ | முஹம்மத் சுபியான் ரிபாய் |
| புளத்கொஹுபிட்டிய பிரதேச சபை | |
| பட்டியல் | அப்துல் ரஹீம் ரலீனா உம்மா |
| ருவன்வெல்ல பிரதேச சபை | |
| 04 பெத்தங்கொட ✱ | தாஜுதீன் முகமது ஷிஹாம் |
| பட்டியல் | மொஹமட் நியாஸ் பத்தீமா சானாஸ் |
| தெஹியோவிட்ட பிரதேச சபை | |
| 03 கலேகம | மொஹமட் மஹ்ரூப் மொஹமட் ஃபர்ஹான் |
| பட்டியல் | அப்துல் ரசாக் அன்சார் முகமது சரூக் |
| | |

| புத்தளம் மாவட்டம் | |
|---|---|
| புத்தளம் நகர சபை | |
| 01 புத்தளம் மத்தி | கமர்தீன் அப்துல் பாயிஸ் |
| 02 மணல் குன்று | முகம்மது அன்வர் முகமது அஸ்கின் |
| 03 புத்தளம் கிழக்கு | முகமது சாலிஹு முகமது ரபீக் |
| 04 நெடுங்குளம் | முகம்மது ஹனிஃபா முகமத் ரஸ்மி |
| 05 புதுக்குடியிருப்பு | புஹாரி முஹம்மத் பர்வின் |
| 06 லாகூன் இடம் | பதுர்தீன் மொஹமட் ரிப்ராஸ் |
| 07 புத்தளம் வடக்கு | ஆரிஃப் முகமட் சிஹான் |
| 11 தில்லையடி தெற்கு | ஜனாப் முகமது தில்ஷான் |
| பட்டியல் | முகம்மது இல்லியாஸ் ஜெமீனா |
| | முகம்மது அப்துல் ரஹீம் அலி சப்ரி |
| | முகம்மது தாஹா நூருல் அமீன் |
| | நிசாம்தீன் முகம்மது ஃபிர்ஸில் |
| சிலாபம் நகர சபை | |
| 07 இச்சம்பிட்டி | அப்துல் வஹாப் சாதிகுல் அமீன் |
| கல்பிட்டி பிரதேச சபை | |
| 01 பல்லியவட்ட | அஹமத் ஜலால் முகமத் தாரிக் |
| 02 அனவாசல் | உவைஸ் மரைக்கார் முகமத் அக்மல் |
| 03 மண்டலகுடாவ | அபூபக்கர் முகம்மது இன்பாஸ் |
| 04 கன்டல்குளி ✱ | முகம்மது அப்துல் ரசாக் மரிகார் முகம்மது பவ்சான் |
| 05 மசுபிட்டிய | நெய்னா மொஹமட் லெப்பெ முகமது அலி |
| 07 ஏத்தாலை | அப்துல் கரீம் சலாஹுதீன் |
| 08 நுரைச்சோலை ✱ | அப்துல் வஹாப் முகமது சபீர் |
| | அப்துல் மஜீத் நஜிபுதீன் |
| 12 விருதோடை | முஹம்மத் இப்ராஹிம் முகமது ஆஸிக் |
| 14 கடயாமோட்டை | கதீர் மரிகார் முகமது ஃபைசர் |
| 16 கொத்தாந் தீவு | சேஹு அப்துல் காதர் அஹமத் சாதி |
| பட்டியல் | ஹஸீம் மரைக்கார் முகமது சிபான் |
| | அப்துல் ரசீட் ரெஸ்மினா |
| | அப்துல் ராயிது முகமது ரஸாக் அமீன் |
| | முகமது மொஹிதீன் பாத்திமா முஜிஃபா |
| | நைனா முகம்மது முகம்மது ஹிஸாம் |
| புத்தளம் பிரதேச சபை | |
| 01 முல்லைபுரம் | அஹமத் ஜலீல் முகமது ரிபாய் |
| 08 ரத்மலானா | முகமது நசீர் முகமத் ரிஃபாஸ் |
| 10 பொத்துவில் | சதக்கத்துல்லா முகமது ரிஜாஜி |
| பட்டியல் | முகம்மது பூட்டோ பாத்திமா பஸ்லியா |
| | முகம்மது ஜலீல் பாத்திமா இல்மா |
| வண்ணாத்திவில்லு பிரதேச சபை | |
| 01 ரால்மடுவை | நாகூர் பக்கீர் அப்துல் முனாப் |
| 04 காரைதீவு தெற்கு | சாஹுல் ஹமீத் முகமது இப்ராஹிம் |
| 05 காரைதீவு | ஹமீது ஹுஸன் முகமது நஃபீல் |
| 10 வட்டக் கண்டல் | அப்துல் மஜீத் அனஸ்தீன் |
| பட்டியல் | அப்துல் ரகுமான் அப்துல் சமான் |
| ஆனமடுவை பிரதேச சபை | |
| 15 மதவாக்குளம் | ஐதுரூஸ் முஹம்மத் |
| ஆரச்சிக்கட்டுவை பிரதேச சபை | |
| 01 ஆண்டிமுனை புளிச்சாக் குளம் ✱ | சேகுதாவூத் நஜிமுதீன் |
| சிலாபம் பிரதேச சபை | |
| 16 மரக்கலகம | முகம்மது ஹஸீம் முகமது தாஸ்னிம் |
| நாத்தாண்டிய பிரதேச சபை | |
| 20 கொட்டாரமுல்ல | அப்துல் சமீன் முகம்மது ரில்வான் |
| | |

• மிகுதி அடுத்த இதழில்...

| கம்பஹா மாவட்டம் | |
|---|---|
| நீர்கொழும்பு மாநகர சபை | |
| 01 கம்மல்துறை | மொஹமட் நசீர் நஸ்மின் ரோஸ் |
| 03 பல்லன்சேனா தெற்கு | மொஹமட் தாசிம் மொஹமட் நஸ்மீர் |
| 16 ஹுனுபிடிய | மொஹமட் அன்சார் சைனுல் ஃபாரிஸ் |
| பட்டியல் | முகமது பபர்டீன் முகம்மது இஷான் |
| | முகமது ஹூசைன் முகமது ஹாரிஸ் |
| வத்தளை மாபோல நகரசபை | |
| 02 வெலிகடமுல்ல ✱ | தாஹீர் மொஹமட் ரிஸான் |
| பட்டியல் | ஹுசைன் முகமத் நவ்ஸாத் |
| | மொஹமட் ஸுவர் அப்துல் ரஹீம் |
| மினுவங்கொட நகர சபை | |
| 06 மினுவங்கொட மத்தி ✱ | மொஹமட் முனாஸ் மொஹமட் ரிஃபாஸ் |
| வத்தளை பிரதேச சபை | |
| பட்டியல் | பிரிஹான் இஸ்மாஈல் ஆப்தீன் |
| மீரிகம பிரதேச சபை | |
| 20 ஹன்சகிரிய | மொஹமட் ரஷீத் அஹமத் பைஸ் |
| மினுவங்கொட பிரதேச சபை | |
| பட்டியல் | அப்துல் கரீம் அப்துல் கஃப்பார் |
| அத்தனகல்ல பிரதேச சபை | |
| 11 திஹாரிய ✱ | மொஹமட் சமீன் மொஹமட் அப்ராஷ் |
| | மொஹமட் பலீல் மொஹமட் நவாஸ் |
| 24 கஹடோவிட | மொஹமட் அஸீம்தீன் மொஹமட் நஜிப்டின் |
| பட்டியல் | முகமது ஹனீஃபா முகமது நிளௌபர் |
| | மொஹமட் ரஸக்தீன் மொஹமட் இன்ஷாப் |
| | முகம்மது தவுபீக் மொஹமட் இர்ஷான் |
| | முகமது ரஹீம் முகமத் ரஸீம் |
| மகர பிரதேச சபை | |
| 31 எண்டேரமுல்ல 1 ✱ | முகம்மது மூஸின் சைபுல் ஹாரிஸ் |
| பியகம பிரதேச சபை | |
| 31 மல்வான | அப்துல் காதர் ஹனிஃபா மொஹமட் அன்வர் |
| 32 வல்கம கிழக்கு | மொஹமட் அவுண் மொஹமட் இர்பான் |
| பட்டியல் | சேக் மதார் செய்யது ஹசன் |
| களனி பிரதேச சபை | |
| 01 ஹுனுபிட்டிய வடக்கு ✱ | மொஹமட் இப்ராஹிம் மொஹமட் ஹனிபா |
| | |

| வவுனியா மாவட்டம் | |
|---|---|
| வவுனியா நகர சபை | |
| 02 மெதவச்சி - புளியங் குளம் ✱ | முகம்மது ஷரீஃப் அப்துல்பாரி |
| | அப்துல் ரசூல் முகமது லாரீஃப் |
| பட்டியல் | பதுர்தீன் முகமது ஃபாயீஸ் |
| வெங்கலச்செட்டிக்குளம் பிரதேச சபை | |
| பட்டியல் | நாகூர் மாஹிர் |
| வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை | |
| 06 சாலம்பைக் குளம் ✱ | கத்தமரைக்கார் அப்துல் ரஹீம் |
| | நாகூர் பிச்சை ஜவாஹிர் |
| | |

| மன்னார் மாவட்டம் | |
|---|---|
| மன்னார் நகர சபை | |
| 06 உப்புக்குளம் ✱ | நிலாமுதீன் நஹூசீன் |
| | அப்துல் முகமத் யூசுப் உவைசுல் கர்னி |
| மன்னார் பிரதேச சபை | |
| 02 தலைமன்னார் கிழக்கு | செய்யது அலி முகமது நயீம் |
| 06 சிறுதோப்பு | அப்துல் கரீம் முகமது ராஸிக் |
| 07 புதுக்குடியிருப்பு | சாஹுல் ஹமீத் முகமது முஜாஹிர் |
| 08 எருக்கலம்பிட்டி | முகம்மது இஸ்மாயில் முகம்மது இஸ்ஸதீன் |
| 10 தாராபுரம் | அப்துல் ஹமீத் முகமது உவைஸ் |
| பட்டியல் | அப்துல் ஜபார் மகீஸா |
| | அபூபக்கர் தர்ஸீன் |
| | ஜீலீது இன்சாப் |
| நானாட்டான் பிரதேச சபை | |
| பட்டியல் | நாகூர் மீரா ராஸிக் ஃபரீத் |
| முசலி பிரதேச சபை | |
| 03 பண்டாரவேளி | அப்துல் ரசீது முகமது ரஸ்மின் |
| 04 புதுவெளி | அப்சுல் ஜஹாஹிம் முகமது இஷான் |
| 05 சிலாவத்துறை | முஹூசின் ரைஸூதீன் |
| 06 அகத்திமுறிப்பு கூலன் குளம் | மீரா மொஹிதீன் தாஜீதீன் |
| 07 பொற்கேணி | ஜபருல்லாக்கான் ஃபாயிஸ் |
| 08 மருதமடு வேப்பங்குளம் | செய்யது மொஹைதீன் முகமது ஃபைரூஸ் |
| 09 கொண்டச்சி | அப்துல் கபூர் கலிபத் சூஃபிஹான் |
| 10 பாலக்குளி | கப்பமரிக்காயர் இக்பால் |
| பட்டியல் | கலீலுல்லாஹ் தஸ்னீமா |
| | அப்துல் ரஹிம் ஹாஜிதா |
| | சேகு சுல்தான் முகமது ஜமீல் |
| | அனிஃபூ மக்பூல் |
| | அப்துல் காதர் துல்ஃபிகார் |
| மாந்தை மேற்கு பிரதேச சபை | |
| 03 பெரியமடு | அப்துல் காதர் நவ்ஃபீல் |
| 04 விடத்தல்தீவு ✱ | அப்துல் ஹமீட் சானூஸ் |
| | முஹமட் ஹலீல் முகமத் அதீர் |
| 08 வத்தக் கண்டல் ✱ | முகம்மது நாசர் நைசர் |
| 11 காக்கயன் குளம் | செய்னுலாப்தீன் மரிக்கார் சபீல் |
| பட்டியல் | முகம்மது ஹனிஃபா முகமத் தௌஃபீக் |
| | நசூரதீன் ரம்சியா |
| | பக்கீர மொகிதீன் முகமது வாபிர் |
| | அப்துல் அஸீஸ் முகமட் சில்ஜி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி



# “பெரும்பான்மைக் கட்சிகளை நாம் இனி மேலும் நம்பத் தயாரில்லை”

மஸாஹிம் முஹம்மத் – மேயர், பேருவலை நகர சபை

- **தற்பொழுது நீங்கள் பேருவலை நகர சபையின் மேயராக தெரிவுசெய்யப்பட்டுள்ளீர்கள். உங்களது அடுத்த கட்ட நகர்வுகளை எவ்வாறு முன்னெடுக்கவுள்ளீர்?**

பேருவலை நகர சபைக்கு உட்பட்ட பகுதியில் 80 வீதமான முஸ்லிம் வாக்காளர்கள் உள்ளனர். இதுவரை காலமும் ஐக்கிய தேசியக் கட்சியே இங்கு வெற்றியீட்டி வந்தது. ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய நான் இரண்டு தடவைகள் மேயராகவும், இரண்டு தடவைகள் எதிர்கட்சித் தலைவராகவும் இருந்துள்ளேன். கடந்த தடவையும் நான் எதிர்க்கட்சித் தலைவராகவே செயற்பட்டேன். கட்சி பேதங்களின்றி சகல மக்களுக்கும் சேவையாற்றுவதே எமது குறிக்கோள்.

தற்பொழுது பேருவலையில் சுமார் 16 வீதிகள் காபட் இட்டு அபிவிருத்திசெய்யப்பட வேண்டியுள்ளன. மருதானை, மாளிகாஹேன, மஹகொட போன்ற பகுதிகளில் உள்ள வீதிகள் திருத்தப்பட வேண்டியுள்ளன. பேருவலை நகர சபைக்கு உட்பட்ட மித்திமிராஜவெல நீரோடை மாசடைந்து துர்வாடை வீசும் நிலையிலுள்ளது. முன்னர் இந்த நீரோடையில் மக்கள் குளித்தார்கள். இந்த நீரோடையையும் துப்புரவு செய்து அபிவிருத்தி செய்ய வேண்டும். சில மக்கள் இந்தப் பகுதியிலுள்ள கால்வாய் வீதிகளை பிடித்து வீடுகளை கட்டிக் கொண்டுள்ளார்கள். சிறியதொரு மழை பொழிந்தாலும் இந்தப் பிரதேசமே நீரில் மூழ்கிவிடும். எனவே இந்த நீரோடைப் பகுதிகளில் நீர் முறையாக வழிந்துசெல்லும் வகையில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

48 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பெலஸ் பாத் வீதியைக் கடந்த தினம் நாம் திறந்துவைத்தோம். 100 லட்சம் ரூபா செலவில் அரப் வீதியும் காபட் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான பணிகளை மேற்கொள்வதற்காக வேண்டியே மக்கள் இம்முறை எனக்கு வாக்களித்துள்ளனர்.

சுயேட்சைக் குழுவொன்றில் போட்டியிட்டு வெற்றி பெறுவதென்பது இலகுவான விடயமல்ல. என் மீது நம்பிக்கை வைத்து மக்கள் 11,000 வாக்குகளை தந்துள்ளார்கள். முழு இலங்கையிலும் எடுத்துக் கொண்டால் தற்பொழுது நாங்களே முதன் முதலாக வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம்.

- **இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுயேற்சைக் குழுவில் போட்டியிட்டமைக்கான மிக முக்கிய காரணம் என்ன?**

பேருவலை தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராக இப்திகார் ஜெமீலை நாமே தேர்ந்தெடுத்தோம். ஆரம்பத்தில் இவர் சுதந்திரக் கட்சியில் இருந்தார். ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து 4 வருடங்களிலேயே அவருக்கு அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டது. அவர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து ஒரு வருடத்திலேயே மாகாண சபையில் போட்டியிடும் எனது வாய்ப்பை அவருக்கு வழங்கினேன். ஆனால் அவர் அந்தத் தேர்தலில் தோல்வியைத் தழுவினார்.

கடந்த முறை மாகாண சபைத் தேர்தலில் நானும், இம்தியாஸ் பாக்கிர் மாக்காரும் இணைந்தே அவரை வெல்லச் செய்தோம். கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது பேருவலை, பத்தயில் ஒரு தேர்தல் மேடையில் நான் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரை பற்றிப் பேசிய போது அவரைப் பற்றி இங்கு பேச வேண்டாம் என எனக்கு விரல் நீட்டிக் கொண்டு வந்தார்.

பேருவலையில் ஐக்கிய தேசியக் கட்சி மேடையில் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரைப் பற்றிப் பேசாமல் வேறு யாரைப் பற்றி பேசுவது? அவர்கள் வெற்றி பெற்றவர்களைப் போல் மமதையுடன் செயற்பட்டார்கள். அதனாலேயே இன்று இந்த அவல நிலையை அனுபவிக்கிறார்கள்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் இப்திகார் ஜெமீல் 1050 வாக்குகளால் தோல்வியைத் தழுவிக் கொண்டார். எனது ஆதரவாளர்கள் அவருக்கு வாக்களிக்கவில்லை. இதனால் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எனக்கு வேட்புரிமை வழங்கப்படவில்லை. வேட்புரிமை வழங்கப்படாவிட்டால் பன்றியின் சின்னத்திலாவது உங்களை நாம் வெற்றிபெறச் செய்வோம் என்று எனது ஆதரவாளர்கள் எனக்குக் கூறினார்கள்.

இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ராஜித சேனாரத்ன 6 கோடி ரூபாவுக்கு மேல் செலவுசெய்துள்ளார். பாராளுமன்றத் தேர்தலிலாவது அவர் அப்படிச் செலவழித்திருக்க மாட்டார். பேருவலையில் ராஜிதவை தோற்கடிப்பது என்பது மிகப்பெரும் சவாலாகும். அவரது சக்தியை தோற்கடித்தோம் என்றால் எங்களுடன் எப்படிப்பட்ட சக்தியொன்று உள்ளதென்பதை விளங்கிக்கொள்ள வேண்டும்.

- **அளுத்கம சம்பவத்தை தொடர்ந்து மக்கள் ஆளும் தரப்பின் மீதும் கடந்த ராஜபக்ஷ அரசின் மீதும் அதிருப்தியுற்றிருக்கும் நிலையில் உங்களது சுயேற்சைக் குழுவால் எவ்வாறு இந்த வெற்றியை பதிவுசெய்ய முடிந்தது?**

உண்மையிலேயே இது சவாலானதொரு விடயம். இந்தப் பகுதியிலுள்ள பெரும்பாலான மக்கள் ஐ.தே.க. ஆதரவாளர்களாகவே இருந்தனர். எனினும் எப்போது சுயேட்சைக்கு மாறினேனோ அன்றிலிருந்து பெரும்பாலான மக்கள் எனக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்தார்கள். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலிலும், பாராளுமன்றத் தேர்தலிலும் போட்டியிடுங்கள், நாங்கள் வாக்களிக்கிறோம் என மக்கள் கூறுகிறார்கள்.

நாங்கள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டால் உண்மையிலேயே எமக்கு பாராளுமன்றம் செல்ல முடியும் என நான் நம்புகிறேன். பெரும்பான்மைக் கட்சிகளை நாம் இனிமேலும் நம்பத் தயாரில்லை. நம்புவதில் எவ்வித பிரயோசனமுமில்லை. ஐ.தே.க., ஐ.தே.க. என்று செத்தோம். ஆனால் கண்டி, திகன பிரதேசத்தை தாக்கிய வேளையில் ஐக்கிய தேசியக் கட்சி எங்களுக்கு எதைச் செய்தது? திகன கலவரத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்து பிணையும் வழங்கியுள்ளார்கள். எனவே அங்கு உரிய முறையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மைத்திரி, ரணில், மஹிந்த என எவருமே சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை. இனிமேலும் நாம் இவர்களை எப்படி நம்புவது?

- **இந்தப் பகுதி மக்கள் எதிர்கொள்ளும் மிக முக்கிய பிரச்சினைகளை குறிப்பிட முடியுமா?**

டெங்கு நோய்த் தொற்று, மின்சாரப் பிரச்சினை, வீடில்லாப் பிரச்சினைகள் என இந்தப் பிர தேசத்து மக்கள் எதிர்கொண்டு வருகிறார்கள். ஒரு வீட்டைக் கட்டுவதற்கு சட்டபூர்வமாக 6 பர்சஸ் காணி வழங்கப்பட வேண்டும். ஆனால் இந்தப் பகுதியிலுள்ள பெரும்பாலான மக்களுக்கு 6 பர்சஸ் காணி இல்லை. உதாரணத்திற்கு ஒரு குடும்பத்தில் 3 பெண் பிள்ளைகள் இருந் தால் ஒருவருக்கு தலா 2 வீதம் 6 பர்சஸ் என்றே வழங்கப்படும். 2 பர்சஸில் வீடு கட்டுவதற்கு விஷேட அனுமதியொன்றை நகர சபை மேயரிடம் பெற வேண்டும்.

எல்லா மேயர்களும் இந்த அனுமதியை வழங்க மாட்டார்கள். ஏதும் பிரச்சினைகள் வந்தால் மேயரே பொறுப்புச் சொல்ல வேண்டும். ஆனால் நாம் கஷ்டப்பட்டு அதற்கான அனுமதியை வழங்குகிறோம். இவற்றை மக்கள் எம்மிடம் எதிர்பார்க்கிறார்கள். நகரசபை பிரதேசத்திற்குட்பட்ட வீதியிலுள்ள கம்பங்களில் பொறுத்தப்பட்டுள்ள வீதி விளக்குகளை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். கால்வாய்களை துப்புரவு செய்யும் பணியையும் முன்னெடுத்துள்ளோம்.

- **சுற்றுலாத்துறை உள்ளிட்ட மாணிக்கக் கல் வர்த்தகத் துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஏதும் முன்னெடுக்கப்பட்டுள்ளனவா?**

பேருவலை துறைமுகத் திடலை சுத்தம் செய்து அலங்கரிக்கும் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். இலங்கையில் சுற்றுலாத் துறைக்கு பெயர் பெற்ற இடமே பேருவலை. தற்பொழுது அது படிப்படியாக அருகி வருகிறது. மாணிக்கக் கல் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான Jem Market சந்தையொன்றை அமைப்பதற்கு 10 ஏக்கர் காணியை வழங்கி அதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம்.

- **இதுபோன்ற அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தின் உதவிகளை பெற்றுக்கொள்வதில் ஏதும் தடங்கல்கள் காணப்படுகின்றதா?**

எமக்கு சகலரது உதவிகளும் உள்ளது. எம்மிடம் பணம் உள்ளது. மக்களின் உதவியும் உள்ளது. அரசாங்கத்தின் உதவியும் உள்ளது. நாம் சுயேட்சை என்ற படியால் எதிர்க்கட்சிகளது உதவியும் உள்ளது. இலங்கையில் ஒரு நகரசபையும் மேற்கொள்ளாத வேலைத்திட்டங்களை நாம் ஆரம்பித்து விட்டோம். ஆரம்பித்தது மாத்திரமல்லாமல் அந்தத் திட்டங்களை திறந்தும் கூட வைத்துள்ளோம். தற்பொழுது நாம் 4 கோடிக்கு மேற்பட்ட திட்டங்களை ஆரம்பித்துள்ளோம்.

- **ஐக்கிய தேசியக் கட்சி மீது நீங்கள் அதிருப்தியுற்றமைக்கான காரணங்கள் என்ன?**

நான் 10 வருடங்களாக ஐ.தே.க. பேருவலை நகர சபை மேயராக இருந்தும் ஒரு வீதியைக் கூட நிர்மாணிப்பதற்கு ரணில் உதவவில்லை. இன்னும் இவரை நம்பிப் போக முடியாது. எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் இலங்கையின் சகல தேர்தல் தொகுதிகளிலும் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியைத் தழுவும் நிலையிலுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ இரவில் திருடினார். ரணில் விக்ரமசிங்க ரவியுடன் இணைந்து பட்டப் பகலில் மத்திய வங்கியில் கொள்ளையிட்டார். கட்சியின் அவல நிலைக்கு இதுவே உடனடிக் காரணம். இந்த நிலையில் ரவி கருணாநாயக்கவுக்கு மீண்டும் உப தலைவர் பதவி வழங்கப்படவுள்ளது. இனிமேலும் சிங்கள மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க விரும்புவார்களா?

கட்சியில் மறுசீரமைப்புப் பணிகளை செய்யப் போவதாக போலிப் பிளாஸ்டர் ஒட்ட முனைகிறார் ரணில். இதுவெல்லாம் சரிப்பட்டுப் போகாது. மக்கள் இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நாங்கள் கட்சியை விட்டுப் பிரிந்து நின்று சுயேட்சையாகப் போட்டியிட்டதைப் போன்று ஏனையோ ரும் குழுக்களாகப் பிரிந்து செல்லும் காலம் வெகு தொலைவில் இல்லை.


பேருவலை தொகுதியில் ஐ.தே.க. ஒருபோதும் தோல்வியைத் தழுவாது. நாம் இம்முறை தனித்து நின்று போட்டியிட்டமையினாலேயே ஐ.தே.க.வுக்கு இங்கு தோல்வியைத் தழுவ நேரிட்டது. ஏன் என்னைத் துரத்தினார்கள்? இப்திகார் ஜெமீல் தவறு செய்தால் கட்சியின் தலைவரால் அதைத் திருத்த முடியுமல்லவா? அமைச்சர் என்ற வகையில் ராஜிதவுக்கும் இதைச் சரிசெய்ய முடியுமாக இருந்தது. ஆனால் அவர் முன்வரவில்லை. அவற்றின் விளைவையே தற்பொழுது அனுபவிக்கிறார்கள்.

- **அரசியல் கட்சிகளிலிருந்து உங்களது சுயேட்சைக் குழுவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதா?**

ஆம் எல்லா தரப்பும் அழைப்பு விடுத்தார்கள். நாம் ஒரு பக்கமும் சாய மாட்டோம். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் சுயேட்சையாகவே போட்டியிடுவோம். பேருவலையின் ஒட்டுமொத்த மக்களும் எங்களுடனேயே கைகோர்த்துள்ளார்கள். எமது பலமே மக்களின் பலம். இது பணத்தால் வந்த கூட்டமல்ல. அன்பால் வந்த கூட்டம். நீண்ட காலமாக நாம் பட்ட துன்பங்களுக்காக வேண்டியே இறைவன் இதுபோன்றதொரு வெற்றியை எமக்குத் தந்துள்ளான்.

- **அளுத்கம இனவாதத் தாக்குதல்களுக்கு பொறுப்புச் சொல்லக் கூடியவர்கள் யார்? இந்தச் சம்பவம் தொடர்பில் நீதி உரிய முறையில் நிலைநாட்டப்பட்டதா?**

(பக்.14)



## எழுவோம், பயமில்லை

அபூ ஷாமில்

## ஒன்றுபட்டால் என்ன செய்வது?

அண்மைக்கால சமூகத்தின் செல்நெறிகள் ஒன்றுபடுவதனை நோக்கியதாக அமைந்திருப்பது ஆரோக்கியமாகத் தெரிகிறது. நாட்டின் சூழ்நிலைகள், மிதவாத இஸ்லாமிய நாடுகளின் கட்டுடைப்புச் செய்யப்பட்ட போக்குகள் நமது தஃவா பரப்புக்களில் ஏற்படுத்தியிருக்கின்ற தாக்கங்கள் எல்லாமே மீண்டும் நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற நிலைக்கு முஸ்லிம் சமூகத்தை தள்ளிக் கொண்டு வந்து சேர்த்திருக்கின்றன.

ஊர்களிலே ஊர்மட்ட சூறாவுக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. பள்ளிவாசல்கள் இணைந்து பள்ளிவாசல் சம்மேளனங்களை உருவாக்கி வருகின்றன. உருவாக்கப்பட்ட பொது அமைப்புக்கள் தமது கூட்டிணைவை வைத்து காரிய மாற்றத் தொடங்கியிருக்கின்றன. நாடு எதிர்கொண்டிருக்கின்ற இனவாதச் சூழலில், குறிப்பாக முஸ்லிம் சமூகம் அனுபவித்து வருகின்ற அச்சமான காலப்பிரிவில் இது போன்ற இணைப்புக்கள், ஒன்றுபடுதல்கள் தான் சமூகத்தைப் பாதுகாக்கக் கூடியவையாக அமைகின்றன.

இந்தத் தொடரில் ஏறாவூர் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சங்கமும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் ஏறாவூர் கிளையும் அண்மையில் ஒன்று சேர்ந்து சமூகம் தொடர்பான 14 தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. அந்தத் தீர்மானங்களில், ஜம்மியதுல் உலமாவின் சிபாரிசுக் கடிதம் இல்லாமல் வெளியூர் நோயாளர்கள் ஏறாவூரில் நிதி சேகரிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள், திருமணங்களின் போது மணவாளன், மணப்பெண் ஆகியோரின் விபரங்களை 07 நாட்களுக்கு முன்னர் பள்ளிவாசலுக்கு அறியத் தர வேண்டும், பள்ளிவாசலில் பிரதேசவாசிகளின் பெயர்ப்பட்டியல் காட்சிப் படுத்தப்பட வேண்டும், பள்ளிவாசலில் நடைபெறும் மதரஸாக்களின் நிலைமை தொடர்பில் பள்ளிவாசல்கள் கவனமெடுக்க வேண்டும், 03 மாதத்துக்கு ஒருமுறை பள்ளிவாசலின் கணக்கு விபரங்கள் அறிவித்தல் பலகையில் போடப்பட வேண்டும், ஒவ்வொரு பள்ளிவாசலும் பள்ளிவாசல் சம்மேளன தொண்டர் அணிக்கு 05 பேரை வழங்க வேண்டும், பள்ளிவாசல் நிர்வாகத் தெரிவின் போது சம்மேளனத்துக்கும் ஜம்மிய்யாவுக்கும் அழைப்பு விடுக்க வேண்டும், மார்க்கத்துக்கு முரணான விடயங்களில் ஈடுபடுபவர்களை நிர்வாகம் விசாரிக்க வேண்டும், வெளியூர்வாசிகளுக்கு வீடு வாடகைக்கு விடுவதாக இருந்தால் பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு அறிவிக்க வேண்டும், வெளியூர்வாசிகள் ஊரில் தங்கினால் பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு அறிவிக்க வேண்டும், இரவு வேளைகளில் யாசகம் பெறுபவர்கள் பள்ளிவாசல் வளாகத்தில் வசூலுக்கு நிற்பதை பள்ளிவாசல் நிர்வாகங்கள் தவிர்க்க வேண்டும், வெள்ளிக்கிழமையை ஊர் தழுவிய விடுமுறையாகப் பிரகடனப்படுத்தல், பள்ளிவாசல் ஒலிபெருக்கியில் வியாபாரம் சார்ந்த விளம்பரங்களை அனுமதிக்கக் கூடாது, பள்ளிவாசல் நிர்வாக உறுப்பினர்கள், சம்மேளன மற்றும் ஜம்மியதுல் உலமா உறுப்பினர்களைக் கொண்டு ஒவ்வொரு பள்ளிவாசலுக்குமான சமாதானக் குழு அமைத்து அங்கு இடம் பெறும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல் என்ற 14 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பள்ளிவாசல்களின் நிர்வாக ஒழுங்குகளை பலப்படுத்துவதற்கு இதுபோன்ற தீர்மானங்களுக்கு பள்ளிவாசல்கள் வருவது முக்கியமானது. இதுபோல பள்ளிவாசல்களின் சமூகக் கடமைகள் பற்றியும் தீர்மானங்களுக்கு வருவதற்கு ஏனைய பள்ளிவாசல்கள் சிந்திப்பது பொருத்தமானதாக அமைய முடியும். இந்த விடயத்தில் தேசியத் தலைமைகள் பள்ளிவாசல்களுக்கு வழி காட்ட வேண்டும். ஏலவே சொல்லப்பட்டது போல பள்ளிவாசல்களுக்கான கடமைப்பாடுகள் (Mandate) எதுவும் நமது இயங்கு தளங்களக்குள்ளால் எங்குமே சொல்லப்படவில்லை. பள்ளிவாசல்களை ஒரு வலையமைப்பில் தொடர்புபடுத்திவிடவும் சமூகத்தின் தலைமைகள் இன்றுவரை எதுவும் செய்யவில்லை. அந்த வகையில் பள்ளிவாசல்கள் முன்னுரிமைப்படுத்திச் செய்ய வேண்டிய பணிகளையும் பொறுப்புக்களையும் பள்ளிவாசல் நிர்வாகங்களுக்கு வரையறுத்துக் கொடுத்து வழிகாட்ட வேண்டிய பொறுப்பு சமூகத்தின் தலைமைகளுக்கு எஞ்சி இருக்கிறது.

நாட்டின் தற்போதைய நிலவரங்கள் முஸ்லிம் கிராமங்களை குறிவைப்பதாக அமைந்து வரும் சூழமைவில் ஒவ்வொரு ஊரும் தமது பிரதேசத்தின் அனைத்து விவகாரங்களிலும் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் ஊர்களின் முதல்நிலை ஆளுகை மையங்களான பள்ளிவாசல்கள் இதனை நோக்கிய தீர்மானங்களுக்குச் செல்ல வேண்டிய கட்டாயச் சூழலுக்கு தம்மை தகவமைத்துக் கொள்ள வேண்டிய நிலை பரவலாகக் காணப்படுகிறது. இதனால் தமது நிர்வாகத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தீர்மானங்களுக்கு அப்பால் தம்மீதுள்ள சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் வகையிலான தீர்மானங்களுக்குச் செல்லுகின்ற அளவுக்கு பள்ளிவாசல்களை வழிகாட்ட வேண்டிய தேவை இருக்கிறது.

இந்தப் பணியை சமூகத்தின் தலைமைகள் செய்வதற்கு முன்வர வேண்டும். வெறுமனே பள்ளிகளை ஆக்கிரமித்து வைத்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்துவதினால் சமூகத்துக்கோ சன்மார்க்கத்துக்கோ எந்த விளைவும் வரப் போவதில்லை. பள்ளிவாசலுக்கு நிர்வாகிகள் நியமிக்கப்படுவது பள்ளிவாசலை இன்னும் எப்படி புதுப்பிக்கலாம் என்பதை ஆராய்ந்து நடைமுறைப்படுத்துவதற்கல்ல. மாறாக சமூகத்தை எப்படிப் புனரமைத்துக் கட்டியெழுப்பலாம் என்பதாகத்தான் இஸ்லாமிய சமூகத்தில் பள்ளிவாசலின் வகிபாகம் இருக்கிறது.

எனவே சமூகம் பள்ளிவாசல்கள் வழியாக ஒன்றுபட்டு உழைப்பதற்குத் தயாராகி வரும் இவ்வேளையில், ஒன்றுபட்ட பின்னர் என்ன செய்ய வேண்டும் என்பதிலும் சமூகத்தை வழிகாட்ட வேண்டிய தேவை இருப்பதைத் தான் களநிலவரங்கள் தெளிவுபடுத்துகின்றன. இந்த இடத்தில் சமூகத் தலைமைகள் சமூகத்தை சரியாக வழிநடத்தத் தவறுமாக இருந்தால், மீண்டும் சில்லறை விவகாரங்களில் சமூகம் மூழ்கிப் போய்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரம்ப் ஜனாதிபதிப் பதிவி வகிக்கத் தகுதியற்றவர்

## முன்னாள் FBI பணிப்பாளர் ஜேம்ஸ் கொமி



பெண்களை இறைச்சித் துண்டுகள் போன்று நடத்தும் டொனால் ட்ரம்ப் ஜனாதிபதிப் பதவி வகிக்கும் தகுதியற்றவர் என அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவான FBI முன்னாள் பணிப்பாளர் ஜம்ஸ் கொமி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் டொனால் ட்ரம்பினால் பதவிலிருந்து வெளியேற்றப்பட்டதற்குப் பின்னரான முதலாவது தொலைக்காட்சி நேர்காணலின்போதே ஜேம்ஸ் கொமி இவ்வாறு தெரிவித்தார்.

ட்ரம்ப் தொடர்ச்சியாகப் பொய்களைக் கூறி வருவதாகவும் நீதிக்குத் தடையாக உள்ளதாகவும் 15 ஆம் திகதி இடம்பெற்ற தொலைக்காட்சி நேர்காணலில் கொமி தெரிவித்தார். மறதி நோயின் ஆரம்ப கட்டத்திலுள்ள, மனநல ரீதியில் பதவி வகிக்கத் தகுதி யற்ற ஒருவராக டொனால் ட்ரம்ப் விளங்குவதாக கொமி அங்கு மேலும் தெரிவித்தார். எமது ஜனாதிபதியாக உள்ளவர் இந்நாட்டின் உள்ளடக்கமாகவுள்ள விழுமியங்களுக்கு மதிப்பளிக்கவும் அவற்றைப் பின்பற்றவும் வேண்டும். அதில் முக்கியமானது உண்மையாகும். ஆனால் இந்த ஜனாதிபதி டொனால் ட்ரம்பிற்கு அதைச் செய்வது சாத்தியமில்லை என்றும் ஜேம்ஸ் கொமி தெரிவித்துள்ளார்.

# சிறையிலுள்ள பர்கூதி ஒன்றுபடுமாறு வேண்டுகோள்

பதாஹ் இயக்கத்தின் சிரேஷ்ட அங்கத்தவர் மர்வான் பர்கூதி பலஸ்தீன் விடுதலை இயக்கத்தினுள் ஏற்பட்டுள்ள உள்ளகப் பிளவுகளுக்கு முடிவுகட்டி அனைவரும் ஒன்றுபட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். பதாஹ் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினரான இவர் 17 ஆண்டுகளாக இஸ்ரேலில் சிறைவாசம் அனுபவித்து வருகின்றார். 2019 ஆம் ஆண்டு வரை அவரது மனைவி பீத்துவா, பர்கூதியை பார்வையிட முடியாது என்றும் இஸ்ரேல் தடைவிதித்துள்ளது.

1960 எல்லைப் புறங்களிலிருந்து இஸ்ரேல் தனது படைகளை விடுவித்துக் கொள்ளல் மற்றும் ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வருதல் பற்றி இதுவரை சீரியஸான கலந்துரையாடல்களில் பலஸ்தீனர்கள் ஈடுபடவில்லை. இஸ்ரேலிய உற்பத்திகளைப் பகிஷ்கரித்தல் எனும் பிரச்சாரத்திற்கு பலஸ்தீன மக்கள் முழு ஆதரவளிக்க வேண்டும் எனவும் பர்கூதி தெரிவித்தார்.

# சர்வதேசப் பார்வை

# இந்துத்துவ வெறியார்களால் கொல்லப்பட்ட ஆஸிபா பானுவுக்கு நீதி வேண்டும்








காஷ்மீரில் இந்துத்துவ வெறியர்களால் பாலியல் ரீதியில் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 8 வயதான ஆஸிபா பானு எனும் சிறுமிக்கு நீதி வேண்டும் என்று இந்தியா முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றனர். குறிப்பாக இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள ஜம்மு காஷ்மீரில் பல்கலைக்கழக மாணவிகள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் எதிர்ப்புப் பேரணிகளை நடத்தி வருகின்றன. இக்கொடூரச் சம்பவம் இந்தியாவுக்கு மிகப் பெரிய தலைக்குனிவை ஏற்படுத்தியுள்ளது என்று டில்லி பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

நாடோடி சமூகத்தைச் சேர்ந்த 8 வயதான ஆஸிபா பானு எனும் சிறுமி கோயில் ஒன்றுக்குள் கொண்டு செல்லப்பட்டு, போதை மருந்து ஊட்டப்பட்ட நிலையில் நான்கு நாட்கள் தொடர்ச்சியாக 6 பேரினால் கூட்டு வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீரில் கதுவா மாவட்டத்தில் ரஸானா எனும் கிராமத்தில் இக்கொடூர சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் பொலிஸ் அதிகாரிகளும் இந்துத்துவ வெறியர்களும் ஈடுபட்டுள்ளதை புலன் விசாரணை அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. வலதுசாரி இந்துத்துவ BJP அயோக்கியர்களால் ஆளப்படும் இந்தியாவில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காஷ்மீரில் 25,000 இற்கும் மேற்பட்ட பெண்கள் இவ்வாறு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். காட்டுமிராண்டித்தனமான இந்திய இராணுவத்தினரும் இந்துத்துவ மிருகங்களுமே இத்தகைய கொடூரச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

BJP அரசியல்வாதியான சன்ஜி ராம், அவரது மருமகனைப் பணித்தே ஆஸிபா கடத்தப்பட்டு பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார். மூன்று மாதங்களுக்கு முன் இடம்பெற்ற இக்கொடூர சம்பவம் குறித்த 16 பக்க குற்ற அறிக்கை கடந்த வாரமே வெளிவந்தது. புலனாய்வு அறிக்கையின்படி கடத்தல், வல்லுறவு, மற்றும் கொலை என்பன நன்கு திட்டமிடப்பட்டு முறைப்படுத்தப்பட்ட வடிவில் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது.

பகர்வால் எனப்படும் நாடோடிச் சமூகத்தைச் சேர்ந்த சிறுமியான ஆஸிபா பானு இறுதியாக மரணத்தின் விளிம்பில் இருந்த தருணத்தில் ஒரு பொலிஸ் அதிகாரியால் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். பின்னர் கழுத்தை நெரித்தும் இரண்டு முறை கற்களால் தாக்கப்பட்டும் ஆஸிபா பானு கொல்லப்பட்டுள்ளார்.

நிரந்தர குடிமனை இல்லாத அப்பாவி ஏழைச் சிறுமி ஒருவர் முஸ்லிம் என்ற ஒரே காரணத்திற்காக பாலகர் என்றும் பார்க்காமல் இந்துத்துவ கொடியவர்கள் அவரை கொன்று தீர்த்துள்ளனர். இதற்கு முழுப் பொறுப்பான சன்ஜீ ராம் ஒரு தீவிர வலதுசாரி இந்துத்துவ வெறியன் ஆவான். BJP ஆதரவாளனான இவன், பிரதமர் நரேந்திர மோடியின் ஆசிர்வாதம் பெற்றவன்.

''வெறும் 8 வயதான ஒரு பூவை; இளம் மொட்டை கசக்கி விசியுள்ளனர்'' என்று புலன் விசாரணை அறிக்கை கூறுகின்றது. சில நாட்களாக அமைதியாக இருந்த இந்தியப் பிரதமர், இந்தியாவே கொதித்து வந்த நிலையைக் கவனத்திற் கொண்டு வாய் திறக்க நேரிட்டது. இந்தியப் பெண்கள் அவர்களது உரிமையைப் பெற்றுக் கொள்வார்கள். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று வழமையான பாணியில் மோடி இந்தியர்களை அமைதிப்படுத்தியுள்ளார்.

இச்சம்பவத்தின் மூலம் இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்று கூறுவதற்கு வெட்கப்பட வேண்டும் என அல் ஜஸீராவின் இந்திய செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

# சவூதிஅறேபிய தியேட்டர்களில் இந்தியத் திரைப்படங்கள்



சமீபத்தில் சவூதி அறேபிய இளவரசர் அறிவித்த சீர்திருத்தங்களில் நாட்டில் போதுமானளவு திரைப்படக் கொட்டகைகளை உருவாக்குவதும் உள்ளடங்குகின்றது. அல் அறபிய்யா செய்திச் சேவையின்படி ஏப்ரல் 18 இல் முதற் திரைப்படம் அப்துல்லாஹ் அல் மாலி திரையரங்கில் திரையிடப்பட்டது. திரைப்படமொன்றை பார்த்து ரசிப்பதற்கான நுழைவுக் கட்டணம் 50 சவூதி ரியால்களாகும். அது இலங்கை நாணயத்தின்படி 2000 ரூபாய்களாகும்.

ஏப்ரல் 18, சிவாஜி கணேஷன் நடித்த வசந்த மாளிகை திரையிடப்பட்டது. இத்தகவலை அல் அறபிய்யா செய்திச் சேவையோடு அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு AMC கம்பனியும் வெளியிட்டுள்ளது. இதேவேளை, மே மாதம் பிரமாண்டமான அழகு ராணிப் போட்டியும் பெஷன் ஷோவும் ரியாத் நகரில் நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இப்போது சவூதி மக்கள் ஓய்வு நேரங்களைக் கழிப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் பெண்கள் அமைப்புக்கள் கூறுகின்றன. இதே வேளை, 60 வயதைத் தாண்டிய அறபுகள் பெருமளவு பங்குகொள்ளும் சூதாட்ட மையங்களும் ரியாதில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சவூதியின் வரலாற்றில் சினிமா கொட்டகைகளும், சூதாட்ட நிலையங்களும் செயல்படத் தொடங்கியுள்ளமை இதுவே முதல் தடவையாகும். இதற்கு சவூதி ஆட்சியாளர்கள் மிதவாத இஸ்லாம் என்று பெயரிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிரியாவை வல்லரசுகள் அழிப்பதாக குற்றச்சாட்டு



சிரியாவில் ரஷ்யத் தலையீடு காரணமாக அந்நாட்டின் கீழ்க் கட்டுமானங்களும் பெருமளவு மக்களும் அழிக்கப்பட்டு வரும் நிலையில், அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகியனவும் தமது பங்கிற்கு பாரியளவிலான தாக்குதல்களை நடத்தத் தொடங்கியுள்ளன. இதனால் சிரியா பெருமளவு அழிவை எதிர்கொள்ளப் போகின்றது என எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது.

தூமாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகியன சிரியாவின் இரசாயன ஆயுதக் கிடங்குகள் உள்ள இடங்கள் என சந்தேகிக்கப்படும் பிரதேசங்களில் தாக்குதல் நடத்தியுள்ளன. இதனால் பொது மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

கூதா தாக்குதலைத் தொடர்ந்து ரஷ்யா, அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் வேட்டைக் களமாக சிரியா மாற்றப்பட்டுள்ளது. பிரான்ஸ் ஜனாதிபதி மெகரோன் டொனால் ட்ரம்புடன் ஆற்றிய உரையாடலை அடுத்து, சிரியாவில் நிலையான இராணுவ முகாம்களை அமைப்பது சாத்தியமாகியுள்ளது [illegible]

2011 இல் அந்நாட்டில் வெடித்த மக்கள் புரட்சியை மேலைத்தேய நாடுகள் தவறாக வழிநடாத்துவதோடு, 6 இலட்சம் பொதுமக்கள் கொல்லப்படவும் காரணமாகியுள்ளன. சிரிய அரசாங்கத்திற்கு ஆதரவாகச் செயல்படும் ரஷ்யா, S-300 ரக ஏவுகணைகளை சிரிய அரசாங்கத்திற்கு வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கின்றது.

இதற்கிடையில் சவூதி அறேபிய வெளிவிவகார அமைச்சர் தமது படையினரை சிரியாவில் நிறுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். சிரிய அரச படையினர் நாட்டின் பொதுமக்கள் மீது பலமுறை இரசாயன தாக்குதல்களை மேற்கொண்டு வந்தபோதிலும், பாதுகாப்புச் சபையோ மேற்கு நாடுகளோ இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று குற்றம் சுமத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலஸ்தீனப் போராட்டம் தடைகளைத் தகர்த்தெறிந்து வெற்றி நோக்கி முன்னேறுகிறது

**- கலாநிதி இப்றாஹீம் முஹன்னா -**

• முஷாஹித் அஹ்மத்

(வெளிநாடுகளில் வசிக்கும் பலஸ்தீன அறிஞர்கள் அமைப்பு, சர்வதேச இஸ்லாமிய (ருவ்வாத்) முன்னோடிகள் அமைப்பு, சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றியம், பலஸ்தீன விடுதலைக்கான சர்வதேச ஒத்துழைப்பு அமைப்பு போன்ற அமைப்புக்களின் நிறைவேற்று உறுப்பினர் கலாநிதி இப்றாஹீம் முஹன்னா அவர்களுடன் மேற்கொண்ட நேர்காணல் இது).

நேர்கண்டவர்கள்-
ஏ.டபிள்யூ.எம் பாஸீர், என். எம். இக்றாம்

**உங்களைப் பற்றிய அறிமுகத்தை தாருங்கள்**

எனது பெயர் கலாநிதி இப்றாஹீம் முஹன்னா. வெளிநாடுகளில் வசிக்கும் பலஸ்தீன அறிஞர்கள் அமைப்பு, சர்வதேச இஸ்லாமிய (ருவ்வாத்) முன்னோடிகள் அமைப்பு, சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் ஒன்றியம், பலஸ்தீன விடுதலைக்கான சர்வதேச ஒத்துழைப்பு அமைப்பு ஆகிவற்றின் நிறைவேற்று உறுப்பினராகக் கடமையாற்றுகிறேன்.

**அண்மையில் குத்ஸ் இஸ்ரேலின் தலைநகரம் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்ப் தீர்மானம் நிறைவேற்றியிருந்தார். இது எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது?**

முதலில் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். ட்ரம்பின் தீர்மானம் அவருடைய தனிப்பட்ட தீர்மானமல்ல. அது அமெரிக்க நிர்வாகத்தின் தீர்மானம். இந்தத் தீர்மானம் 1995 இல் அமெரிக்க செனட்டில் எடுக்கப்பட்டது. இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்த பொருத்தமான சூழல் அமையாத போது 6 மாத காலத்திற்குள் இத்தீர்மானத்தை ரத்து செய்யும் அதிகாரம் அமெரிக்க ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது. இப்படி மூன்று அமெரிக்க ஜனாதிபதிகள் அந்த தீர்மானத்தை பிற்போட்டு வந்திருக்கிறார்கள். தற்போதைய முட்டாளைத் தவிர.

**ஏன் ட்ரம்ப் இவ்வாறு நடந்து கொள்கிறார்?**

இஸ்லாமிய உலகில் நிலவும் மிகவும் பலவீன நிலையே அதற்குக் காரணம். தற்போதைய காலப்பிரிவு முஸ்லிம் உம்மத்தைப் பொறுத்தவரை மிக துரதிஷ்டகரமான காலப்பிரிவாகக் காணப்படுகிறது. பிரிவினை, சிதறல், பலவீனம், அநியாயம், இழிவு, விடுதலைக்கான குரல்களை நசுக்கும் போராட்டம், மக்களின் அபிலாஷைகளுக்கு எதிரான போக்கு போன்ற பிரச்சினைகள் என்பன முஸ்லிம் உம்மத்தைச் சூழ்ந்திருந்து ஆட்டிப்படைக்கின்றன. இப்பலவீனமே தனிப்பட்ட ரீதியில் ட்ரம்பையும் அமெரிக்க நிர்வாகத்தையும் மேற்சொன்ன தீர்மானத்தை எடுக்க தூண்டுகோலாக இருந்திருக்கிறது.

இத்தீர்மானம் ஐ.நா.வின் சர்வதேச சட்டங்களுக்கும் உடன்பாடுகளுக்கும் எதிரானது. குத்ஸ் ஆக்கிரிமிக்கப்பட்ட நகரம் என ஐ.நா. கருதுகிறது. புவியரசியல் ரீதியாகவோ, வரலாற்று ரீதியாகவோ அங்கு மாற்றங்களை ஏற்படுத்த முடியாது. கவலைக்குரிய விடயம் முஸ்லிம் நாடுகளில் சில சந்தேகத்திற்கிடமான வகையில் அமைதி காக்கின்றன. அதற்கும் அப்பால் சென்று எதிர்மறையான அறிக்கைகளை வெளியிடுகின்றன. தமக்கும் இஸ்ரேலுக்கும் இடையே இயல்பூக்கத்தை ஏற்படுத்தும் பாதை வரைபடம் உள்ளதாக சவூதி வெளிவிவகார அமைச்சர் மிக வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார்.

எப்படியிருப்பினும் மக்கள் தமது நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர். குத்ஸ் மக்களை தொடர்ந்தும் இயக்கிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு முஸ்லிமின் மனச்சாட்சியிலும் குத்ஸ் வாழ்கிறது. எனவேதான் உலகின் நாலா புறங்களிலிருந்தும் மக்கள் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்களில் முஸ்லிமல்லாதவர்களும் உள்ளடங்குகின்றனர். குத்ஸ் ஒரு மனித நேயப் பிரச்சினை என்றவகையில் மனச்சாட்சியுள்ளவர்களிடம் அது இடம்பிடித்திருக்கிறது.

மக்கள் செயற்பாடுகள் ஓரிரு நாட்கள் என்றில்லாமல் தொடர்ந்து நடைபெறுகின்றன. ஐரோப்பிய நகரங்கள் அனைத்திலும் போல மக்கள் பெருமளவில் குத்ஸிற்கான தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். பெரும்பாலான நாடுகள் அமெரிக்காவின் இத்தீர்மானத்தை நிராகரித்துள்ளன. இலங்கையும் குத்ஸிற்கான தனது ஆதவை வெளிப்படுத்தியுள்ளது. இந்த தைரியமான நிலைப்பாட்டுக்காக நாம் இலங்கைக்கு நன்றி தெரிவிக்கின்றோம். இதன் மூலம் அவர்கள் இப்பிரச்சினையில் நீதியை வெளிப்படுத்தியுள்ளனர்.

**அறபு-இஸ்லாமிய உலகினது பலவீனமே இத்தீர்மானத்திற்கான உற்சாகத்தை வழங்கியதாக சொன்னீர்கள். அந்த வகையில் இஸ்ரேலுடனான சவூதி அரேபியாவின் உறவும் ஒன்று எனக் கூறுகின்றீரக்ள். எப்படி அது?**

சவூதிக்கும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இடையிலான தொடர்பினைப் பொறுத்தவரை, இரகசியமாக சில உரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சில சவூதி அரேபிய மத்தியஸ்தர்களினூடாகக் கசிந்துள்ளன. சிலர் இஸ்ரேலுக்கு விஜயம் செய்து அங்குள்ள தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளனர். அன்வர் இஷ்ரி, அப்துல் ஹமீத் ஹகீம் போன்றவர்களை இங்கு குறிப்பிடலாம். இதற்கு முன்பு இதுபோன்று நடந்ததில்லை.

இப்படியான நிகழ்வுகளை சவூதி மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் தீர்மானம் எடுக்கும் சக்திகள் மீது அழுத்தம் பிரயோகிப்பார்கள் என நம்பலாம். அண்மையில் மஸ்ஜிதில் ஹராமில் இடம்பெற்ற குத்பா பிரசங்கம் சர்வதேச முஸ்லிம் உம்மத்தின் கருத்தை பிரதிபலித்திருந்தமை வரவேற்கத்தக்கது.

**பலஸ்தீன விவகாரத்திற்கு எதிரான சதித்திட்டங்களில் ஒன்றாக 'ஸப்கதுல் கரன்' (நூற்றாண்டின் பரிமாற்றம்) திட்டம் காணப்படுகிறது. பல அறபு நாடுகள் இத்திட்டத்திற்கு பச்சை சமிக்ஞையை காண்பித்திருக்கின்றன. நூற்றாண்டின் பரிமாற்றத் திட்டம் குறித்து சொல்ல முடியுமா?**

இத்திட்டத்தின் உள்ளடக்கம் குறித்து அமெரிக்க நிர்வாகமோ இஸ்ரேலோ தெளிவாக எதனையும் வெளிப்படுத்தவில்லை. சவூதி அரேபியா இது குறித்து உத்தியோகபூர்வ கருத்தை வெளிப்படுத்தாத போதும் அதனை ஏற்பதாகவோ, மறுப்பதாகவோ எந்த அறிக்கையையும் வெளிப்படுத்தவில்லை. இத்திட்டத்தை சந்தைப்படுத்துவதில் எகிப்திற்கு பெரும் பங்கிருக்கிறது. இதுவரை கசிந்துள்ள தகவலின் அடிப்படையில் இத்திட்டத்தின் உள்ளடக்கம் என்னவென்றால், பலஸ்தீன சமாதானத் தீர்வுத் திட்டத்திற்கு நிரந்தர விடைகாணல் என்பதாகும்.

**நூற்றாண்டுப் பரிமாற்றம் எனும் இத்திட்டம் எப்படி இருக்கும்?**

இத்திட்டத்தின் மூலம் மேற்குக் கரையில் அமைக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய குடியேற்றங்கள் அப்படியே தொடர்ந்திருக்கும். அதற்குப் பகரமாக எகிப்தின் சினாய் பகுதியில் விசாலமான நிலப்பரப்பொன்று பலஸ்தீனர்களுக்கு வழங்கப்படும். இதன் மூலம் காஸாவையும், சினாய் பகுதியையும் இணைத்த பலஸ்தீன நாடு உருவாகும்.

இந்த அடிப்படையில் மேற்குக் கரையும் குத்ஸும் அப்படியே இருக்கும். அதனை பலஸ்தீனர்களால் நிர்வகிக்க முடியாது. புனித மஸ்ஜிதுல் அக்ஸா விடயம் பற்றியும் அவர்களால் பேச முடியாது. மேற்குக் கரையில் ஒருவகை பெடலர் ஆட்சிமுறை காணப்படும். அது ஜோர்தானுடன் சம்பந்தப்படுகிறது. எனினும் ஜோர்தான் இவ்விடயத்தை மிகத் தெளிவாக நிராகரித்துள்ளது. நூற்றாண்டு திட்டம் ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை.

அறபு நாடுகளைப் பொறுத்தவரையில் அவை இஸ்ரேலுக்கு இயல்பான முழு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கின்றன. பிராந்தியத்தில் சிரியாவைப் போல, ஜோர்தான் போல சாதாரணதொரு நாடாக இஸ்ரேல் தொழிற்படுவதை அவை அனுமதிக்கின்றன. அப்படியானால் தூதரகங்கள், பொருளாதார தொடர்புகள், இராஜதந்திர ஒத்துழைப்புக்கள் என அனைத்தும் இஸ்ரேலுடன் சர்வ சாதாரணமாக இடம்பெறும்.

இப்படியொரு மிக மோசமான திட்டத்தை ஆதரிப்பவர்களும், உடன்படுபவர்களும் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முஸ்லிம்களுக்கும் மோசடி செய்கிறார்கள் என்றே நாம் கருதுகிறோம்.

**அறவு வசந்தப் புரட்சிகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்பியிருந்தன. பின்னர் தோன்றிய எதிர்ப்புரட்சிகள் அறபுப் புரட்சிகளை காயடித்தன. முஸ்லிம் இளைஞர்களுக்கு நம்பிக்கை தரும் சுபசோபனங்கள் ஏதும் உள்ளனவா?**

பல சுபசோபனங்கள் உள்ளன. அல்லாஹ் முஃமின்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியிருக்கிறான். அவற்றில் ஒன்று பொதுவான வாக்குறுதி. இன்னொன்று குறிப்பான வாக்குறுதி.

விசுவாசிகளே நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவும் காலமெல்லாம் அல்லாஹ் உங்களுக்கு வெற்றியைத் தருவான். உங்கள் பாதங்களை பலப்படுத்துவான்'. இது பொதுவான வாக்குறுதி.

குறிப்பான வாக்குறுதியைப் பொறுத்தவரை அது பலஸ்தீனுக்கு வழங்கிய வாக்குறுதியைக் குறிப்பிடலாம். பலஸ்தீனுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதியைப் போல வேறு எதற்கும் வாக்குறுதிகள் வழங்கப்படவில்லை.

'இரண்டாவது தவணை வந்த சமயத்தில், உங்கள் முகங்களைச் கெடுத்து, பைதுல் முகத்தஸில் முதல் முறையாக நுழைந்தது போல நுழைந்து, தங்கள் கைக்குக் கிடைத்தவைகளையெல்லாம் இடித்தழித்து நாசமாக்கக் கூடிய (கடின சித்தமுடைய) வர்களை (நாம் உம்மீது) ஏவினோம்'' (இஸ்ரா: 7).

இது குத்ஸ் விடயத்தில் முஃமின்களுக்கு அல்லாஹ் வழங்கிய வாக்குறுதியாகும். அவர்கள் முதற் தடவை நுழைந்தது போல மீண்டும் குத்ஸினுள் நுழைவார்கள். முதற் தடவையாக அவர்கள் உமர் அல்-பாரூக் (றழி) காலத்தில் நுழைந்தார்கள். எனவே இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். அல்லாஹ் வாக்குறுதிக்கு ஒருபோதும் மாறு செய்வதில்லை. 'நிச்சயமாக அல்லாஹ் வாக்குறுதிகளுக்கு மாறுசெய்ய மாட்டான்' (அல்-குர்ஆன்).



பலஸ்தீனப் போராளிகளைக் பார்த்தால் அவர்களிடம் இருந்த மிகப் பலமான நாட்ட சக்தியுடன் போராடுகிறார்கள். ஈமானையும், சொற்ப ஆயுதங்களையும் மாத்திரம் கொண்டிருக்கும் ஒரு சிறு கூட்டம் அனைத்து சவால்களையும் எதிர்கொண்டு பொறுமையுடனும், உறுதியுடனும் போராடுகிறது.

முதல் இன்திபாழா போராட்டம் 1987 இல் கற்களை ஆயுதமாகக் கொண்டு ஆரம்பித்தது. பிறகு கத்திப் போராட்டம் வந்தது. பின்னர் பழைய ஆயுதங்களை கையிலெடுத்து போராட்டம் இன்னொரு கட்டத்திற்கு நகர்ந்தது. அவ்வாயுதங்கள் மிகவும் பழையவை. பிரித்தானிய படைகளுக்கு எதிராகவும், முதலாம் உலக யுத்தத்திலும் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை தமது மூத்தோர்களின் வழிகாட்டலில் தேடிப் பொறுக்கி எடுத்தே அவர்கள் போராடினர். பின்னர் எதிரிகளின் ஆயுதங்களைப் பறித்தும், வாங்கியும் போராடினர். அதன் பிறகு ஆயுதங்களை உற்பத்தி செய்து சொந்த ஆயுதங்களால் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அப்போது பயன்படுத்திய கற்கள் இன்று டெல்அவிவை தாக்கும் ஏவுகணைகளாக பரிணாமம் பெற்றிருக்கின்றன. பலஸ்தீனின் அனைத்துப் பகுதிகளையும் இலக்கு வைக்கும் அளவுக்கு அதன் வீச்சு எல்லை மாறியிருக்கிறது. ஒழுங்கற்ற முறையில் இலக்குகளை தாக்கிய ஆயுதங்கள் மிகச் நுணுக்கமாக இலக்குகளை தாக்கி அழிக்கும் திறனைப் பெற்றிருக்கின்றன.

தரைவழியால் எதிரிகளை எதிர்த்து வந்தவர்கள் தற்போது தரை, கடல், வான் மற்றும் தரைக்குக் கீழ்வழியிலான நான்கு வழி போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இது வெற்றிக்கான சுபசோபனமாகும். பிந்திய தொழிநுட்பம் வழங்கப்பட்டுள்ள உலகின் முக்கியமான இராணுவமாகப் பார்க்கப்படும் இஸ்ரேலிய இராணுவத்திற்கு எதிராக அவர்கள் சாணக்கியமாகப் போராட்டத்தைக் கொண்டு செல்கிறார்கள். இதைவிட பெரிய சுபசோபனம் வேறு என்ன இருக்கிறது.

இன்னும் சில சுபசோபனங்களும் உள்ளன. மஸ்ஜிதுல் அக்ஸாவை திறந்த நெஞ்சுடன் பாதுகாத்துப் போராடும் போராளிகள் குழு அக்ஸாவை சூழ இருந்து அதனை காத்து வருகின்றனர். அவர்களிடம் காஸாவிலுள்ளவர்கள் பெற்றிருக்கும் ஆயுதங்கள் கிடையாது. ஆனால் அவர்கள் உறுதியான ஈமானை ஆயுதமாகப் பயன்படுத்திப் போராடுகின்றனர். சமயலறைக் கத்திகளும், கார்களுமே அவர்களின் ஆயுதங்களாகும். இந்த தனித்துவமான போராட்டம் எல்லாம் எதிரிக்கு சொல்லும் செய்து இது தான். நாங்கள்தான் இங்கு நிலைத்திருப்போம். நீங்கள் ஒருநாள் விரட்டியடிக்கப்படுவீர்கள் என்பதாகும்.

**சிறுபான்மையாக வாழும் இலங்கை முஸ்லிம்கள் குத்ஸிலிருந்து பல்லாயிரம் கிலோ மீற்றர்கள் தொலைவில் வாழ்கின்றனர். அவர்களால் குத்ஸிற்காக எவ்வாறான பங்களிப்பைச் செய்யலாம்?**

குத்ஸ் உங்களை விட்டும் மிகத் தொலைவில் இல்லை. அது உங்கள் உள்ளங்களில் வாழ்கிறது. உங்கள் தொழுகைகளில், உங்கள் பிரார்த்தனைகளில், உங்கள் நிகழ்ச்சிகளில், உங்கள் அசைவுகளில் அது வாழ்கிறது. இவ்விவகாரத்தில் ஊடக ரீதியாக எமக்கு இம்மக்கள் உதவலாம். சமூக ஊடகங்கள் ஊடாக உதவலாம். இலங்கை மக்கள் வழங்கும் ஆதரவும், ஒத்துழைப்பும் ஆக்கரமிப்பு பலஸ்தீனிலுள்ள சகோதரர்களுக்கு உற்சாகத்தையும், உத்வேகத்தையும் அளிக்கும். குத்ஸின் விடுதலையை நோக்கி இன்னும் பல எட்டுக்களை வைக்க அது உந்துதலாக இருக்கும். இப்படியான மானசீக உதவிகள் அவர்களுக்கு மிகத் தேவையானது. இன்று கருத்துருவாக்கம் செய்வதில் ஊடகங்கள் பெரியளவில் பங்களிக்கின்றன. ஊடகங்களே கொள்கைகளை மாற்றுகின்றன. எனவே இவ்வாறான உதவிகளை உங்களால் செய்ய முடியும். நான் ஒரு இலங்கையன். குத்ஸில் எனக்கு உரிமையிருக்கிறது என்று இங்குள்ள ஒவ்வொருவரும் சொல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தமானி அறிவித்தலின்படி உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவானோர் விபரம் - 2

| வட்டாரம் | தெரிவானோர் |
|---|---|
| **மாத்தளை மாவட்டம்** | |
| **மாத்தளை மாநகர சபை** | |
| 02 கலதாவல ✱ | ஹனீஃபா மொஹமட் சஃபருல்லா |
| 05 மத்ய நகரய | முஹம்மது ஹஸிம் முகமது அஸ்ரப் |
| 06 தும்ரியபொல பெதஸ | முகமத் அனஸ் ரியால் |
| | கலந்தர் கெதர ரபாய்டீன் மொஹமட் சஃபருல்லா |
| பட்டியல் | அஹமட் லெப்பெ இர்பான் அலி |
| | தம்பி முதலிகே மொஹமட் யூசுப் மொஹமட் நிலாப் |
| **கலேவெல பிரதேச சபை** | |
| 03 தேவாஹுவ | நிலாம்தீன் மொஹமட் யாசர் |
| 13 நபடகஹவத்த | சைனுதீன் முகம்மது மகீன் |
| 16 எலமல்பொத | முகமது சர்தார் முகம்மது உஷான் |
| பட்டியல் | இஷாப்தீன் முகம்மது கவுஸ் |
| | வெய்துல்லா முஹம்மது முபீத் |
| **தம்புள்ள பிரதேச சபை** | |
| 08 நிகவத்தவாண | மொஹமட் ஜவாஹீர் முகமத் அல்ஃபாஸ் |
| **மாத்தளை பிரதேச சபை** | |
| பட்டியல் | அஹமத் ஃபளீல் அஹமத் ஃபவ்சுல் |
| **யடவத்த பிரதேச சபை** | |
| 04 நிககொள்ள | மொஹமட் மன்சூர் ஷன்சாத் ரூமி மஷூர் |
| **உக்குவெல பிரதேச சபை** | |
| 05 வரகாமுர | அப்துல் ஜலீல் அப்துல் நிசார் |
| 09 பரகஹவெல | இம்ரான் முகமது பாரிஸ் |
| 13 மரகொன | அப்துல் ஹமீது புஹாரிதீன் |
| 14 ரைதலவெல | சஹாப்தீன் மொஹமத் ஃபரோஸ் |
| **அம்பாறை மாவட்டம்** | |
| **கல்முனை மாநகர சபை** | |
| 02 ஆம் வட்டாரம் | அபூபக்கர் முகமது ரக்கீப் |
| 03 ஆம் வட்டாரம் | அப்துல் ரகுமான் அமீர் |
| 04 ஆம் வட்டாரம் | மொஹமட் சம்சுதீன் உமர்அலி |
| 05 ஆம் வட்டாரம் | முகமது சலீம் முகமது ஹரீஸ் |
| 07 ஆம் வட்டாரம் | கரீம் முகம்மது முஃபீத் |
| 13 ஆம் வட்டாரம் | மீராசாஹிப் முகமது நிசார் |
| 14 ஆம் வட்டாரம் | அப்துல் காதர் அப்துல் சத்தார் |
| 15 ஆம் வட்டாரம் | அன்பு முஹைதீன் ரோசன் அக்தார் |
| 16 ஆம் வட்டாரம் | ரஹ்மூதுல்லா மன்சூர் |
| 17 ஆம் வட்டாரம் | ஆதம்பாவா முகம்மது பைரூஸ் |
| 18 ஆம் வட்டாரம் | ரெய்னா முஹம்மது ரஸ்மீர் |
| 19 ஆம் வட்டாரம் | மஹரன் வசீர் |
| 20 ஆம் வட்டாரம் | முகம்மது யூசுப் முகமத் ஜஹுஃபர் |
| 21 ஆம் வட்டாரம் | அப்துல் ரஹிம் முகமது அஸிம் |
| 22 ஆம் வட்டாரம் | மீரா சாஹிப் அப்துல் ரபீக் |
| 23 ஆம் வட்டாரம் | முகம்மது இப்ராஹீம் அப்துல் அஸீஸ் |
| பட்டியல் | ஆதம் பாவா அரிகா |
| | அப்துல் மஜீத் சித்தி நஸ்ரீன் |
| | மௌஜூத் ஆயிஷா சித்தீகா |
| | அப்துல் ஹமீது சுயேய்ல் |
| | அப்துல் நிசார் சித்தி ரமீஷா |
| | யாக்கூப் கலீல் ரஹ்மான் |
| | முகமது இஸ்மாயில் முகமது அப்துல் மனாஃப் |
| | அப்துல் ரஹிம் பஸீரா |
| | உதுமான் லெப்பே சித்தி சமீனா |
| | அப்துல் லத்தீப் முகமது ரிபாஸ் |
| | சைனுல் ஆப்தீன் கலீலுர் ரஹ்மான் |
| | அப்துல் கபூர் முகமது நதீர் |
| **அக்கரைப்பற்று மாநகர சபை** | |
| 01 அக்கரைப்பற்று மேற்கு | அப்துல் கரீம் பதுருதீன் |
| 02 புதுப்பள்ளி | அப்துல் கபூர் அஷ்மி |
| 03 தொழில்நுட்ப கல்லூரி | முகம்மது இப்ராஹீம் முகமது சிராஜி |
| 04 காதிரிய்யா - வடக்கு | முகம்மது காசிம் முகமது யாசீர் |
| 05 காதிரிய்யா - தெற்கு | சீனிதம்பி அப்துல் அசீஸ் |
| 06 அக்கரைப்பற்று கிழக்கு | முகமது ரபீக் பாத்திமா ரஸ்னா |
| 07 நூரானியா | முகம்மது இஸ்மாயீல முகமது ரபீக் |
| 08 பதுர் | அகமது கபீர் அஹமட் ஃபாஹிம் |
| 09 அக்கரைப்பற்று நகரம் | அதாவுல்லா அஹமட் ஷகி |
| 10 டவுன் பள்ளி | அதாவுல்லா அகமது தில்ஷான் |
| 11 பெரிய பள்ளி | முகமது ஆப்தீன் சித்தி நூருல் ஐன் |
| 12 பஃலாஹ் | சைனுலாப்தீன் முகமது சபீஷ் |
| பட்டியல் | அப்துல் அமீர் இல்லுனீஷா |
| | முகம்மது நிஸார் காரியப்பர் |
| | அபுல் காசிம் முகமத் நூஹ்மான் |
| | அப்தலி முகமது சுல்பிகார் |
| | முகம்மது லெப்பே கரிமுன்னிசா |
| | நூர்தீன் முகமது சிராஜ் |
| | அகமது லெப்பே முகமது ஜப்பூர் |
| | முகம்மது இஸ்மலெப்பே ரிஸ் ரீனா |
| **நாவிதன்வெளி பிரதேச சபை** | |
| 02 சலாம்பைக்கேனி வடக்கு | அப்துல் குத்துஸ் அப்துல் சமத் |
| 05 சலாம்பைக்கேனி மத்தி | முஹைதீன் பாவா நிவாஸ் |
| பட்டியல் | முகம்மது இஸ்மாயில் முகமது ஜஹான் |
| **சம்மாந்துறை பிரதேச சபை** | |
| 02 வீரமுனை ✱✱ | அப்துல் மஜீத் முஹம்மது நவுசாத் |
| | அப்துல் காதர் முகமது ச ஹீல் |
| 03 சின்னப்பள்ளி | முகமத்துதம்பி பவுசுல்லா |
| 04 மட்டக்களப்பு த்தராவை | இஸ்ம லெப்பெ நஜீம் |
| 05 தைக்காப்பள்ளி | இபுரா லெப்பெ முகமத் மாஹிர் |
| 06 சம்மாந்துறை | அச்சி முஹம்மத் முஹம்மத் ரியாஸ் |
| 07 விளினயடி | அஹமது லெப்பே முஹமது ஜிஃப்ரி |
| 08 மலையடி | உதுமா லெப்பே அஸ்பர் |
| 09 மல்கம்பிட்டி | சஹப்தீன் நலீம் |
| பட்டியல் | ஆதம்பாவா யூசுப் லெப்பே |
| | முகம்மது சுல்தான் சரீஃபா |
| | செய்யத் முகம்மது சித்தி நீலவ்பா |
| | சீனி மொஹமட் மகம்மது முஸ்தபா |
| | கலந்தர் லெப்பே சிஹாமா |
| | யாசிம்பாவா முகமது முஸம்மில் |
| | ஆதம்பாவா அச்சி முகமது |
| **இறக்காமம் பிரதேச சபை** | |
| 01 வரிப்பொதான்சேனை வடக்கு | முகம்மது நய்ஸர் |
| 02 இறக்காமம் மத்தி | முஸ்தபா லெப்பே முஷ்மி |
| 03 இறக்காமம் வடக்கு | முகம்மது சரீபுதம்பி ஜெமீல் காரியப்பர் |
| 04 இறக்காமம் கிழக்கு | அகமது லெப்பே நஃபர் |
| 05 இறக்காமம் மேற்கு | ஜமல்தீன் கபீப் ரஹ்மான் |
| 06 இறக்காமம் தெற்கு ✱ | முஸ்தபா லெப்பே சுல்பிகார் |
| | சேகுதாவுத் சுலைகா உம்மா |
| 07 வரிப்பொதான்சேனை தெற்கு | நசீர் முகமது ஆசிக் |
| பட்டியல் | தாஜுதீன் ரபாய்தீன் |
| | சீயத் அகமது அன்வர் |
| | குதுஸ் ஃபாஹிமா |
| **அக்கரைப்பற்று பிரதேச சபை** | |
| 01 ஆலிம் நகர் | சப்பாத் அஹமத் சியான் |
| 02 இசன்கோனிசீமை | தாஹிர் முகமது ஐயூப் |
| 03 பள்ளிக்குடியிருப்பு - வடக்கு | முகமது அபூபக்கர் ராஸிக் |
| 04 பள்ளிக்குடியிருப்பு - தெற்கு | அப்துல் கபூர் ஃபர்ஷாத் |
| 05 படியாடிப்பிட்டி | அப்துல் மனாப் அஷர் |
| பட்டியல் | சீனி முகமது அலியார் |
| | ஹாஜி இப்ராஹிம் லெப்பே சாப்தீன் |
| | முகம்மது மாயேதீன் ரஹீம் |
| **பொத்துவில் பிரதேச சபை** | |
| 03 ஹிதாயபுரம் | முகமது சரிபு அப்துல் வாஹித் |
| 04 விக்டர் தோட்டம் | மீரா சாகிபு ஹாஜி முகமது சரூக் |
| 06 ரஸக் மவுலானா நகர் | முகம்மது ஹஸ்ஸிம் முகமது கியாஸ் |
| 07 சின்ன புதுக்குடியிருப்பு | மீராசாஹிப் அன்வர் சதாத் |
| 08 மதுரன்சேனை | அகமது மொஹையதீன் அப்துல் மஜீது |
| 09 பொத்துவில் டவுன் | முகம்மது அனிபா அப்துல் ரஹீம் |
| 10 கலப்புக்காடு | நிசுருல் ஹபியா முனாஸ் |
| 11 சர்வோதயபுரம் | முகம்மது ஹசன் முகமத் ஜமாக்கிம் |
| 12 சின்ன உல்லை | ஆயத்துப் பிச்சை சத்தகத்தூல்லா |
| பட்டியல் | ஜுனைதா உம்மு வஹாப்தீன் |
| | சரீபுதம்பி சப்ரா உம்மா |
| | முகமுத்து முஸ்தபா சித்தி ஜுனைதா |
| | அப்துல் மஜீத் முகமது தஜீதின் |
| | அப்துல் மஜீத் ஆசியா பீவி |
| | சேகுமதார் பஹுருதின் |
| | முகமுத்து சலீம் முகமத் ஆதம் பாவா |
| **அட்டாளச்சேனை பிரதேச சபை** | |
| 02 அல் - ஹம்ரா | மீரா சாஹிபு அமீன் |
| 03 அல் - அஷர் | ஆதம் லெப்பே அமானுல்லா |
| 04 அல் - ஹிதாயா | சீனி மொஹமட் முகமத் ஹனிஃபா |
| 05 மின்ஹாஜ் | முகமது அமீர் அன்சில் |
| 06 அரஃபா | தமீம் ஆப்தீன் |
| 07 அல் - முனீரா | மஸ்ஸூர் ரியா |
| 08 ஜும்மா மகுதி | உத்மன் கந்து ஆதம் லெப்பே |
| 09 இக்ரா | அப்துல் சமத் மஹ்மத் உவைஸ் |
| 10 தைக்க நகர் | ஆதம் லெப்பே அஜ்மல் |
| 11 புறாத்தோட்டம் | சின்ன லெப்பே கிதுர் முகம்மது |
| பட்டியல் | மீராசாபு முகம்மது ஜஹ்பர் |
| | ஆதம்பாவா பதுருதின் |
| | முகம்மது மொஹைதின் ஜெமிலா |
| | சலீம் பாத்திமா யாஸ்மின் |
| | ஆதம் லெப்பே மு. அமஸா ரிபாய் ரிஸ்பா |
| **காரைதீவு பிரதேச சபை** | |
| 01 மாளிகைக்காடு கிழக்கு | அப்துல் மஜீது யாஹீர் |
| 02 மாளிகைக்காடு வெஸ்ட் | அப்துல் ரசாக் முகமது ஃபஸ்மிர் |
| 05 மாவடிப்பள்ளி | முஸ்தாபா ஜ லீ ல் |
| பட்டியல் | முகம்மது ஹனிஃபா முகமது இஸ்மாயில் |
| | முகம்மது நஜிமுதீன் முகம்மது ரனீஸ் |
| **நிந்தவூர் பிரதேச சபை** | |
| 01 மாந்தோட்டம் | அலியார் அலிகான் |
| 02 மீரா நகர் | யூசுப் லெப்பே சுலைமா லெப்பே |
| [illegible] | [illegible] |
| 04 மத்திய பிரிவு | முகமது அலியார் முகமத் தாஹிர் |
| 05 புது நகர் | முகம்மது முஸ்தபா மொஹமட் அன்சார் |
| 06 நெல்லிதீவு | முகம்மது தம்பி மொஹமட் சப்ராஸ் |
| 07 முஷ்தபா புரம் | முகம்மது இஸ்மாயில் பாத்திமா ரிஹானா |
| 08 அரசடி நகர் | கலந்தர் மரைக்கர் முகமது ஜரிஸ் |
| பட்டியல் | மீரா லெப்பே அப்துல் மஜீத் |
| | அதம்பா அஸ்பர் |
| | முஹம்மத் முஸ்தபா சம்சுடீன் |
| | அலியார் பஷீரா உம்மா |
| | ஹிழ்ரு மஹ்மூத் ஜேசீமா |
| **நுவரெலியா மாவட்டம்** | |
| **நுவரெலியா மாநகர சபை** | |
| பட்டியல் | கொனாமுடிலியார் அப்துல் வஹீத் மொஹமட் ஃபாலில் |
| **ஹட்டன் டிக்கோயா நகர சபை** | |
| 05 டன்பார் ✱ | அப்துல் ஜப்பார் முகமத் ஃபாமிஸ் |
| **தலவாக்கல லிந்துலா நகர சபை** | |
| பட்டியல் | முகம்மது ஷரீஃப் ஜெய்னுலாப்தீன் |
| **கொத்மலே பிரதேச சபை** | |
| 08 மல்லந்தா ✱ | ஜமால்தீன் முஹம்மது பாரூக் |
| 10 ஹப்புகஸ்தலாவ | மஸீஹூதீன் அனசுல்லாஹ் |
| **யாழ்ப்பாண மாவட்டம்** | |
| **யாழ்ப்பாண மாநகர சபை** | |
| 10 புதிய சோனகர் தெரு | முத்து முகம்மது முகமது நிபாஹிர் |
| 13 பழைய சோனகர் தெரு | கச்சி முஹம்மத் முஹமது நியாஸ் |
| **குருநாகல் மாவட்டம்** | |
| **குருநாகல் மாநகர சபை** | |
| 13 தெலியகொன்ன | மொஹமட் மஹரூஃப் மொஹமட் ரிஷ்வி |
| பட்டியல் | முகம்மது மௌயினுதீன் முகம்மது அஷார்டீன் |
| **குளியாப்பிட்டி நகர சபை** | |
| 06 பல்லபிட்டிய ✱ | நூர் முகமத் முகமத் ரியாஸ் |
| **கல்கமுவ பிரதேச சபை** | |
| பட்டியல் | முகம்மது முகிதீன்கே அமீர் பாரிஸ் |
| | பாத்திமா ரிஹானா அஹமத் |
| **நிகவெரடியா பிரதேச சபை** | |
| 16 நமுவாவ | நூஹு லெப்பே யாகூப் |
| பட்டியல் | சலதீன்கே நிஸ்தார் |
| | முஹம்மதுகே முஹம்மது நியாஸ் |
| | அஹமத் லெப்பே மூசா முஹமத் ரெஸ்வி |
| **கொபேகன பிரதேச சபை** | |
| 05 பன்னவ | முகம்மது ஜுனைதீன் முகம்மது சியாம் |
| **மகவ பிரதேச சபை** | |
| 09 மகவ ✱ | அஹமது மைதீன் அபீதாலிபு |
| **இப்பாகமுவ பிரதேச சபை** | |
| 25 கதலகொட | முகம்மது சுபைர் முகமது ஃபாஹிம் |
| பட்டியல் | அப்துல் சமது அக்பர் கலீல் |
| **பண்டுவஸ்நுவர பிரதேச சபை** | |
| 08 பலுகஸ்வெவ | முகம்மது தாஹிர் முகமது ஜபீர் |
| பட்டியல் | செசடி முகமது ஃபைசர் |
| **பிங்கிரிய பிரதேச சபை** | |
| பட்டியல் | அப்துல் ஹசன் இஸ்மத் ஹசன் |
| **உடுபத்தாவை பிரதேச சபை** | |
| 03 திவுரும்பொல | ஹால்லாஜிம் முகமது ஹிசான் |
| **பன்னல பிரதேச சபை** | |
| 13 எலபடகம ✱ | அப்துல் வஹாப் முகமத் ரின்ஸான் |
| பட்டியல் | முகம்மது சாலி முகமது அனஸ் |
| | முகம்மது மகூத் முகமத் ஷஃபீக் |
| | K.S.M. ஸஃப்ரான் |
| **குளியாப்பிட்டிய பிரதேச சபை** | |
| 09 பொத்துஹெர | அகமது சலீம் முகமத் சாஜஹான் |
| 10 கெகுனகொல்ல | பீர் முஹம்மது முகமத் இர்பான் |
| 12 - சியம்பலாகஸ்கொடுவ | முகம்மது சத்தார் முகமத் இல்ஹாம் |
| பட்டியல் | அஹமது கபீர் மொஹம்மது ரிபாய் |
| | முகம்மது காசிம் இர்பான் |
| | முஹம்மது இப்ராஹிம் முஹம்மது சபீர் |
| **பொல்கஹவெல பிரதேச சபை** | |
| 18 கொடவெள ✱ | நாகூர் அடுமை மொஹமட் ஃபர்சான் |
| பட்டியல் | தாஜுதீன் முகமட் கியாஸ் |
| | செய்து அகமத் சித்தி நஜிலா |
| குருநாகல் பிரதேச சபை | |
| 19 மல்லவப்பிட்டியா | முகமட் கவுஸ் முகமத் ஃபாஹிம் |
| பட்டியல் | ஜிப்ரி திக்ருல்லா |
| மாவதகம பிரதேச சபை | |
| 14 பரகஹதெனியா | முகம்மது லாஹிர் முகமத் ரிபால் |
| ரிதீகம பிரதேச சபை | |
| 13 பானகமுவ | முஹம்மத் லாஹிர் முகமத் நவ்ஃபல் |
| பட்டியல் | இஸ்மாயில் லெப்பே அப்துல் பரீத் |
| | முகமது சாபி மொஹமட் ஃபாயிஸ் |
| | ஹம்மாத் முஹம்மத் அஸ்ஸார் |

(பக்.06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அனஸ் அப்பாஸ்

# விவசாயிகளுக்கும், வன பயன்பாட்டார்களுக்கும் வழி சமைக்கும் முஹம்மத் அனூஷ்



அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சம்மாந்துறையில் வசிக்கும் மன்சூர் முஹம்மத் அனூஷ், ஹஜ்ஜிப் போடியார் வம்சத்தைச் சேர்ந்த மீரா முகைதீன் சுலைமான் லெப்பை பொறியியலாளரின் பேரன் எம்.ஐ. மன்சூர் ஆசிரியரின் அன்பு மகனாவார்.

எஸ்.எல்.எம். ரோஜஹா - எம்.ஐ. மன்சூர் தம்பதிகளின் புதல்வர் அனூஷ் வாழும் ஊர் பெரும்பாலும் விவசாயிகளால் சூழப்பட்ட ஒரு பிரதேசம். ஊரை சூழ்ந்து நெற்கதிர் வேளாண்மை பரவலாக இடம்பெறுகின்றது. குறிப்பாக அனூஷின் உறவினர்களும் விவசாயிகளாகக் காணப்படுகின்றனர்.

அன்றாடம் தான் வயலில் கண்ட குறைபாடுகளை நிவர்த்திக்கும் செயற்பாடாக ஒரு முயற்சியை மேற்கொண்டார் அவர். வயலுக்குச் சென்ற பொழுதுகளில் அங்கு பயிர்களுக்கு எண்ணெய் தெளிப்பதை ஆர்வமாக நோக்குவார். முதலில் இரு விவசாயிகள் பயிர்களை கைகளால் ஒதுக்கிக் கொண்டு செல்ல, பின்னாலிருந்து ஒருவர் எண்ணெய் தெளித்துக் கொண்டு வருவார்.

இவ்வாறு எண்ணெய் தெளித்தவாறு வருகின்ற விவசாயியின் கால்களில் பல போது வேளாண்மை மிதிபட்டு சேதமாகும். இதனை நிவர்த்திக்க வழிகள் இல்லையா என்ற கேள்வியை அவ்விவசாயிகளிடம் கேட்க, ''தேசிய மற்றும் சர்வதேச அளவில்கூட இவ்வாறுதான் மரபு ரீதியான நடைமுறை இருக்கின்றது என நினைக்கின்றோம். வேறு வழிகள் எமக்குத் தெரியாதே'' என பதில் கிடைத்தது.

அது மட்டுமன்றி, வேளாண்மைகளை அகற்றுவதற்கும் இலகுவாக முடிகின்றது. பயிர்களுக்கு இரசாயன பதார்த்தங்களைத் தெளிக்கும்போது விவசாயிகள் பல போது ஒவ்வாமைகளுக்கு உள்ளாகின்றனர். அவ்வாறான துரதிஷ்டமான நிலைகளில் இருந்தும் இக்கருவி பாதுகாக்கின்றது. அத்துடன், வனப் பகுதிகளுக்குள் செல்லும்போது உள்ள தடைகளை அகற்றுவதற்கு இது உதவுவதுடன், உட்செல்லத் தேவையான வழியை ஏற்படுத்துவதுடன், வரும்போது பாதை மாறிச் செல்லாமல் குறித்த வழியாலே காட்டிலிருந்து வெளியேறவும் இக்கருவி உதவுகின்றது.

அகற்றும் பணிகளை செய்பவர்களின் கைகள் பலபோது அறுபட்டு குருதி வெளியேறுவதுடன், விஷ ஜந்துக்களின் தீண்டல்களும் பலபோது உபாதைகளை தோற்றுவித்தன. குறிப்பாக, விவசாய செயற்பாடுகளின்போது பாம்பு தீண்டி பலர் இவ்வூரில் உயிரிழந்துள்ளனர். இந்த அவதான உந்துதல்தான்' அனூஷ் ஒரு கண்டுபிடிப்பாளர் ஆவதற்கு வழி சமைத்தது.

வழித் தீர்வு கருவி (ROUTE CLEARING DEVICE) இவரது கண்டுபிடிப்பு.இக்கருவியால் வேளாண்மைக்கு எவ்வித பாதிப்புமின்றி, விஷ ஜந்துக்களில் இருந்து பாதுகாப்புடன், சாய்ந்து இருக்கும் கதிர்களுக்கும் உரத்தை உட்புகுத்த முடிவதுடன், களைகளையும், கலப்புக்களையும்

### இக்கருவிக்கு கிடைத்த அங்கீகாரங்கள்

மாகாண மட்ட போட்டிகளில் கிழக்கு மாகாணத்தில் முதலிடம்.

அகில இலங்கை ரீதியான ''சஹஸக் நிமவும்'' போட்டியில் 'மெரிட்' விருது.

தேசிய ரீதியான SLAAS போட்டியில் இரண்டாமிடம் (வெள்ளிப் பதக்கம்)

''முதன் முதலாக மாகாண போட்டிகளில் பங்கேற்றபோது 250 கண்டுபிடிப்புக்கள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இதில் ஒரு சில கண்டுபிடிப்புக்களே அடுத்த கட்ட அங்கீகாரத்தைப் பெரும். ஏனையவை தர வரிசையில் இடம்பிடிக்காது என்ற உள ரீதியான தாக்கம் என்னை ஆட்கொண்டது. இருந்தாலும், எனது முயற்சி மீதான நம்பிக்கை அன்று என்னை முதலிடமாக மிளிரச் செய்தது.

அடுத்து, தேசிய போட்டிகளில் கிடைத்த அனுபவங்களால் ஏற்கனவே அங்கீகாரம் கிடைத்த கண்டுபிடிப்புக்கள் தொடர்பிலான அறிவு கிட்டியது. இதன் பயனாக புதிய முயற்சிகளுக்கான தோற்றுவாய் என்னுள் மையம் கொண்டது. ஆகவே, தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றேன்'' என தனது பயண அனுபவத்தை இங்கு பகிர்ந்துகொள்கின்றார்.

இக்கருவியால் விவசாயிகளும், வனப் பயணங்களை மேற்கொள்வோரும், வனத் தொழிலாளர்களும் பயன்பெறுவது திண்ணம். இதனை உருவாக்குவதற்கான செலவு அண்ணளவாக ரூபா. 3000. இதற்கான பதிப்புரிமைக்கு விண்ணப்பித்துள்ளார் அனூஷ். பதிப்புரிமை கிடைத்ததும், இதனை தொடராக உற்பத்தி செய்து ரூபா. 3500 உத்தேச விலையில் சந்தைப்படுத்தும் எண்ணம் அவருக்கு இருக்கின்றது.

அல்ஹம்துலில்லாஹ், தட்டிக் கொடுத்த தந்தை மன்சூர், வலயக் கல்வி அலுவலர் ஹுசைன் சேர், பாடசாலை அதிபர் அவர்கள், ஆசிரியர் சர்ஜூன் சேர், புத்தாக்க உற்சாகமூட்டல் செய்த இர்பான் மௌலானா சேர், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய பாடசாலை சமூகம், நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றார் அனூஷ்.

''தேவை அறிந்து, இயலுமைகளை உள்ளத்தால் உணர்ந்து உத்வேகத்துடன் முயற்சிக்கும்போது, சமூகத்தில் இருந்து எதிர்கொள்ளும் சவால்களை முறியடிக்கும் விதமாக, தொடராக புத்தாக்க போட்டிகளில் உங்கள் முயற்சிகளை பங்கேற்க செய்யுங்கள். வெற்றி ஒருநாள் நிச்சயம் உங்களை வந்தடையும்'' என இளைஞர்களையும், இளம் கண்டுபிடிப்பாளர்களையும் நோக்கி அனூஷ் அறிவுரை வழங்குகின்றார்.


உயர்தர வணிகப் பிரிவில் கற்று வரும் 19 வயதான அனூஷின் இன்னும் சில கண்டுபிடிப்புக்கள் பரீட்சார்த்த நடவடிக்கைகளில் உள்ளன.

---

• உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்

## கூட்டு இஜ்திஹாத்: அறிமுகமும் பிரயோகமும் (06)

# கூட்டு இஜ்திஹாதின் வரலாறு



### நான்காவது கட்டம்: கூட்டு இஜ்திஹாதை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கான முயற்சிகள்

இஜ்திஹாத் செயற்பாடு தனிநபர் முயற்சிகளாலும் நடைபெற முடியும். அதற்கும் இஸ்லாம் அங்கீகாரம் கொடுத்துள்ளது. ஆனால் சமூக, பொதுப் பிரச்சினைகளின் போது தனிநபர் இஜ்திஹாதினால் மாத்திரம் தீர்வைப் பெறும் நிலையில் இருந்து கூட்டாக, நிறுவனமயப்பட்டு தீர்வுகள் பெறப்பட வேண்டும் என நவீன கால அறிஞர்கள் வலியுறுத்த ஆரம்பித்தார்கள். இதற்கான நடைமுறை வடிவங்களும் இஸ்லாமிய உலகில் தோற்றம் பெறலாயிற்று.

1950 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில் கூட்டு இஜ்திஹாத் உயிர்ப்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றிய கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. இதற்கான மாநாடுகள், கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

உஸ்தாத் அஹ்மத் முஹம்மத் ஷாகிர் (1958), ஷெய்க் அப்துல் வஹ்ஹாப் கல்லாப் (1956), ஷெய்க் மஹ்மூத் ஷல்தூத் (1963), உஸ்தாத் முஸ்தபா ஸர்கா (1999), அல்லாமா முஹம்மத் தாஹிர் இப்னு ஆஷூர் (1973), கலாநிதி முஹம்மத் யூசுப் மூஸா (1963), கலாநிதி முஹம்மத் ஸலாம் மத்கூர், கலாநிதி யூசுப் அல்கர்ளாவி, ஷெய்க் மன்னாஉல் கத்தான், கலாநிதி குத்ப் ஸானு என பல அறிஞர்கள் இதன் அவசியம் பற்றிய கருத்தை வலியுறுத்தினார்கள்.

இது தொடர்பான தூனிசிய அறிஞரான அல்லாமா முஹம்மத் தாஹிர் இப்னு ஆஷூர் கூறிய கருத்து: இஜ்திஹாத் ஒரு சமூகக் கடமை. நாடுகளின் தேவை, நிலைமைகளுக்கு ஏற்ப இதன் கடப்பாடு காணப்படும். சாதனங்களுடன் இயலுமையும் இருந்து இதில் குறைபாடு செய்தால் சமூகம் குற்றத்திற்கு உள்ளாகும். இந்த வகையில் இக்காலத்திற்கான சமூகத்தின் குறைந்த கடமை இந்த நோக்கத்தை அடைவதற்காக அறிவியல் சபையை உருவாக்குவது. இதில் பல்வேறு மத்ஹபுகளையும் சேர்ந்த ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தலைசிறந்த அறிஞர்கள் இச்சபைக்கு வருகை தந்து சமூகத்தின் தேவைகளை தமக்கு மத்தியில் விரிவாகக் கலந்துரையாடி சமூகம் செயற்பட வேண்டிய கருத்தை அனைவரின் உடன்பாட்டுடன் பெற வேண்டும். பின்னர் இதனை இஸ்லாமிய தேசங்களுக்கு அறிவிக்க வேண்டும். இவ்வாறு நடைபெறுமாயின் எவரும் இதனைப் பின்பற்றுவதில் இருந்து தவிர்ந்து கொள்ள மாட்டார்கள்''.

இது பற்றி கலாநிதி முஹம்மத் யூசுப் மூஸா கூறிய கருத்து: ''அரபு மொழிக்கான சபை இருப்பது போன்று இஸ்லாமிய சட்டத்திற்கான சபையும் இருக்க வேண்டிய காலம் இது என நாம் ஆழ்ந்து நம்புகின்றோம். சட்ட ஆய்வுகள் மூலம் நாம் எட்ட விரும்பும் இலக்கை அடைய வேண்டுமாயின் சட்டத்திற்கான சபையை உருவாக்கினாலேயன்றி அது சாத்தியப்பட மாட்டாது. இதற்கான நாம் முழு முயற்சியுடன் உழைத்து வருகின்றோம்''.

இது பற்றிய அறிஞர் முஸ்தபா ஸர்காவின் கருத்து: ''இஜ்திஹாத் ஷரீஆவின் பார்வையில் தொடராக இருக்க வேண்டிய ஒரு பணி. இதன் மூலமாகத்தான் பலமான ஆதாரங்களின் அடிப்படையில் ஆழமான ஆய்வுகள் செய்து நாம் எதிர்கொள்ளும் அதிகமான பிரச்சினைகளுக்கு சந்தேகங்கள், குற்றச்சாட்டுக்கள் ஏற்படாத வண்ணம் ஷரீஆவின் மிகப் பொருத்தமான தீர்வுகளைப் பெற முடியும். தேங்கிய, மறுதலிக்கக் கூடிய கருத்துக்களை தோல்வியடையச் செய்ய முடியும். இதற்கான ஒரேயொரு வழிமுறை தான் உள்ளது. அதுவே தனிநபர் இஜ்திஹாதுக்குப் பகரமாக கூட்டு இஜ்திஹாதை நோக்கிச் செல்வது. இதற்கான இஸ்லாமிய உலகில் உள்ள தலைசிறந்த அறிஞர்களை ஒன்று சேர்த்த சட்டத்திற்கான மன்றத்தை ஸ்தாபிக்க வேண்டும்''.

இப்படியாக பல முன்னணி இஸ்லாமிய அறிஞர்கள் கூட்டு இஜ்திஹாதிற்கான சபை உருவாக்கப்படுவதன் தேவையை வலியுறுத்தினார்கள். இந்த வகையில் 1961 இல் கெய்ரோவில் இஸ்லாமிய ஆய்வுகளுக்கான சபை உருவாக்கப்பட்டது. 1981 இல் ஜித்தாவில் இஸ்லாமிய சட்ட மன்றம் தோற்றுவிக்கப்பட்டது. இந்தியாவில் 1988 இல் இஸ்லாமிய சட்ட மன்றம் உருவானது. 2002 ஆம் ஆண்டு வொஷிங்டனில் ஷரீஆ அறிஞர்களுக்கான மன்றம் தோற்றம் பெற்றது.

ஐரோப்பிய முஸ்லிம்களை மையப்படுத்தி 1997 ஆம் ஆண்டு லண்டனில் பத்வாவுக்கும் ஆய்வுக்குமான ஐரோப்பிய கவுன்ஸில் உருவாக்கப்பட்டது. அனைத்து நாடுகளையும் இணைத்த வகையில் முஸ்லிம் அறிஞர்களுக்கான சர்வதேச ஒன்றியம் 2004 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

இவ்வாறு நாடளாவிய ரீதியிலும், பிராந்திய அடிப்படையிலும், சர்வதேச மட்டத்திலும் இஸ்லாமிய ஷரீஆ ஆய்வுகளுக்கான மன்றங்கள் தோன்றின. மற்றும் துறைசார்ந்த வழிகாட்டல்களுக்கான சட்ட மன்றங்களும் உருவாக்கப்பட்டன. வங்கி கொடுக்கல் வாங்கல் தொடர்பான நடவடிக்கைகள் பற்றிய ஷரீஆவின் நிலைப்பாடுகளை முன்வைப்பதற்கான சபை, ஸகாத் தொடர்பான சட்டங்களை பெற்றெடுப்பதற்கான சபை போன்றனவும் தோன்றின. இவையனைத்தும் முஸ்லிம் உம்மாவுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கி வருகின்றன.

---

## கண்டி...

(01 ஆம் பக்கத் தொடர்)

எழுத்து மூலமான முன்வைப்புக்கள் 03 பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும் எனவும், சம்பவம் நடந்த இடம், திகதி, நேரம், சம்பந்தப்படுபவரின் பெயர் அல்லது நிறுவனத்தின் பெயர் போன்றவை குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. புகைப்படங்களும் சலனப் படங்களும் கூட இவற்றுடன் இணைக்கப்பட முடியும்.

குறித்த தகவல்களை Regional Coordinator, Kandy Regional Office, Human Right Commission, No 8/1 Primrose Road, Kandy என்ற முகவரிக்கு ஏப்ரல் 21 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

## 20 ஆவது...

(01 ஆம் பக்கத் தொடர்)

கடந்த 19 ஆம் திகதி இந்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட விருந்த போதிலும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதனால் இது சாத்தியமாகவில்லை. எனவே பாராளுமன்றம் மீண்டும் 08 ஆம் திகதி கூடும் போது இந்தத் திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கருத்துத் தெரிவிக்கையில், 20 ஆவது திருத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்ற ஷரத்தை ஜேவிபி உள்வாங்கத் தயார் என்றால் தாம் இந்தப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவித்தார்.

## அம்பாந்தோட்டை துறைமுகம் - இராணுவக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டியதில்லை



அம்பாந்தோட்டை துறைமுகத்தை இராணுவக் கண்ணோட்டத்துடனோ மூலோபாயப் பார்வையுடனோ யாரும் நோக்கத் தேவையில்லை என சீன அரசாங்கம் அறிவித்துள்ளது. இரு தரப்புக்கும் இடையிலான புரிந்துணர்வின் அடிப்படையிலும் நன்மைகளின் அடிப்படையிலுமே அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம் நடைபெறுகிறது. அது உள்நாட்டில் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு பெரும் பங்களிக்கும். இந்தத் திட்டத்தை எப்படியும் நடைமுறைப்படுத்துவற்கு இரு தரப்பும் உறுதியாக நாடியுள்ளோம் என சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹுவா சுன்யிங் தெரிவித்தார்.

சீனாவின் இந்தத் திட்டத்தை பலரும் வித்தியாசமான [illegible] நோக்குகிறார்கள். குறித்த நாடுகள் எமது நீடித்த கலந்தாலோசனைகளையும், இணைந்த பங்களிப்புக்களையும், நன்மைகளைப் பகிர்ந்து கொள்வதையும் மக்களுக்கு பயன்களை வழங்குவதையும் பின்தொடர முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாஸித் தேடல்கள் (10)

# ஒரு தலைப்பின் மகாஸிதுகளை அடையாளம் காண்பதற்கான கேள்விகள்



ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்

மகாஸிதுஷ் ஷரீஆ என்பது, உலகில் ஷரீஆ இறக்கப்பட்டமைக்கான நோக்கங்கள். அவை முழுமையாக மனித நலன் சம்பந்தப்பட்டவை. அவை இலக்கு வடிவிலும் காணப்பட முடியும் மூலோபாய வடிவிலும் காணப்பட முடியும். உலகம் சம்பந்தப்பட்ட மகாஸிதுகளும் உண்டு, மறுமை சம்பந்தப்பட்ட மகாஸிதுகளும் உண்டு. இது மகாஸிதுஷ் ஷரீஆ என்றால் என்ன என்பதன் மூலம் நாம் விளங்கிக் கொள்ளும் பொதுக் கருத்தாகும்.

இதன் மூலம் ஷரீஆவுக்கு மொத்தமான நோக்கங்கள் மாத்திரமே காணப்படுகின்றன என்று எவரும் நினைத்து விடக் கூடாது. மாற்றமாக ஷரீஆவின் ஒவ்வொரு கிளைப் பகுதிக்கும் அது போல் ஒவ்வொரு சட்டத்திற்கும் கூட தனியாக மகாஸிதுகள் இனங்காணப்பட முடியும். அந்தவகையில் மகாஸித் எனும் சொல்லை நாம் ஷரீஆவின் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக பிரயோகிக்கவும் முடியும்.

அதாவது மகாஸிதுல் உஸ்ரா - குடும்பத்தின் மகாஸிதுகள், மகாஸிதுல் இபாதாத் - வணக்க வழிபாடுகளின் மகாஸிதுகள், மகாஸிதுஸ் ஸலாத் - தொழுகையின் மகாஸிதுகள், மகாஸிதுஸ் ஸுஜூத் - ஸுஜூதின் மகாஸிதுகள் என ஷரீஅத்தின் பெரிய பரப்பு முதல் மிகச் சிறிய பரப்பு வரை ஒவ்வொன்றுக்கும் பிரயோகிக்க முடியும்.

ஆனால் இங்கு எழுகின்ற முக்கியமான கேள்வி என்னவெனின், குறித்த ஒரு தலைப்பின் மகாஸித்கள் எவை என்பதை அடையாளம் காண்பது எவ்வாறு என்பதுதான். இந்தக் கேள்விக்கான எளிமையானதொரு பதிலை வழங்குவதுதான் இந்தப் பத்தியின் நோக்கம்.

குறித்த ஒரு தலைப்பின் அல்லது துறையின் அல்லது சட்டத்தின் மகாஸிதுகளை அறிந்து கொள்வதற்கு முக்கியமாக மூன்று கேள்விகளுக்குப் பதில் காண்பது அவசியமாகிறது.

1. ஏன்?
2. என்ன விளைவுகள் அடையப் பெற வேண்டும்?
3. எதன் மீது எழுந்து நிற்கின்றது?

இந்த மூன்று கேள்விகளுக்கும் அளிக்கப்படும் பதில்கள்தான் குறித்த தலைப்பின் மகாஸிதுகளாக அமையும். இந்த ஒவ்வொரு கேள்வியையும் தனித் தனியாக விளங்கப்படுத்த முன்னர் இங்கு ஒரு விடயத்தைக் குறிப்பிட வேண்டும். அதாவது, மகாஸித்களை இனம்காண்பதற்கு இந்த மூன்று கேள்விகள் கேட்கப்பட வேண்டும் என்று ஆரம்ப கால மகாஸித் அறிஞர்களும் சரி நவீன கால மகாஸித் அறிஞர்களும் சரி தனித்துக் கூறியது கிடையாது.

ஆனால் மகாஸித் பற்றிய ஆய்வுகளை தொகுத்து நோக்கும் பொழுது, அறிஞர்கள் எவற்றை எல்லாம் மகாஸித் என்று அடையாளம் காட்டியிருக்கிறார்கள் எனின், அவை மிகப்பெரும்பாலும் இந்த மூன்று கேள்விகளுக்கான பதில்களாகவே காணப்படுகின்றன. அந்த வகையில் இது எனது தனிப்பட்டதொரு இஜ்திஹாத் என்றே சொல்ல வேண்டும். மகாஸித் பற்றிய ஆய்வுகள் எல்லாமே மாற்றுப் பார்வைகளுக்கு இடம் வைத்துள்ளவை என்ற வகையில் எனது இந்த இஜ்திஹாதிலும் அதே இடம் இருக்கிறது என்பதை முதலில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

### ஏன்?

ஏன் என்பது எந்தவொரு விடயத்தினதும் மகாஸிதை அறிந்து கொள்வதற்கான மிக அடிப்படையான ஒரு கேள்வியாகும். இது குறித்து விரிவாகப் பேசிய நவீன அறிஞர்களில் கலாநிதி ஜாஸிர் அவ்தா அவர்கள் முதன்மையானவர். அவர் குறிப்பிடுவது போல்[1] ஏன் என்ற கேள்வி வரலாற்று நெடுகிலும் மனிதன் கேட்டு வந்த கேள்விதான். அந்தக் கேள்விதான் உலகில் தத்துவ சிந்தனையை உருவாக்கியது. இஸ்லாமிய பாரம்பரியத்திற்குள்ளே அல்லாஹ்வின் சட்டங்களுக்கும் செயல்களுக்கும் இந்தக் கேள்வி தொடுக்கப்படுகின்ற பொழுதுதான் மகாஸிதுகள் தோற்றம் பெறுகின்றன. கலாநிதி வஸ்பி ஆஷுர் அவர்கள் குறிப்பிடுவது போல்[2] அல்லாஹ்வின் அடிப்படையான பண்புகளில் ஒன்று அவன் "ஹகீம்" என்பதாகும். எந்த ஒன்றையும் ஒரு நியாயம், காரணத்துடனேயே செய்பவன் என்பதே இதன் பொருள். எனவே அல்லாஹ்வின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் கண்டிப்பாக ஒரு காரணம் இருக்கிறது. இங்குதான் அல்லாஹ்வின் நடவடிக்கைகள் குறித்து ஏன் என்ற கேள்வி கேட்கப்படுவதற்கான நியாயம் உருவாகிறது.

ஏன் என்ற கேள்வியின் மூலம் ஒரு விடயத்தின் இருப்புக்கான நியாயம் என்ன என்பதுதான் முக்கியமாகத் தேடப்படுகிறது. இப்படி ஒரு விடயம் ஏன் இருக்கிறது? அல்லாஹ் ஏன் இவ்வாறு ஒரு செயலை வைத்திருக்கிறான்? உதாரணமாக குடும்பம் என்ற ஒரு முறைமையை அல்லாஹ் இந்த உலகில் ஏன் வைத்துள்ளான்? உலகில் மனித இனத்தின் இருப்பும், அதன் கௌரவமும் பாதுகாக்கப்படுதல். இதுதான் குடும்பம் ஏன் என்ற கேள்விக்கான பதில்.

இதனைத்தான் இமாம்கள் 'ஹிப்ழுன் நஸ்ல்' எனும் கலைச் சொல் மூலம் அடையாளப்படுத்தியிருக்கிறார்கள். அதுபோல் தஃவா ஏன்? உலகிலும் மறுமையிலும் மனித இனத்தின் விமோசனம். உலகில் மனித இனம் அழிவிலிருந்து காக்கப்படல். இதுதான் ஏன் என்ற கேள்விக்கான பதில். இந்தப் பதில்களும் மகாஸிதுகளில் ஒன்று என்பதுதான் நாம் புரிந்து கொள்ள வேண்டிய உண்மை.

### என்ன விளைவுகள்அடையப் பெற வேண்டும்?

இது மகாஸிதை அறிந்து கொள்வதற்கான மற்றொரு கேள்வி. ஒரு விடயத்தை அல்லது சட்டத்தை நடைமுறைப் படுத்துவதன் ஊடாக எதிர்பார்க்கப் படும் மாற்றத்தை இது குறித்து நிற்கின்றது. இது மிகப் பெரும்பாலும் குறித்த தலைப்புடன் சம்பந்தப்பட்ட விதத்தில் உலகத்தில் நடைபெற வேண்டிய மாற்றங்களையும் மறுமையின் பேறுகளையும் உள்ளடக்கியிருக்கும். மற்றொரு வகையில் சொன்னால் நாம் ஒரு சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் எதனைச் சாதிக்க விரும்புகிறோம்? எதனை விளைவாகக் கொண்டுவரப் போகிறோம்? என்ற கேள்விகளுக்கான பதில்களாக அமையும்.

முதலில் கேட்கப்பட்ட ஏன் என்ற கேள்விக்கும் இந்தக் கேள்விக்குமிடையிலான அடிப்படை வேறுபாடு என்னவெனின், ஏன் என்ற கேள்வியின் பதில் குறித்த விடயத்தின் இருப்பு சம்பந்தப்பட்டது, இந்தக் கேள்வியின் பதில் குறித்த விடயத்தின் விளைவு சம்பந்தப்பட்டது.

உதாரணமாக, குடும்ப வாழ்வின் மூலம் என்ன விளைவுகள் அடையப் பெற வேண்டும் என்ற கேள்விக்கு, அல்குர்ஆன் குறித்துக் காட்டுவது போல்[3] 'ஸகன்' எனும் அமைதியைப் பெற்றுக் கொள்ளுதல், ஆறுதலை அடைந்து கொள்ளுதல், என்ற பதிலும் ஒன்றாகும். இது குடும்ப வாழ்வின் மூலம் அடையப் பெறும் ஒரு விளைவு என்றவகையில், இதுவும் குடும்ப வாழ்வின் மகாஸிதுகளில் ஒன்றாக மாறுகிறது.

அதுபோல் தஃவாவின் மூலம் என்ன விளைவுகள் அடையப் பெற வேண்டும் என்றொரு கேள்வி கேட்கப்பட்டால், பௌதீக ரீதியாகவும் சரி சிந்தனை ரீதியாகவும் சரி, உலகில் அடிமைத்துவம் அகற்றப்பட்டு சுதந்திர சூழல் ஏற்படுத்தப்படல் என்பதும் ஒரு பதிலாக அமையும். இது தஃவாவின் மூலம் எதிர்பார்க்கப்படும் முக்கிய ஒரு விளைவு. எனவே இதுவும் தஃவாவின் மகாஸிதுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இந்தக் கேள்வி மகாஸிதை அறிந்து கொள்வதற்கான கேள்விகளுள் ஒன்று என்பதை முதலில் நாம் அல்குர்ஆனில் இருந்தே புரிந்து கொள்ள முடியும். ஏனெனில் அல்குர்ஆன் பல சமயங்களில் ஒன்றன் விளைவை அதன் நோக்கமாகக் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம். உதாரணமாக தொழுகை பற்றிப் பேசும் பொழுது, "தொழுகை பாலியல் பாவங்களையும் ஏனைய குற்றங்களையும் விட்டுத் தடுக்கிறது..." (அன்கபூத் - 45) என்கிறது. இங்கு தொழுகை நிறைவேற்றப்படும் பொழுது, அது தனிமனிதனிலும் சரி சமூகத்திலும் சரி பாவச் செயல்களைக் குறைக்கும் விளைவைக் கொண்டு வருகிறது.

அதுபோல் பல்வேறு மகாஸித் ஆய்வுகளிலும் இந்த அணுகுமுறையைக் காணக் கூடியதாகவுள்ளது. உதாரணமாக கலாநிதி அஹ்மத் அர்ரைஸூனி [illegible] உளநிலையை அடைந்து கொள்ளுதல் என்பார்[4]. இது நோன்பு நோற்பதால் ஒவ்வொருவரிலும் ஏற்பட முடியுமான விளைவு.

### எதன் மீது எழுந்து நிற்கின்றது?

மகாஸிதை அறிந்து கொள்வதற்கான மற்றொரு கேள்வி இது. இங்கு இருப்பு, விளைவு என்ற பரப்புக்கள் அன்றி, ஒரு குறித்த விடயத்தினை தாங்கி நிற்கும் காரணி எது? என்ற தேடல் காணப்படுகின்றது. இதனை மற்றொரு வகையில் கூறினால் ஒரு விடயத்தின் இருப்பு அல்லது விளைவு பிறிதொன்றில் தங்கியிருக்குமாக இருப்பின் அந்தப் பிறிதொன்றும் கூட குறித்த விடயத்தின் மகாஸிதுகளில் ஒன்றாகக் கருதப்படும்.

உதாரணமாக, குடும்ப வாழ்வு எதன் மீது எழுந்து நிற்கின்றது? என்ற கேள்விக்கு அல்குர்ஆன் வழங்கும் பதில், அன்பும் அருளும் என்பதாகும்[5]. இதனால்தான் அதிகம் அன்பு செலுத்தக் கூடிய பெண்ணைத் தேர்வு செய்து திருமணம் செய்யுமாறு நபியவர்கள் இளைஞர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்கள்[6]. இது குடும்ப வாழ்வு எழுந்து நிற்கும் காரணிகளில் ஒன்றைப் பேசுகிறது. குடும்ப வாழ்வுக்கு இந்தக் காரணி பிரதானமானது என்றவகையில் இதுவும் குடும்ப வாழ்வின் மகாஸிதுகளில் ஒன்றாகிறது.

அதுபோல் தஃவா எதன் மீது எழுந்து நிற்கிறது? என்ற கேள்விக்கு மனித வளம், பொருளாதார வளம், ஹிக்மா எனும் ஞான அணுகுமுறை போன்ற பல காரணிகள் அல்குர்ஆனில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன[7]. இந்தக் காரணிகள் ஒவ்வொன்றும் தஃவாவின் நீடித்த இருப்புக்கும் விளைவுக்கும் அத்தியவசியமானவை என்றவகையில் இவையும் தஃவாவின் மகாஸிதுகளில் அடங்குகின்றன.


ஒன்றைத் தாங்கி நிற்கும் காரணியும் அதே தரத்திலேயே முக்கியத்துவம் பெறுகின்றமையை வலியுறுத்தும் ஒரு சட்டவிதி இப்படிச் சொல்கிறது. "ஒரு வாஜிப் முழுமை பெறுவது பிறிதொன்றில் தங்கியிருப்பின் அவ்விடயமும் வாஜிபாக அமையும்" (மஃலமது ஸாயித் வில்கவாயித் அல்பிக்ஹிய்யா வல் உஸூலிய்யா, விதி இல:1836).

கலாநிதி இஸாம் பஷீர் அவர்கள் தஃவாவின் மகாஸிதுகள் பற்றிப் பேசுகின்ற பொழுது, ஹிக்மா எனும் ஞான அணுகுமுறையையும், ததர்ருஜ் எனும் படிமுறை அமைப்பையும் அதன் மகாஸிதுகளாக அடையாளப்படுத்துகிறார்கள்[8]. உண்மையில் இவையிரண்டும் தஃவாவின் இருப்புக்கான நியாயங்களோ அல்லது தஃவாவின் மூலம் அடையப் பெறும் விளைவுகளோ அல்ல. மாற்றமாக தஃவா என்ற செயற்பாட்டின் விளைவுகள் சிறந்த முறையில் எய்தப்படுவதற்கு இந்த அணுகுமுறைகள் இன்றியமையாதவை. அந்தப் பின்புலத்திலேயே அவை இங்கு மகாஸிதுகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இறுதியாக இப்பத்தியை நிறைவு செய்ய முன்னர், முன்னைய பத்திகளில் கூறப்பட்ட ஒரு விடயத்தை மீள்வலியுறுத்தி விட்டுச் செல்வது பொருத்தம் என்று நினைக்கிறேன். இங்கு சொல்லப்பட்டுள்ள மூன்று கேள்விகளுக்குமான பதில்கள் மூலம் ஒரு விடயத்தின் மகாஸிதுகளை அடையாளம் காண முடியும் என்று சொல்லும் போது, அதன் பொருள் மகாஸிதுகள் ஒவ்வொருவரதும் மனோவிருப்பங்களுக்கு ஏற்ப நிர்ணயிக்கப்பட முடியும் என்பதல்ல, மாற்றமாக இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் அல்குர்ஆனிலும் சுன்னாவிலும் வலியுறுத்தப்பட்டிருக்கின்ற பொழுது மாத்திரமே அவை மகாஸித் என்று கருதப்படும்.

அல்குர்ஆனிலும் சுன்னாவிலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பேசப்படாத ஒரு விடயம் ஒருபொழுதும் மகாஸிதாக அடையாளப்படுத்தப்பட முடியாது. இது மகாஸித் அறிஞர்களின் ஏகோபித்த முடிவு. இங்கு முக்கியமாக வலியுறுத்தப்படும் விடயம் என்னவெனின், ஒரு தலைப்பின் அல்லது சட்டத்தின் மகாஸிதுகள் என்ன என்பதை அல்குர்ஆனிலிருந்தும் சுன்னாவிலிருந்தும் நாம் அடையாளம் கண்டு கொள்வதற்கான பொறிமுறை என்ன என்பது பற்றியே கருத்துரைக்கப்பட்டுள்ளது.

அல்லாஹ் எம்மை அங்கீகரிப்பானாக.



அடிக்குறிப்புக்கள்

1. அவ்தா, ஜாஸிர். (2012). மகாஸிதுஷ் ஷரீஆ கபல்ஸபா லித்தஷ்ரீஃ அல்இஸ்லாமி, ருஃயா மன்ழுமிய்யா. வெர்ஜீனிய்யா, அமெரிக்கா: அல்மஃஹதுல் ஆலமி லில்பிக்ரில் இஸ்லாமி. பக்கம்: 65 - 109. / (2011). மகாஸிதுஷ் ஷரீஆ தலீலுன் லில்முப்ததிஈன். வெர்ஜீனிய்யா, அமெரிக்கா: அல்மஃஹதுல் ஆலமி லில்பிக்ரில் இஸ்லாமி. பக்கம் : 9 - 14.
2. அபூஸைத், வஸ்பி ஆஷுர். (2014). அஹ்காமுஷ் ஷரீஆ பைனத் தஅப்புத் வத்தஃலீல். ஆய்வுகளின் தொகுப்பு. இஃமாலுல் மகாஸித் பைனத் தஹய்யுப் வத்தஸய்யுப். லண்டன்: முஅஸ்ஸஸதுல் புர்கான் லித்துராஸில் இஸ்லாமி, மர்கஸ் திராஸாதில் மகாஸிதிஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா. பக்கம் 203.
3. அல்குர்ஆன் கூறுகிறது "உங்களில் இருந்தே உங்களுக்குரிய சோடியைப் படைத்தமை அல்லாஹ்வின் அத்தாட்சிகளுள் ஒன்று, நீங்கள் அமைதி பெற வேண்டும் என்பதற்காகவ" (ரூம் -21).
4. ரைஸூனி, அஹ்மத் அப்துஸ் ஸலாம். (2016). மகாஸிதுல் இபாதா. தொலைக் காட்சி உரை. வெளியீடு: அல்கனாத் அல்மக்ரிபிய்யா. உரை இல: 03.
5. அல்குர்ஆன் கூறுகிறது "உங்களில் இருந்தே உங்களுக்குரிய சோடியைப் படைத்தமை அல்லாஹ்வின் அத்தாட்சிகளுள் ஒன்று, நீங்கள் அமைதி பெற வேண்டும் என்பதற்காகஉங்களுக்கு மத்தியில் அன்மையும் அருளையும் ஏற்படுத்தினான்வ" (ரூம் -21).
6. நபியவர்கள் கூறினார்கள் "அதிகம் அன்பு செலுத்தக் கூடிய அதிகம் பிள்ளைகள் பெறக் கூடிய பெண்களைத் திருமணம் செய்யுங்கள்வ" (அபூதாவுத், நஸாஇ).
7. அல்குர்ஆன் கூறுகிறது "உங்களுக்குத் சுவர்க்கத்தைத் தருவதாய் அல்லாஹ் உங்களையும் உங்கள் செல்வங்களையும் வாங்கிக் கொண்டான்வ" (தௌபா - 111). அல்குர்ஆன் கூறுகிறது,"உங்கள் இரட்சகனின் பாதைக்கு ஞான அணுகுமுறையைக் கொண்டு அழையுங்கள்வ" (நஹ்ல்-125).
8. அல்பஷீர், இஸாம் அஹ்மத். (2016). மக்ஸதா அத்ததர்ருஜ் வல்ஹிக்மா. ஆய்வுகளின் தொகுப்பு. இஃமாலுல் மகாஸித் பில் மஜால் அத்தஅவி. லண்டன்: முஅஸ்ஸஸதுல் புர்கான் லித்துராஸில் இஸ்லாமி, மர்கஸ் திராஸாதில் மகாஸிதிஷ் ஷரீஆ அல் இஸ்லாமிய்யா. பக்கம் 53-79.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைச் சூழலில் பாடசாலை இடைவிலகல்

கல்வி ஓர் அடிப்படைத் தேவை என்பதோடு மிக முக்கிய மனித உரிமைகளுள் ஒன்றாகும். அந்த வகையில் இலங்கை அரசாங்கம் அனைவருக்கும் கல்வி என்ற சர்வதேச பிரகடனத்தைப் பின்பற்றுகின்றது. இலங்கையில் ஆரம்பக் கல்வி அனைத்துப் பிள்ளைகளுக்கும் கட்டாயமானது. 05-14 வயதுப் பிரிவு மாணவர்கள் கட்டாயக் கல்வி பெற வேண்டும்.

இலங்கை அரசாங்கம் கல்வி அபிவிருத்தி குறித்து அவ்வப்போது பல்வேறு கருத்திட்டங்களையும் கொள்கை அமுலாக்கங்களையும் மேற்கொண்டு வருகின்றது. சமீபத்தில் கல்வி அமைச்சு அறிமுகம் செய்துள்ள 'சுரக்ஷா' எனப்படும் மாணவர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டம் இலங்கையின் இலவசக் கல்வி வரலாற்றில் இன்னொரு மைல் கல்லாகும்.

சீருடை, பாடநூல், புலமைப்பரிசில்கள், மதிய உணவு, போக்குவரத்து ஆகியவற்றோடு தற்போது மருத்துவக் காப்புறுதியும் வழங்கப்படுகின்றது. இலங்கையில் இன்றுவரை இலவசக் கல்வியே நடைமுறையில் உள்ளது என்பதற்கான பிரதான குறிகாட்டிகளாக இவை கருதப்படுகின்றன. இதன் பெறுபேறாக இலங்கையர்களின் எழுத்தறிவு 96 சதவிகிதம் என கல்வியியலாளர்களால் சிலாகிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் பாடசாலைக் கல்வியோடு தொடர்பான சில பிரச்சினைகள் தொடர்ந்தும் நிலவி வருவதை இலங்கையின் கல்வித்துறை ஆய்வாளர்களும் கல்வியியலாளர்களும் சுட்டிக்காட்டுகின்றனர். அப்பிரச்சினைகளில் மாணவர் இடைவிலகலும் ஒன்றாகும்.

இலங்கைக் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ அறிக்கையொன்றின் படி 1997 இல் இலங்கையில் அரச பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவர்களின் தொகை 39087 ஆகும். 2005 இல் அது 45247 ஆக அதிகரித்தது. 2009 இல் 45000 ஆகக் குறைந்தது. 2013 இல் 29874 ஆகக் குறைந்தது. இதில் மாணவிகளை விட மாணவர்களின் இடைவிலகல் அதிகம் என அவ்வறிக்கை சுட்டிக் காட்டியது. (கல்வித் திணைக்கள அறிக்கை 2016)

2003 ஆம் ஆண்டு அருணாதிலக என்பவர் மேற்கொண்ட ஓர் ஆய்வில் இலங்கையில் 5-14 வயதுப் பிரிவு மாணவர்களில் 93 சதவிகிதமானவர்கள் பாடசாலை செல்கின்றனர் என்பதை உறுதி செய்திருந்தார். இதே வயதைச் சேர்ந்த 7 சதவிகிதமானோர் மொத்தமாகவே பாடசாலை செல்லவில்லை என்பதை அவரது ஆய்வு சுட்டிக்காட்டியது.

2005 இல் யுனிசெப் இலங்கையில் பாடசாலைகளுக்குச் சேர்க்கப்படும் மாணவர்களின் தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சி குறித்தும் இடைவிலகல் குறித்தும் தனது ஆழ்ந்த அக்கறையை வெளிப்படுத்தி இருந்தது. இதே ஆண்டில் சர்வதேச தொழிலாளர் அமையம் (International Labour Organization - ILO)வெளியிட்ட ஓர் ஆய்வறிக்கையில் 60,000 மாணவர்கள் பாடசாலைக் கல்வியிலிருந்து இடைவிலகியுள்ளதை சுட்டிக்காட்டியது.

2009 ஆம் ஆண்டில் வெளியான அரச கணக்காய்வாளரின் (Auditor General) அறிக்கையில் அவ்வாண்டு 2008 ஆம் ஆண்டை விட பாடசாலை இடைவிலகியோர் தொகை சற்று அதிகரித்திருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வறிக்கையின் படி 2009 இல் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர் தொகை 46 854 ஆகும். 2008 இல் அது 46 173 ஆக இருந்தது.

Transparency International எனும் பன்னாட்டு நிறுவனம் 2012 இல் இலங்கையில் பாடசாலை மாணவர்களின் இடைவிலகல் குறித்து மேற்கொண்ட ஓர் ஆய்வும் இங்கு நோக்கத்தக்கது. அதன் படி இலங்கையில் பாடசாலை மாணவர்கள் இடைவிலகல் விகிதம் (Ratio) பெருந்தோட்டப் பகுதிகளிலேயே அதிகமாக உள்ளது. மொத்த இடைவிலகலில் பெருந்தோட்டத்துறை வீதம் 20 என அந்நிறுவனத்தின் அறிக்கை கூறுகின்றது.

இதே உண்மையை 10 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக் கல்வி அமைச்சும் வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 2001 இல் கல்வி அமைச்சு இடை விலகல் குறித்து வெளியிட்ட ஓர் அறிக்கையில் மாவட்ட அடிப்படையில் இரத்தினபுரி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்கள் மிக மோசமான நிலையில் உள்ளதைக் குறிப்புணர்த்தியது.

2013 ஆம் ஆண்டில் யுனிசெப் இலங்கைக் கிளை மேற்கொண்ட ஓர் ஆய்வு "Out of School Children in Sri Lanka" எனும் பெயரில் வெளியானது. ஒப்பீட்டு ரீதியில் தோட்டப் புறங்களிலேயே இடைவிலகல் அதிகம் என அந்த அறிக்கை கூறுகின்றது. அதேவேளை 6.8 சதவிகிதமான இடைநிலைப் பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலைக் கல்வியைப் பூரணப்படுத்தாமல் இடைவிலகிச் செல்வதாகவும் அவ்வறிக்கை தெரிவிக்கின்றது. அத்தோடு இடைவிலகுகின்ற மாணவர்களில் 8.3 வீதமான பிள்ளைகள் வறுமைக்குட்பட்டோர் எனவும் அறிக்கை சுட்டுகின்றது.

2016 ஆம் ஆண்டிலும் யுனிசெப் இலங்கைக் கிளை பாடசாலை இடைவிலகல் மற்றும் பாடசாலை சேராத பிள்ளைகள் குறித்து வெளியிட்ட அறிக்கையிலும் இலங்கைச் சூழல் குறித்த தனது அக்கறையை வெளிப்படுத்தியது. அதன்படி 14 சதவிகிதமான மாணவர்கள் சாதாரண தரத்திற்கு முன்பாகவே பாடசாலைக் கல்வியிலிருந்து இடைநிற்கின்றனர். சாதாரண தரத்திற்குப் பின்னர் கணிசமான மாணவர்கள் உயர் தரத்திற்குச் செல்லாமலேயே இடைவிலகுகின்றனர். உயர் தரத்திற்குச் செல்லும் கல்வித் தகுதியை சாதாரண தரப் பரீட்சையில் பெறாமையே இதற்குரிய பிரதான காரணம் எனக் கூறப்படுகின்றது. வேறு பல காரணங்களும் இதற்குப் பங்களிக்கின்றன. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் தகவல்களின் படி கடந்த சில ஆண்டுகளாக 51 வீதமான மாணவர்கள் சாதாரண தரத்தில் சித்தியடையவில்லை.

2016 ஆம் ஆண்டுக்கான சிறுவர் நடவடிக்கைக் கருத்துக் கணிப்பு தொடர்பானதோர் அறிக்கை 2017 பெப்ரவரி 21 ஆம் திகதி வெளியானது. அந்த அறிக்கையின்படி இலங்கையில் சிறுவர்களிற்கான வயது 5 தொடக்கம் 17 வரையானவர்கள் 4,571,442 பேர் உள்ளனர். அவர்களில் 9.9 சதவீதமானோர் அதாவது 452661 பிள்ளைகள் பாடசாலை செல்வதில்லை. அவ்வாறு செல்லாதவர்களில் 51249 பேர் (11.3 சதவிகிதம்) இதற்கு முன்னரும் பாடசாலை செல்லவில்லை. இதில் 12 - 17 வயதுக்கிடைப்பட்ட 6630 பேரும் உள்ளடங்குகின்றனர்.

(தொடரும்)

# உளக் கோளாறுகளை வகைப்படுத்தல்




உளக் கோளாறுகளை வகைப்படுத்துவதில் இன்றைய உள மருத்துவர்கள் நோயின் அடையாளங்களையே முன்னிலைப்படுத்துகின்றனர். இதனை நோய்க்குறி அணுகுமுறை (Syndromal Approach) என்பர். இதன்படியே சிகிச்சை முறையும் தீர்மானிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் மனக்கோளாறுகளை வகைப்படுத்தல் உளமருத்துவர்கள் இன்னும் கருத்தொருமைப்பாடு காணாத விடயமாகவே உள்ளது.

உளக்கோளாறுகள் தொடர்பான மிகத் தெளிவான விளக்கத்தைப் பெறும் நோக்கத்துடன் அவற்றை வகுப்பதற்கு உளவியலாளர்கள் தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றனர். இன்று இது குறித்து இரண்டு பிரதான வகுப்பாக்கங்கள் (Classification) உள்ளன.

முதலாவது, உலக சுகாதார அமையத்தினால் (WHO) தயாரிக்கப்பட்ட வகையறாக்கம். இரண்டாவது, அமெரிக்க உள மருத்துவக் கழகத்தினால் (APA-American Psychological Association) வெளியிடப்பட்டுள்ள வகையறாக்கம். அமெரிக்க உள மருத்துவக் கழகம் 1952 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி பலமுறை மீளாய்வு செய்து மீண்டும் மீண்டும் விவாதித்து, இறுதியாக 1994 ஆம் ஆண்டில் ஒரு வகையறாக்கத்தை வெளியிட்டது. APA இன் நான்காம் பதிப்பு DSM-11 எனும் கைநூலாக அது வெளிவந்துள்ளது. Diagnostic and Statistic manual of mental deseases என்பதன் சுருக்கக் குறியீடே DSM எனப்படுகின்றது.

இதேபோன்று 1992 இல் உலக சுகாதார அமையம் மனக் கோளாறுகளை Mental and behavioural disorders என வரையறுத்ததோடு, F-00 இலிருந்து F-99 வரை மனப்பிறழ்வுகளை வகைப்படுத்தியுள்ளது. உலக சுகாதார அமையத்தின் இந்த வகைப்பாடு பொதுவாக உளநோய்கள் குறித்த சர்வதேச வகைப்பாடு ICD - International Classification of Desease எனப்படுகின்றது.

அமெரிக்க உள மருத்துவக் கழகத்தின் வரையறைகளின்படி உளக் கோளாறு என்பது ஓர் உளவியல் நோய்க் குறியாகும். அது தீவிர பதகளிப்புடன் தொடர்பானது. நோயாளரிடம் ஒரு வலியை ஏற்படுத்தக் கூடியது. அதன் அடையாளங்களைக் கண்களால் பார்க்கலாம். அது நோயாளியின் நியம நடத்தைகளுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடியது. அதன் இறுதி விளைவு மரணமாகவோ ஏதேனும் இழப்பாகவோ சுய காயப்படுத்தலாகவோ இருக்கலாம்.

உலக சுகாதார அமையம் மற்றும் அமெரிக்க மருத்துவக் கழகம் இரண்டினது வகையறாக்கப் பட்டியலும் உளப் பிறழ்வை இனங்காண சில நிலையான நோய்க் குறிகளை வலியுறுத்துவது கவனிக்கத் தக்கது. எவ்வாறாயினும், இந்த வகைப்பாடு காலத்திற்குக் காலம் மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றது என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

மூன்றாவது ஓர் அணுகுமுறையும் உள்ளதை நாம் நினைவுபடுத்த வேண்டும். அது சீன உள மருத்துவப் பாரம்பரியத்தைச் சேர்ந்தது. உலகளவில் மனிதனுக்கு ஏற்படும் பல்வேறு உளப் பிறழ்வுகளைப் பட்டியல்படுத்தி, அவற்றை முறையாக வகைப்படுத்தும் வழக்கம் சீனாவில் நீண்டகாலமாக நிலவி வந்துள்ளது. சீனாவின் வகையறாக்கம் PDM எனும் சுருக்கக் குறியிட்டால் அடையாளப்படுத்தப்படுகின்றது. Psychodynamic Diagnostic manual என்பதன் சுருக்கக் குறியீடே இது. இதன்படி மனப் பிறழ்வு என்பது கற்றல் இயலாமை, அறிகைக் குறைபாடு மற்றும் நரம்பியல் கோளாறுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது.



# பெண்கள் நீதிபதிகளாகப் பணியாற்றுதல்

## மொரோக்கோ இந்தோனேசியா மற்றும் மலேசியா அனுபவம்

முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் நாடுகளில் முஸ்லிம் பெண்களை நீதிமன்றங்களில் நீதிபதிகளாக நியமித்தல் தொடர்பாக ஒரு விவாதம் நீண்டகாலமாய் நிலவி வருகின்றது. பெண்கள் நீதிபதிகளாகப் பணியாற்ற முடியாது என்று ஒரு தரப்பும், இல்லை நீதிபதிகளாகப் பணியாற்ற முடியும் என்று இன்னொரு தரப்பும் வாதித்து வருகின்றனர்.

இந்த விவாதங்களுக்கு அப்பால் முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளில் அநேகமானவற்றில் பெண்கள் நீதிபதிகளாக அமர்த்தப்பட்டுள்ளனர். இதேபோன்று முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் நீதிபதிப் பதவி வகிக்கின்றனர்.

சமகால அறபு முஸ்லிம் நாடுகளில் இன்று ஷரீஆ மற்றும் சிவில் சட்டங்களை அடிப் படையாகக் கொண்ட இரு வகையான நீதிமன்றங்கள் இயங்குகின்றன. ஷரீஆ நீதிமன்றங்கள் முஸ்லிம்களுக்கு மட்டும் உரியதாகவும் பெரும்பாலும் அவை குடும்பவியல் சட்டங்களுக்கு (தனியார் சட்டத்திற்கு) மட்டுப்படுத்தப்பட்டவையாகவும் உள்ளன. மலேசியா, இந்தோனேசியா, மோரோக்கோ, தூனிசியா போன்ற நாடுகளில் முஸ்லிம் பெண்கள் நீதிபதிகளாய் நியமிக்கப் பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், பெண்கள் நீதிபதிகளாய்ப் பதவி வகிப்பது குறித்து ஒரு மங்கலான, தெளிவற்ற கருத்தே முஸ்லிம் சமூகத்தில் நீடிக்கின்றது. இலங்கையில் கடந்த கால் நூற்றாண்டு காலமாக விவாதிக்கப்பட்டு வரும் முஸ்லிம் தனியார் சட்ட சீர்திருத்தத்தில் பெண்களைக் காழி நீதிபதிகளாக நியமிக்க வேண்டும் என்ற குரலும் ஒலிப்பதைக் கேட்கலாம்.

நாட்டிலுள்ள 65 காழி நீதிமன்றங்களிலும் ஆண் நீதிபதிகளே பணியாற்றுகின்றனர். பெண்கள் தமக்கு ஏற்படும் பிரச்சினைகள் அனைத்தையும் ஆண் நீதிபதிகளிடம் வெளிப்படையாகப் பேசுவதில் பல்வேறு சங்கடங்களை எதிர்கொள்கின்றனர். மட்டுமன்றி, தமது தரப்பு நியாயங்களை எடுத்துச் சொல்வதற்குத் தயக்கம் காட்டுகின்றனர்.

இன்னொரு புறம், பெண்களுக்கு காழி நீதிமன்றங்கள் அநீதி இழைக்கின்றன. இத்தகைய காரணங்களை முன்வைத்து பெண்களிலும் தகுதியானவர்கள், தேவையான இடங்களில் நீதிபதிகளாக அமர்த்தப்படுவதற்கு ஷரீஆவில் ஓர் இடம் உள்ளதா என்ற விவாதத்தை முன்னிறுத்தி பெண்களும் அவ்வாறு நியமிக்கப்படுவதால் ஏற்படும் அனுகூலங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

சிவில் மற்றும் ஷரீஆ நீதிமன்றங்களில் பெண்களை நீதிபதிகளாய் அமர்த்துவது ஒரு விவாதத்திற்குரிய பேசுபொருளாகவே இருந்து வருகின்றது. இதேவேளை, அறபு முஸ்லிம் நாடுகளின் சனத்தொகைக் கட்டமைப்பை எடுத்து நோக்கினால் அங்கு பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது ஒரு முக்கிய மாற்றமாகும். மட்டுமன்றி, கல்வித் தகைமை அதிகம் கொண்ட தொழில்சார் பதவிகளை வகிக்கும் பெண்களின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகின்றது. உயர் கல்வியில் பெண்களின் பங்குபற்றல் குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்ந்துள்ளதை சமீபத்திய புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

சட்டத்துறையில் பயிலும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றன. அதேவேளை, பெண்கள் குறித்து மிக இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்த நாடுகள் தமது அரசியல் நிருவாக நடவடிக்கைகளில் பெண்களையும் உள்ளீர்க்கும் நிலைக்கு வந்துள்ளன. கடந்த மாதம் பழமைவாதத்திற்குப் பெயர்போன சவூதி ஆட்சியாளர்கள் தமாரித் எனும் பெண்ணை தொழில் பிரதியமைச்சராக நியமித்துள்ளனர்.

இன்னொரு புறம் நீதிக் கட்டமைப்பில் பெண்களின் பங்குபற்றுதல் அவசியம் என்ற கருத்தும் வலுப்பெற்று வருகின்றது. தூனிசியா, மொரோக்கோ, அல்ஜீரியா போன்ற நாடுகளில் வீட்டு வன்முறைகள் மற்றும் பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகம் குறித்து கடுமையான சட்டங்கள் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்தகை ஒரு சூழலில் சமூக, கலாசார, மார்க்கத் தேவைகளின் நிமித்தம் பெண் களின் அடை ஒழுங்கு மற்றும் ஆண் –பெண் தொடர்பாடல் வரையறைகள் என்பவற்றுக்கு ஏற்ப அவர்களையும் நீதிக் கட்டமைப்பில் உள்வாங்கலாமா என்ற கேள்வி பலராலும் முன்வைக்கப்படுகின்றது. இது குறித்து இஸ்லாமிய மூலாதாரங்கள் மற்றும் சட்ட மரபுகளின் பின்னணியில் ஆராய்வதற்கு இக்கட்டுரை முயல்கின்றது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவாதிப்பதற்கான... (01 ஆம் பக்கத் தொடர்)

ஆனால் அது தொடர்பில் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை. ஜேவிபியும் சில சிறுபான்மைக் கட்சிகளும் அந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளாவிட்டாலும் கூட, வந்திருந்தவர்கள் அனைவரும் 1988 இன் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு இணங்கினார்கள். இந்த வகையில் இந்த மூன்று மாகாணங்களுக்குமான தேர்தல் கலப்பு முறையிலேயே நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

இருந்த போதிலும் மாகாண எல்லை நிர்ணய அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படாமல் புதிய முறையில் தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. இந்த அறிக்கை பெப்ரவரி 19 இல் சமர்ப்பிக்கப்பட்ட போதும், இது ஒரு மாத காலத்தில் பாராளுமன்றத்தில் வாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும். ஆனாலும் இந்த விவாதத்துக்கான தினமொன்றை வரையறுத்துக் கொள்வதில் கட்சித் தலைவர்கள் இதுவரை ஒரு உடன்பாட்டுக்கு வரவில்லை என்பதனால் இந்த அறிக்கை மீதான விவாதம் தள்ளிப் போடப்பட்டு வருகிறது.

## சி.வி. புதிய... (01 ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்த கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் முகமாகவே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது, இந்த வாரத்துக்குள் புதிய கட்சியொன்றை அமைப்பதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூறியிருந்தார். அது உண்மையாக இருந்தால் நாங்கள் அவருடன் இணைந்து கொள்ளத் தயாராக இருக்கிறோம். அந்தக் கட்சியின் கொள்கையும் யாப்பும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை முன்வைக்குமாக இருந்தால் நாங்கள் அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு இப்போதும் தயாராகவே உள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வாய்ப்புக் கிடைக்காமல் போனாலும், முதலமைச்சர் என்ற வகையில் மீண்டும் அவரைப் பதவியில் அமர்த்த வேண்டிய தேவை மக்களுக்கு இருக்கிறது என்பதோடு மக்களது வேண்டுகோளும் அதுவாகவே இருக்கிறது என அவர் தெரிவித்தார்.

## யுத்த நீதிமன்றம்... (01 ஆம் பக்கத் தொடர்)



சர்வதேச மனித உரிமைகள் கமிஷனால் முன் வைக்கப்பட்ட, யுத்த சமயத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளைத் தேடிப் பார்ப்பதற்கான யுத்த நீதிமன்றத்தை அமைப்பது இவற்றுள் முக்கியமான நிபந்தனையாகும்.

இலங்கை உட்பட நாடுகள் பலவற்றுக்கு உதவி அளிப்பதற்கான அமெரிக்க உதவித் திட்டத்தின் கீழ் 1.3 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கு அந்நாட்டு ஜனாதிபதி டிரம்பின் அங்கீகாரமும் கிடைக்கப் பெற்றுள்ளது. இதில் இலங்கைக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை 35 மில்லியன் டொலர்களாகும். இதில் ஐந்து இலட்சம் டொலர்கள் இராணுவத்துக்கானதாகும். இதனை மனிதாபிமான மற்றும் அனர்த்த நடவடிக்கைகளுக்கும், கடல் பாதுகாப்பு மற்றும் பயிற்சிகளுக்கும் மாத்திரமே பயன்படுத்த முடியும்.

## புதிய அமைதி... (01 ஆம் பக்கத் தொடர்)

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் பணியை வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்குத் தேவையான வகையில் பிராந்தியத்தில் அமைதி காப்பதற்குத் தேவையான பங்களிப்பை வழங்குவதற்கு ஏதுவானதாக இது அமைக்கப்பட்டுள்ளது. படையினரின் பண்பாட்டினையும் செயலாற்றல்களையும் வெளிப்படுத்தும் வகையிலான பயிற்சிகள் இதனூடாக வழங்கப்படும். சர்வதேச அமைதி காக்கும் படையினரின் தேவைக்கேற்றவாறு இந்தப் பயிற்சிகள் அமைந்திருக்கும்.

கடந்த 30 வருடங்களில் இலங்கையிலிருந்து 20,000 வரையிலான படையினர் அமைதி காக்கும் பணிக்காக உலகின் பல நாடுகளிலும் பங்கு கொண்டு வருகின்றனர். கடைசியாக இலங்கையிலிருந்து அமைதி காக்கும் படை லெபனானுக்குச் சென்றுள்ளது.

## சிறந்த சுகாதார... (01 ஆம் பக்கத் தொடர்)

சமகாலத்தில் பெருமளவு சுகாதாரப் பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை தீர்க்கும் வழிவகைகளில் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். அத்தகைய புரட்சியை ஏற்படுத்த பொதுநலவாய அங்கத்துவ நாடுகளில் அனுசரிக்கும் சிறந்த நடைமுறைகளை ஒட்டுமொத்த உலகமும் வரித்துக்கொள்வது அவசியம். இந்த விடயத்தில் இலங்கையும் பங்களாதேஷும் முன்னணியில் திகழ்கின்றன. அந்நாடுகளில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகள் கூடுதலாக பெண் சுகாதார பராமரிப்பு ஊழியர்களால் முன்னெடுக்கப்படுவது சிறப்பம்சம் என மைக்ரோசொப்ட்டின் ஸ்தாபகத் தலைவர் பில் கேட்ஸ் குறிப்பிட்டார்.

இதனால் இலங்கையில் தாய்மார் குழந்தைகள் மரண வீதம் குறைந்த மட்டத்தில் இருப்பதாகவும் அவர் பாராட்டிப் பேசினார்.

## புத்தரின் புனித... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்த வகையிலேயே இந்திய தேசிய நூதனசாலை இந்தப் பல்கலைக்கழகத்திடம் இவற்றை குறுகிய காலக் கடனாகக் கேட்டிருந்தது. ஆனால் விலைமதிப்பற்ற இந்தப் பொருட்களை வெளியில் அனுப்புவது பாதுகாப்பற்றது என்ற கருதுகோளில் இவற்றுக்குப் பதிலாக புத்தரினால் பாவிக்கப்பட்ட வேறும் நினைவுச் சின்னங்களை வழங்குவதற்கு அது பரிந்துரைத்துள்ளது.

புத்தரின் நினைவுச் சின்னங்கள் பல வருடங்களாக எம்.எஸ். பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் மற்றும் புராதன வரலாறு பீடத்தில் பாதுகாப்பாக இருந்து வருகிறது. அணைக்கட்டு கட்டுவதற்காக வடக்கு குஜராத்தின் கிராமமொன்றின் இரு மலைகளுக்கிடையே குடைந்த போது எம்.எஸ். பல்கலைக்கழகத்தின் தொல்லியலாளர்களால் புத்தரின் சரீரப் பாகங்கள் அடங்கிய புனித பேழை 1963 ஜனவரி 14 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது.

## இனவன்முறை... (03 ஆம் பக்கத் தொடர்)

வருகின்ற அநியாயங்களின் போதெல்லாம் முஸ்லிம் சமூகம் ஒன்றிணைந்து இந்த அநியாயங்களை எதிர்கொண்டு வந்தது.

முஸ்லிம் சமூகத்தின் தலைமைகளின் கீழால் அது கட்டுக்கோப்பாகச் செயற்பட்டு எதிர்ப்புக்களைக் கையாண்டு வந்தது. எந்தளவு அநியாயங்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட போதிலும், நாட்டின் நன்மையைக் கருத்திற் கொண்டு அமைதி பேணுங்கள் என்று அவர்களுக்கு போதிக்கப்பட்டது. நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று உபதேசிக்கப்பட்டது. இத்தனைக்கும் செவி சாய்த்து முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் அமைதி காத்து வருகிறது. ஆயுதமேந்துவதையும் வன்முறையில் ஈடுபடுவதையும் முற்றாகத் தவிர்க்க வேண்டும் என அவர்களுக்கு வேதமோதப்படுகிறது.

இந்த நிலையில் முஸ்லிம் சமூகத்தை அழிவிலிருந்து காப்பாற்றப் போகிறேன் என்று யார் முன்வந்து வன்முறையில் இறங்கினாலும் அவர்களை இந்தக் கட்டுக் கோப்பை விட்டும் விலகிச் சென்றவர்களாகவே கருத வேண்டும். இவர்களது உண்மையான நோக்கம் முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாப்பதல்ல என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாப்பதற்கென்று அதற்கான தலைமைகள் செயற்படும் போது, அதனைக் குலைக்கும் வகையில் தன்னிச்சையாகச் செயற்படுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு சமூகம் தயங்கக் கூடாது. தனிப்பட்ட சிலரின் உணர்ச்சி வேகத்தை சமூகத்தின் மீதான பழியாக போட்டுக் கொள்ளாமல் அதனை குறித்த நபர்களின் பிரச்சினையாக முன்வைப்பதற்கு சமூகம் முயல வேண்டும்.

கண்டியில் நடந்த இனவன்முறைகளின் போது தாக்குதல்களுக்குத் தூபமிட்டார் என்ற குற்றச்சாட்டில் அமித் வீரசிங்க மீதும் அவரது மகாசோன் பலகாய மீதுமே பழி தூக்கிப் போடப்பட்டது. அதனை சிங்கள சமூகத்தின் செயற்பாடாக அரசாங்கம் கருதவில்லை. அதேபோல முஸ்லிம் சமூகத்திலிருந்தும் யாராவது இந்தக் கட்டுக் கோப்பைக் குலைக்கும் வகையில் செயற்பட்டால் அவர்களையும் இதே விதமாக அணுகுவதற்கு அரசாங்கத்துக்கு வழி காட்ட வேண்டும்.

இலங்கை முஸ்லிம் சமூகம் நாட்டுக்கு விசுவாசமான சமூகமாகவே இருந்திருக்கிறார்கள். தொடர்ந்தும் இருக்க விரும்புகிறார்கள். இலங்கையில் நடந்து முடிந்த யுத்தங்கள் அனைத்தும் நாட்டைப் பின்னடையச் செய்யவே வழி வகுத்திருக்கின்றன. அந்த வகையில் நாட்டின் ஸ்திரத் தன்மை குலைந்து விடாமல் பாதுகாக்கும் மாபெரும் பொறுப்பு முஸ்லிம்களின் கைக்கு வந்து சேர்ந்திருக்கிறது என்ற நினைவுகளுடன் முஸ்லிம் சமூகம் செயற்பட வேண்டியது முக்கியமானது.

## இனவன்முறை... (03 ஆம் பக்கத் தொடர்)

ஊரடங்கு நேரத்தில் விஷேட அதிரடிப் படையினர், ஒரு மணித்தியாலம் தருகிறோம், அடித்து விட்டுப் போங்கள் என்று கூறியதை அரசாங்கத்தின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவரே கூறியிருப்பதும் இதற்குத் தக்க சான்றாகிறது.

நத்தரம்பொத்த, குண்டசாலையில் அமைந்துள்ள இரண்டு மாடி அலுவலகத்திலிருந்து இயங்கிய மகசோன் பலகாயவின் தலைவர் அமித் வீரசிங்க தாக்குதல்களைத் தூண்டிய குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். வெறுப்புப் பேச்சுக்களை உமிழ்ந்ததற்கான வீடியோ ஆதாரங்களை வைத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆனால் அளுத்கம, கிந்தோட்டை வன்முறைகளின் போது வெறுப்புப் பேச்சை உமிழ்ந்தவர்கள் கைது செய்யப்படவில்லை. அத்தோடு இவ்வளவு காலமாக ஒபீஸ் போட்டு வெறுப்புணர்வுச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் தாக்குதல்கள் எல்லாம் நடத்தி முடித்த கையோடுதான் விளக்கமறியலுக்கு அழைத்து வரப்படுகிறார்கள். பின்னர் விசாரணை முடிந்ததென்று அனுப்பி வைக்கப்படுவார்கள். இந்த வகையில் தாக்குதலுக்குத் தூண்டியவர்களும் அரச அனுசரணையுடனேயே செயற்பட்டிருக்கிறார்கள் என்ற மேலோட்டமான எண்ணமே பொதுமக்களிடம் மேலெழும்புவதற்கு வாய்ப்பிருக்கிறது.

தாக்குதல்களின் போதான சம்பவங்களை வைத்து நோக்குகின்ற பொழுது கண்டித் தாக்குதல்களும் அதற்கு முன்னரான அம்பாறைத் தாக்குதல்களும் அரச அனுசரணையுடனான பயங்கரவாதமாகவே (State Sponsored Terrorism) பார்க்கப்பட வேண்டியிருக்கிறது. அரசியல் அல்லது மத ரீதியான இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சிவிலியன்கள் மீது கணக்கிடப்பட்ட வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதே அரச அனுசரணையுடனான பயங்கரவாதம் எனப்படுகிறது. இதனை மேலும் புரிந்து கொள்வதும், இதற்கான உறுதியான ஆதாரங்களை சேகரிப்பதும் முஸ்லிம் சமூகம் தனக்கு முன்னாலுள்ள பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான உபாயங்களை வகுப்பதில் முக்கியமானதாக அமைய முடியும்.

## முஸ்லிம் அரசியல்... (04 ஆம் பக்கத் தொடர்)

ஆக, மத்திய அரசாங்கத்தின் நேரடி பிரதிநிதிகளாகச் செயற்படும் மாகாண ஆளுநர்கள், மத்திய அரசாங்கத்தின் நேரடி நிருவாக அதிகாரிகளாகச் செயற்படும் மாவட்டச் செயலாளர்கள் போன்ற உயர் பதவிகளுக்கு, இலங்கையில் முஸ்லிம்கள் எவரும் இல்லை என்பதிலிருந்தே, நாட்டில் முஸ்லிம்கள் எந்தளவுக்கு புறக்கணிப்புக்கு உள்ளாகி உள்ளனர் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மேலும், முஸ்லிம் கட்சிகளும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமது அரசியல் கருவிகளை, எவ்வாறு மழுங்கிய நிலையில் பயன்படுத்தி வருகின்றனர் அல்லது பயன்படுத்தாமலேயே வைத்திருக்கின்றனர் என்பதையும் இதனூடாக விளங்கிக் கொள்ளலாம்.

இன்னொருபுறம், இலங்கை நிருவாக சேவையில் சிரேஷ்டத்துவம் கொண்ட பல முஸ்லிம்கள், மாவட்டச் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகின்ற நிலையில், அவர்களை விடவும் சிரேஷ்டத்துவம் குறைந்த வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள், மாவட்டச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இந்த நிலைவரமானது, இலங்கை நிருவாக சேவையில் சிரேஷ்டத்துவம் கொண்ட முஸ்லிம்களுக்கு மன உளைச்சலையும் தன்மானச் சிக்கலையும் ஏற்படுத்துவதற்கும் ஏதுவாக அமைந்துள்ளது.

எனவே, இவற்றுக்கான பொறுப்புகள் அனைத்தையும், அரசாங்கத்துக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் முஸ்லிம் மக்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களுமே ஏற்க வேண்டும்.

தமிழர்களினதும், தமிழர் கட்சிகளினதும் அரசியல் கருவிகள், மலைகளை உடைத்துக் கொண்டிருக்கும் தற்போதைய காலகட்டத்தில், முஸ்லிம் கட்சிகளின் அரசியல் கருவிகளோ, நாம் மேலே குறிப்பிட்டதைப் போல், முதுகுகளைச் சொறியவே பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கூர் மழுங்கிய கத்தியைக் கொண்டு, ஒரு வெங்காயத்தைக் கூட வெட்டுவதற்கு நாம் கஷ்டப்படுகின்றபோது, கூரில்லாத அரசியல் கருவிகளை வைத்துக் கொண்டு, முஸ்லிம் கட்சிகள் எதையாவது 'கிழி'க்கும் என்று நாம் நம்புவது, அப்பாவித்தனத்தனத்தின் உச்சமாகும்.

## பெரும்பான்மை... (07 ஆம் பக்கத் தொடர்)

நாம் நம்பியிருந்தவர்களே எமக்குத் துரோகம் இழைத்துள்ளார்கள். மஹிந்த ராஜபக்ஷவை தோல்வியடையச் செய்ய வேண்டும் என்பதற் காக ராஜித சேனாரத்னவும், சம்பிக்க ரணவக்கவும் இணைந்து இந்தச் சூழ்ச்சியை அரங்கேற்றியுள்ளார்கள். நல்லாட்சி அரசாங்கம் உருவானதன் பின்னர் அளுத்கம இன வன்முறைத் தாக்குதல் குறித்து ஆராய ஒரு ஆணைக் குழுவேனும் நியமிக்கப்படவில்லை. ஆணைக்குழுவொன்று அமைக்கப்படும் போதே சூத்திரதாரிகளை கண்டு பிடிக்க முடியும். யார் இந்தக் கலவரத்துக்கான சூத்திரதாரிகள் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு இதுவரையில் ஒரு ஆணைக்குழு உருவாக்கப்படவில்லை.

திகன இனவாதத் தாக்குதல் சம்பவத்தில் அந்தத் தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னைய தினமே ஊடரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியிருப்பின் பிரச்சினை வெகுதூரம் சென்றிருக்காது. திகனயில் பிரச்சினையொன்று வருமென்பதை தெரிந்து கொண்டும் அதற்கு இடமளித்துள்ளார்கள் இந்த ஆட்சியாளர்கள். எல்லாவற்றுக் கும் ரணிலே காரணம். சொத்துக்கள் எவ்வளவு தீக்கிரையானாலும் அதற்கு 50,000 ரூபா நஷ்டஈடு வழங்கினால் எல்லாம் சரிப்பட்டு விடுமா? இனி மேலும் இவர்களை நம்ப முடியாது. எமக்கு நடந்த அநியாயத்துக்கான எதிர்ப்பை நாம் காட்ட வேண்டும். இதனாலேயே நாம் சுயேட்சையாக களமிறங்கினோம்.

## மீண்டும்... (05 ஆம் பக்கத் தொடர்)

**★ இதுபோன்ற வன்முறைகள் அளுத்கம மற்றும் பேருவளைப் பகுதிகளில் இடம்பெற்றன. அப்போது நீங்கள் பொது பல சேனாவுக்கு ஆதரவளிக்கிறீர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டதே?**

இது உண்மையல்ல. வரலாற்றை நீங்கள் பார்த்தால் இன வன்முறைகள் நீண்டகாலமாக இடம்பெற்று வருகின்றன. முக்கியம் என்னவென்றால், அத்தனை நெருக்கடியான சம்பவங்களின் போது அரசாங்கம் போதுமானளவு செயல்படுகின்றது என்பதுதான். அளுத்கம சம்பவத்தின் போது நாம் விரைந்து செயல்பட்டோம். நிலைமையைக் கட்டுப்படுத்த எங்களால் முடிந்தது. எங்களது அரசாங்கம் BBS உடன் எந்த உறவையும் வைத்துக் கொள்ளவில்லை. அது எதிர்க்கட்சியின் உண்மைக்குப் புறம்பான வாதம். நான் எந்த வகையிலும் BBS உடன் தொடர்புபட வில்லை. இத்தகைய இயக்கங்களுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் இப்போது பார்க்கின்றீர்கள்.

**★ முன்னைய அரசாங்கத்தில் இது போன்ற வன்முறைகளை முட்கூட்டியே தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையே?**

அப்போதிருந்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். நாம் எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று உங்களால் கூற முடியாது. காரணமில்லாமல் நீங்கள் சென்று யாரையும் கைதுசெய்ய முடியாது. நாம் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அப்படியான வன்முறைகளில் ஈடுபடுமாறு நாம் மக்களை ஊக்குவிக்கவில்லை.

முஸ்லிம் சமூகத்தின் பல்வேறு தரப்பினருடனும் பல்வேறு கூட்டங்களை நாங்கள் ஒழுங்கு செய்தோம். அவர்களுடைய மதகுருக்களையும் வர்த்தகர்களையும் சந்தித்தோம். BBSபிக்குகளை மட்டுமன்றி ஏனைய பிக்குகளையும் நான் சந்தித்தேன். அனைவரையும் ஒரே மேசைக்குக் கொண்டு வந்தேன். இவை சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய பிரச்சினையாக மட்டும் இருக்கவில்லை. நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகள் குறித்து நாம் கலந்துரையாடினோம். சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தவே நாம் முயன்றோம்.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | 4000.00 | ஐக்கிய இராச்சியம் | 5500.00 |
| 12 இதழ்கள் | ரூபா 600.00 | தனிப் பிரதி | ரூபா 100.00 | மலேசியா | 4000.00 | அமெரிக்கா | 6500.00 |
| 24 இதழ்கள் | ரூபா 1200.00 | ஒரு வருடம் | ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | 4000.00 | அவுஸ்திரேலியா | 4700.00 |
| | | | | | | சீனா | 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/c 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்வம் – திறமை – வாய்ப்பு



ஒருவர் தனக்குப் பொருத்தமான தொழிலைத் தேர்ந்தெடுப்பது அவ்வளவு எளிதானதல்ல. மருத்துவம், இயந்திரப் பணிகள், கல்வி, படைப்புத் திறன், உடல் திறன், கைவினைத் திறன், நிர்வாகத் திறன், சமூக சேவை முதலான சில துறைகளில் சிலருக்கு இயல்பாகவே ஆர்வம் இருக்கும்.

அது சிறு வயதிலிருந்தே வெளிப்படையாகத் தெரியவும் செய்யும். அப்படி இருக்க, அது தொடர்பான பாடத்தை எடுத்துப் படித்து அந்தத் துறையிலேயே தன் தொழில் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதில் என்ன பிரச்சினை? அந்தத் துறைக்கான சவால்களை எதிர்கொள்ள திறமையும் உழைப்பும் இருந்தால் போதும் அல்லவா? தொழிலைத் தேர்ந்தெடுப்பதில் பிறகு ஏன் இவ்வளவு சிக்கல்?

தொழில் வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படைகளை ஆர்வம், திறமை, வாய்ப்பு என வகைப்படுத்தலாம்.

*ஆசைதானா ஆர்வம்?*

எதில் ஆர்வம் என்பதை நாம் அடையாளம் காண வேண்டும். ஆசைப்படுவதெல்லாம் ஆர்வங்களாகிவிடாது. உதாரணமாக எல்லோருக்கும் cricket பார்ப்பது பிடிக்கும். அப்படியானால் எல்லோருமே Cricket Player தொழிலைத் தேர்ந்தெடுத்துவிட முடியுமா?

உணவுப் பொருள்களின் மீது இருக்கும் ஆர்வமும் இப்படித்தான். ஒருவர் தோசையை விரும்பிச் சாப்பிடுகிறார் என்பதை வைத்துத் தொழில் வாழ்க்கைக்கான அவரது ஆர்வத்தை நாம் முடிவுகட்ட முடியாது.

தோசை பிடிக்கும் என்பது மட்டும் அல்லாமல் வித விதமான தோசைகள் பற்றிய ஆர்வமும் அதையெல்லாம் எப்படிச் செய்வது என்பதை அறியும் ஆவலும் இருந்தால் அதை வெறும் சாப்பாட்டு ருசி என்று எடுத்துக்கொள்ள முடியாது.

இதுபோலவே ஒவ்வொரு ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் சற்றே ஆராய்ந்து பார்த்தால் அது தொழில் வாழ்க்கையைத் தீர்மானிக்கக் கூடிய ஆர்வமா அல்லது வெறும் ஆசையா என்று தெரிந்துவிடும். பிறருக்கு உதவிசெய்வது என்னும் அக்கறை எல்லோருக்குமே இருக்கும். ஆனால் சிலர் மட்டும் அதில் தனிக் கவனம் செலுத்துவார்கள்.

உதவி செய்வதற்காக மிகவும் மெனக்கெடுவார்கள். உதவி செய்வதற்குத் தேவையான பல அம்சங்களைத் திரட்டிக்கொள்வார்கள். இவர்கள் மக்களுக்கு உதவி செய்யக்கூடிய துறைகளில் தங்கள் தொழில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளலாம். இப்படிச் சற்றே ஆழமாகப் பார்ப்பதன் மூலம் ஒருவரது ஆர்வத்தைத் தொழில்ரீதியாகப் புரிந்துகொள்ளலாம்.

*திறமையைப் புரிந்துகொள்ளுதல்*

திறமையை அடையாளம் காண்பதற்கும் இதே அணுகுமுறை பொருந்தும். விளையாட்டு, ஓவியம், பாட்டு, பேச்சு ஆகியவற்றில் பலருக்கும் அடிப்படையான திறமைகள் இருக்கும். இவற்றில் எதில் ஒருவருக்குச் சிறப்பான திறமை இருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

சிறப்பான திறமையை அடையாளம் கண்டால் மட்டும் போதாது. அந்தத் திறமை வெளிப்படும் துறையில் அவருக்கு ஆர்வம் இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். உதாரணமாகச் சிலர் கிரிக்கெட்டில் இயல்பாகவே நன்றாக ஆடுவார்கள்.

ஆனால் அதில் பெரிதாக ஆர்வம் இருக்காது. இயல்பாகவே நன்றாகப் படம் வரைவார்கள். ஆனால் அதில் ஆர்வம் அதிகம் இருக்காது. நல்ல குரல் இருக்கும். இசைத் துறையில் ஆர்வம் இருக்காது. எனவே திறமையுடன் ஆர்வமும் சேர்ந்திருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

அதுபோலவே ஆர்வமுள்ள விஷயத்தில் திறமை இல்லாவிட்டால் பயனில்லை. வெறும் ஆர்வத்தை மட்டும் வைத்துக் கொண்டு எதுவும் செய்ய முடியாது.

*வாய்ப்பு*

நமக்கு ஆர்வமும் திறமையும் உள்ள துறையில் அதிக வாய்ப்புகள் இல்லாவிட்டால் அதில் நுழைவது கடினம். மிக அரிதாகவே வாய்ப்பு உருவாகக்கூடிய துறையை ஒருவர் தேர்ந்தெடுத்தால் அதில் மிகச் சிறப்பான திறமை இருந்தால்தான் வெற்றிபெற முடியும்.

சில துறைகளில் வாய்ப்பு அதிகம் இருக்கும். ஆனால் அதற்கேற்ற திறமையை வளர்த்துக்கொள்வது எளிதல்ல. உதாரணமாக விண்வெளித் துறை. இதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு தனக்கான துறையை ஒருவர் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த அளவுக்குத் திறமையை வளர்த்துக் கொள்ளும் முனைப்பு இருந்தால்தான் சில துறைகளைப் பற்றி யோசிக்கவே முடியும்.

வாய்ப்பு என்பது துறைக்குத் துறை காலத்துக்குக் காலம் மாறக்கூடியது. அது நம் கையில் இல்லை. ஆனால் ஆர்வம், திறமை ஆகியவை நம் கையில் இருப்பவை. இந்த இரண்டின் மீதுதான் நாம் கவனம் செலுத்த வேண்டும். இவற்றைப் பற்றித்தான் கவலைப்பட வேண்டும்.



# போராட்டம்தான் வெற்றி

வாழ்கின்ற ஒவ்வொரு நாளும் போராட்டமாக இருந்தாலும் உறுதியான உள்ளம் இருந்தால் விரைவில் சமாளித்து விடமுடியும். அதனால் அந்தப் போராட்டத்தைச் சந்திக்க நாம் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை.

வாழ்க்கைப் போராட்டம் என்றால் என்ன? இதனை ஆராய்ந்து பார்த்தால் சில உண்மைகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

ஒரு செயலை செய்ய நினைக்கிறோம். அப்பொழுது அதற்குத் தடை ஏற்படுகிறது. அந்த தடையை அகற்றுவதற்கு நாம் மேற்கொள்ளுகிற முயற்சியே போராட்டமாகும்.

போராட்டம் என்றால் செயல்படும் பொழுது குறுக்கீடு ஏற்படுவதுதான். நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் தடை குறுக்கிட்டாலும் உறுதியுடன் இருந்து தொடர்ந்து செய்தால் நிச்சயம் நமக்கு வெற்றி கிடைக்கும்.

தடையை அப்புறப்படுத்த தொடர்ந்து முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். சோதனைகளைக் கண்டு சோர்வடைவது, வாழ்க்கை மீது சோர்வினை ஏற்படுத்திக்கொள்வது என்பதெல்லாம் கூடாது. எந்த விதத்திலும் சோதனை இல்லாமல் வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் காண முடியாது.

சோதனைகளை முயற்சிகளுக்குத் தூண்டுகோலாக்கிக் கொண்டால் நிச்சயமாக உயர்வு பெறமுடியும்.

எல்லாமே சரியாக நடந்தால் புதிய வழிகளைப் பற்றி சிந்திக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டு இருக்காது. அது போய்க் கொண்டிருக்கும் போக்கிலே நாம் சென்று கொண்டிருப்போம்.

நெருக்கடி தோன்றும் போது அதனை எப்படி சமாளிப்பது, எவ்விதம் மாற்றிச் செய்வது என்பது பற்றி சிந்திக்கத் தொடங்குகிறோம். புதிய கருத்துக்கான எண்ணம் தோன்றுகிறது. பின்பு அந்த யோசனை செயல் வடிவம் பெறுகிறது. இதன் விளைவாகத் தான் புதிய சாதனை உருவாகின்றது.

ஒவ்வொரு முறையும், சோதனை ஏற்பட்டு அதிலிருந்து மீண்டும் வெளிப்படுகின்றபோது புதிய சக்தி படைத்தவர்களாக இருப்போம். கஷ்டங்களை சமாளிக்கிற மன உறுதி படைத்தவர்களாக மாறமுடியும். சோதனையின் மூலம் புதுப்புது அனுபவங்களைப் பெறு இயலும். இந்த அனுபவமே நமக்கு எதைச் செய்யக் கூடாது என்கிற தெளிவை உண்டாக்கும்.

சோதனையைக் கண்டு பயந்து விடக்கூடாது. அப்படி பயந்து ஓடினால் நம்மை கோழையாக்கி விடும். சோதனையை எதிர்கொண்டு சமாளிக்கும் போது மேலும் துணிவு உண்டாகும். துணிச்சல் இருந்தால் தான் எதனையும் எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றல் வரும். தங்களுடைய வாழ்க்கை தோல்வியாக ஆக வேண்டுமென்று யாருமே நினைக்க மாட்டார்கள்.

நாமும் அப்படி நினைக்கக் கூடாது. வெற்றி பெறவேண்டுமானால் சோதனையை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். மனித உடல் நோயினால் பாதிக்கக் கூடியது என்பதை அனைவரும் அறிந்திருக்கிறோம். அதே போல மனமும் நோயினால் பாதிக்கக் கூடும் என்றார் மனோதத்துவ அறிஞர்.

அவர் அப்படி கூறிய பொழுது எல்லோரும் அடைந்த வியப்புக்கு அளவே இல்லை. அவ்வாறு மன நோய் பற்றி எடுத்துச் சொன்னவர் ''சிக்மெண்ட் பிராய்ட்''. அவர் மனதைப் பற்றியும் அதன் செயல்பாடு குறித்தும் தீவிரமான ஆராய்ச்சிகள் செய்து பல உண்மைகளைக் கண்டறிந்தார்.

மனதைப் பற்றி முதன் முதலாக ஆராய்ந்த அறிஞர் இவர்தான். இவருடைய ஆராய்ச்சியைக கண்டு எள்ளி நகையாடியவர்களே ஏராளம். ஆனால் அவர் சோர்ந்து போய் விடவில்லை. இப்படி எல்லோரும் இடையூறு தருகிறார்களே என்று வேதனைப்படவும் இல்லை.

தன்னுடைய கண்டுபிடிப்பின் மூலம் மனித சமுதாயம் மேன்மைப்படும் என்று நம்பினார். உறுதியுடன் செயல்பட்டார். அதன் பயன் மனத்தின் தன்மைகளை விரிவாக எடுத்துக் கூற அவரால் மட்டுமே முடிந்தது.

தன்னுடைய கொள்கையில் உறுதியுடன் இருந்து செயல்பட்டால் நிச்சயமாக உயர்ந்த நிலையை அடைய முடியும்.

நம்முடைய கோழைத்தனத்தையும் தயக்கத்தையும் உறுதிதான் போக்கும். நெருக்கடி ஏற்படும் பொழுது அவற்றைச் சமாளிக்க வேண்டிய கட்டாயம் நமக்கு ஏற்படுகிறது.

உடற் கூறுப்படி பார்த்தாலும் நெருக்கடியை நாம் சமாளிக்கின்றபோது நமது உடலில் உள்ள சுரப்பிகள் வேகமாக வேலை செய்து நெருக்கடியை சமாளிக்கும் சக்தியை நமக்கு அளிக்கிறது. உதாரணமாக ஒரு நாய் நம்மை விரட்டும் போது வழக்கமாக ஓடும் வேகத்தை விட நாம் அதிக வேகத்துடன் ஓடுகிறோம். இதுவரையில் தாண்ட முடியாத உயரங்களைத் தாண்டி தப்பிக்கிறோம்.

இந்த சக்தி நமக்கு எங்கிருந்து வந்தது? உடலில் உள்ள சுரப்பிகள் துரிதமாக வேலையை செய்து சக்தியை நமக்குக் கொடுக்கிறது. இதே போலத்தான்.

சோதனை ஏற்படுகின்றபோது அதனைச் சமாளிக்கின்ற ஆற்றலை நம்மால் பெற முடியும். ஆனால் சோதனையை சந்திக்க மனமின்றி நாம் ஒதுங்கிவிடும் போது இந்த ஆற்றல் நமக்குக் கிடைக்க வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது.

நமக்கு ஏற்படும் சோதனையை நாம் சந்திக்க வேண்டும். நம்முடைய பசிக்கு நாம் தானே சாப்பிட வேண்டும். நம்மிடம் தற்காப்பு உணர்ச்சி உண்டு. நெருக்கடிகளின் போது நம்மிடம் உள்ள பாதுகாப்பு உணர்ச்சி தானாகவே செயல்படத் தொடங்கும். நம்முடைய மனவலிமையின் மூலம் அதற்கு பலம் ஊட்ட முடியும்.

ஆற்றல் என்பது நமக்குள்ளே தூங்கிக் கொண்டிருக்கும் ஒரு சக்தி. அதனை எழுப்பி விட்டால் துரிதமாக வேலையை செய்யத்தொடங்கிவிடும்.

சோதனையைப் பற்றியும் அதனைச் சமாளித்து விடுவோம் என்றும் நினைக்க ஆரம்பித்தாலே மனச்சோர்வு மெல்ல மெல்ல நம்மை விட்டு அகன்று போக ஆரம்பிக்கும்.

சமாளித்து விடலாம் என்ற உறுதி தோன்றுகின்றபோது நம்மை அறியாமலே தன்னம்பிக்கை உருவாகி போராட்டத்தை எதிர்த்து நின்று வெற்றியைப் பெற்றுத் தரும்.

# பணம் தேடும் உலகில் ரசனைக்கான இடம் பூச்சியமாக இருக்கிறது

**– ஓவியர் ப்ரியந்த நந்தன**

ஓவியர் ப்ரியந்த நந்தன ஸ்பெயினில் நடைபெற இருக்கும் ஓவியக் கண்காட்சிக்காக கொழும்பில் இருக்கும் தனது வேலைத்தளத்தில் ஓவியங்களை தயார்படுத்திக் கொண்டிருந்தார். ப்ரியந்த குருனாகல், அலவ்வயைச் சேர்ந்தவர். ஓவியத்தின் மூலம் ஜீவிக்கலாம் என்று நம்பி கொழும்புக்கு வந்தவர். கடந்த 13 வருடங்களாக இதனைத் தொழிலாகச் செய்கிறார்.



சுவாரஷ்யம் நிறைந்த அவரது வாழ்க்கைக் கதை குறித்து கதைக்க ஆரம்பித்தார்.

பாடசாலைக் காலம் முழுக்க சித்திரங்களாலே எனது மனம் நிரம்பியிருந்தது. பாடப் புத்தகங்களிலும் அப்பியாசக் கொப்பிகளிலும் வெள;ளைத் தாள்களை மறைத்து வைத்து நான் வரைந்து கொண்டிருந்தேன். இதனை விட்டுவிட்டு ஒழுங்காகப் படிக்குமாறு எனது தாய் என்னைக் கண்டிப்பார்.

சாதாரண தரப் பரீட்சைக்கு 3 மாதம் இருக்கும் போதுதான் பரீட்சையில் எப்படியாவது சித்தியடைய வேண்டும் என்ற ஆர்வம் வந்தது. உயர்தரத்திற்கு சித்தியடைந்தேன். விவசாயத்திலேதான் எனக்கு ஆர்வம் இருந்தது.இருந்தாலும் நான் ஓவியத் துறையைத் தேர்ந்தெடுத்தேன்.

எல்லோரும் கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகளிலே படித்தால்தான் உழைக்கலாம் என்று நினைக்கிறார்கள். நான் இத்துறையிலும் முடியும் என்பதை நிரூபித்துள்ளேன். இந்த இடத்தில் எனது ஆசிரியர்களையும் குமார் ரத்னாயக்க மாமாவையும் நினைவுபடுத்த வேண்டும். அவர்தான் நான் கொழும்புக்கு வரக் காரணமாக இருந்தவர். அவரிடம்தான் கென்வஸ் (Canvas) படித்தேன். நான் பல்கலைக்கழகங்களிலோ கலாசாலைகளிலோ போய்ப் படிக்கவில்லை. எனது தீவிர முயற்சியினாலும் உற்சாகத்தினாலும்தான் இதனை வளர்த்துக் கொண்டேன்.

ஆரம்பத்தில் பேப்பரில் வரைய ஆரம்பித்து pastel, water color, canvas என்று எனது பயணம் தொடர்கிறது. இன்று நான் நல்ல நிலையில் இருக்கிறேன். நான் இருவருக்குத் தொழில் கொடுத்திருக்கிறேன். அதை நினைத்தாலும் மகிழ்ச்சிதான்.

கொழும்பிலும் கண்டியிலும்தான் ஓவியங்களுக்கான இடம் இருக்கிறது. இலங்கையின் எல்லா இடங்களிலும் இதற்கான வரவேற்பு இல்லை. கென்வஸ் ஓவியங்கள் அதிகமாக விற்கின்றன. அப்ஸ்ட்ரக்ட் ஓவியங்களுக்கு வெளிநாட்டவர்களிடம்தான் மதிப்பு இருக்கிறது. அவர்கள் ஒரு ஓவியத்தின் வர்ணம், செய்தி என எல்லாவற்றையும் ரசிக்கின்றனர். ஆனால் பெரும்பாலான இலங்கையர்கள் அழகுக்காகவே ஓவியங்களை வாங்குகின்றனர். வீட்டை அழகுபடுத்துவதே அவர்களது நோக்கமாக இருக்கிறது.

அப்ஸ்ட்ரக்ட் ஓவியம் எங்களை சிந்திக்க வைக்கின்றது. ஆழ்ந்து நோக்கச் செய்கிறது. ஓவியம் பொதிந்துள்ள நுணுக்கங்களை அவதானிக்கக் கூறுகிறது.

வீதியோரம் நான் வைத்திருக்கும் ஓவியங்களை கைக்குழந்தையிலிருந்து முதியவர் வரை ரசித்துப் பார்ப்பதை அவதானித்திருக்கிறேன். யாசகம் கேட்பவர்கள் கூட ஓவியங்களில் ஆர்வம் கொண்டுள்ளனர். ஓவியங்களில் ஆர்வமிருந்தும் அதனை வாங்க முடியாமல் ரசித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இலவசமாகக் கொடுத்ததும் உண்டு. எனது இரண்டு நாள் உழைப்பை பரிசளித்து வாழ்நாள் முழுவதும் அவர்களை மகிழ்ச்சிப்படுத்தியிருக்கிறேன்.

இன்று மனிதர்கள் பணம் தேடுவதில் பிஸியாக இருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கையில் ரசனைக்கான இடம் பூச்சியமாக இருக்கிறது. கலையுணர்வு இருக்கின்ற மனிதன்தான் மென்மையான உள்ளம் கொண்டவனாக இருக்கிறான். அப்படி இல்லாதவன்தான் மற்றவர்களுடன் குரோதம் கொள்கிறான். அடுத்தவனுக்கு குழி வெட்டுகிறான். எனவே மனிதன் கலாரசனை கொண்டவனாக வளர வேண்டும்.ஏதாவது ஒரு துறையில் அவருக்கு ஈடுபாடு இருக்க வேண்டும்.

என் திறமையைக் கொண்டு இன்னும் நான் முன்னேற வேண்டும். எனது நாட்டின் பெயரை உலக அளவில் உயர்த்துவதே எனது நோக்கம். ப்ரியந்தவின் ஓவியங்கள் உருவாகும் இடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் வரைந்த நவீன ஓவியங்களை எனக்குத் தெளிவுபடுத்தினார். இருவரும் தேநீர் அருந்தினோம். ஓவியங்கள் உருவாகும் இடம் என்பது எத்தனை அற்புதமானது. தனது எண்ணங்களை வர்ணங்களின் வழியே சிதறவிடும் ஓவியக் கலைஞன் ஒரு மாயாஜாலத்தை நிகழ்த்துகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொதுநலவாய விளையாட்டில் இலங்கை அஞ்சலோட்ட அணி புதிய சாதனை



அவுஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் நகரில் நடைபெற்று முடிந்த 21 ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவின் மெய்வல்லுனர் விளையாட்டின் இறுதி நாளான கடந்த 14ஆம் திகதி, ஆண்களுக்கான 4 x 100 அஞ்சலோட்ட இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட இலங்கை அணி, 39.08 செக்கன்களில் போட்டியை நிறைவு செய்து, புதிய தேசிய சாதனையுடன் 6 ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.

சுமார் 68 வருடங்களுக்குப் பிறகு பொதுநலவாய விளையாட்டு விழாவின் ஆண்களுக்கான 4 x 100 அஞ்சலோட்டத்தில் பங்குபற்றிய இலங்கை அணி, கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற தகுதிச் சுற்றில் 39.47 செக்கன்களில் போட்டியை நிறைவுசெய்து 3 ஆவது இடத்தைப் பெற்று இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டது. இதன்படி, கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட இலங்கை அஞ்சலோட்ட அணிக்கு 8 ஆவது சுவட்டில் ஓடுவதற்கு வாய்ப்பு கிட்டியது.

உலகின் முன்னணி குறுந்தூர ஓட்ட வீரர்களின் பங்கேற்புடன் விறுவிறுப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில் ஜமைக்கா, இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்கா உள்ளிட்ட அணிகளுடன் போட்டியிட்ட இலங்கை அணி 39.08 செக்கன்களில் போட்டியை நிறைவுசெய்து 6 ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டது. அத்துடன், ஆண்களுக்கான 4 x 100 அஞ்சலோட்டத்தில் 3 வருடங்களுக்குப் பிறகு தேசிய சாதனையையும் இலங்கை அணி படைத்திருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

# முஸ்தாக் அஹமட் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சு பயிற்சியாளராக நியமிக்கப்படுவாரா?

இலங்கை கிரிக்கட் அணியின் சுழற்பந்து வீச்சு பயிற்சியாளராக பாகிஸ்தான் அணியின் முன்னாள் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் முஸ்தாக் அஹமடை நியமிப்பது குறித்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகளுக்கு முஸ்தாக் அஹமட் ஏற்கனவே சுழற் பந்து வீச்சு பயிற்சியாளராக செயற்பட்ட அனுபவம் உள்ள நிலையிலும், அவரது பயிற்சிக் காலத்தின் போது அவ்விரு அணிகளின் சுழற்பந்து வீச்சு பெறுபேறுகள் உயர்மட்டத்தில் இருந்தமையைக் கருத்தில் கொண்டும் முஸ்தாக் அஹமடுடன் இந்த பேச்சுவார்த்தையை இலங்கை கிரிக்கெட் ஆரம்பித் துள்ளது.

முத்தையா முரளிதரனின் ஓய்வின் பின்னர் இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சு பலம் தொடர்ந்து கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றது. முரளியின் ஓய்வின் பின்னர் ரங்கன ஹேரத், முக்கிய சுழற்பந்து வீச்சாளராக செயற் பட்ட போதும் தற்போது அவரது ஓய்வுக் காலமும் நெருங்கி வரும் நிலையில், நிலையான சுழற்பந்து வீச்சாளர் ஒருவரை இலங்கை கிரிக்கட் இன்னமும் தயார் செய்யவில்லை. இந்நிலையிலேயே சுழற் பந்து வீச்சை பலப் படுத்த இலங்கை கிரிக்கெட், அது குறித்த பயிற்சி யாளராக முஸ்தாக் அஹமடை நியமிப்பது குறித்து ஆலோசித்து பேச்சுவார்த்தையை ஆரம்பித் துள்ளதாக இலங்கை கிரிக்கெட் உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின் றன.




## அழைப்புப் பாதையில் ஒரு பயணம்

முஹம்மத் அஹ்மத் ராஷித்




தஃவா களம் எதிர்கொள்ளும் இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வாக தஃவாவைச் சுமந்திருக்கும் மாமனிதர்களை இலக்கு வைத்து எழுதப்பட்ட 'இஹ்யாஉ பிக்ஹுத் தஃவா (தஃவா கலை நுட்பத்தை உயிரூட்டுதல்) தொடரின் முதலாவது நூல் 'அல் முன்தலக்' தமிழ் மொழிபெயர்ப்பு.

இப்பொழுது விற்பனையில்...
பிரதிகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்



## Magan Construction & Properties Pvt Ltd

No. 04 Kapruka Building, Kandy Road, Malwatta.
Tel : 0333 137382 / 077 066 7375
PV 129446

கட்டிட நிர்மாணத்துறையில் தனக்கென ஒரு நாமம் பதித்த மற்றும் Estimate & Designing இன் முன்னோடியான Mâgân வழங்கும் அதி விசேட சலுகை கட்டணம் அடிப்படையிலான ( Installment ) முறையில் உங்களுடைய கனவு இல்லங்களை நனவாக்கிக் கொள்ளுங்கள்.........

- 100,000/= மாத்திரம் செலுத்தி கட்டிட வேலையை ஆரம்பியுங்கள்
- வரைபடம் (Plan With interior Designing) மற்றும் Estimate இலவசமாக செய்துதரப்படும்
- அதி கூடிய சலுகைக் காலம் 6 வருடங்கள் வரை
- கட்டிடத்தின் மொத்தப் பெறுமதி தவணை அடிப்படையில் பிரிக்கப்பட்டு
- வாடிக்கையாளரின் வசதிக்கு ஏற்ப தவணைக்காலம் தீர்மாணிக்கப்படும்

• வீடுகள் • வீட்டுத் தொகுதிகள் • வியாபார நிலையங்கள்
போன்றவை கருத்தில் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
Magan Construction & Properties ( PVT) Ltd.
Tel : 0333 137382 / 077 066 7375
rush.fah@gmail.com
www.magan.lk

We Build Your Dreams


# புதுமுக வீரர்களுடன் இலங்கை தேசிய கால்பந்து அணி



இலங்கை தேசிய கால்பந்து அணிக்கு வீரர்களை உள்வாங்குவதற்கான தேர்வுகள் அண்மையில் நிறைவடைந்துள்ள நிலையில், இலங்கை கால்பந்து சம்மேளனம் இம்முறை தேசிய அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள வீரர்களின் விபரங்களை வெளியிட்டுள்ளது.

இலங்கை அணியின் புதிய பயிற்றுவிப்பாளரான நிசாம் பக்கீர் அலியின் கண்காணிப்பின் கீழ் நாடு முழுவதும் உள்ள வீரர்களுக்கு வாய்ப்பை வழங்கும் நோக்கில், இம்முறை தேர்வுகள் பல பாகங்களிலும் பல கட்டங்களாக இடம்பெற்றன.

அதன் நிறைவில் தற்பொழுது A மற்றும் B என இரண்டு குழாம்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதில் A குழாமில் 30 வீரர்களும் B குழாமில் 18 வீரர்களும் உள்ளடங்குகின்றனர்.

தற்பொழுது தெரிவாகியுள்ள வீரர் களில், ஏற்கனவே தேசிய அணியில் அங்கம் வகித்த வீரர்களுடன் இணைந்து மேலும் பல இளம் வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளமை முக்கிய அம்சமாகும்.

வட மாகாண கழகங்களில் இருந்து ஒரே ஒரு வீரர் மாத்திரம் இந்த குழாமில் இணைக்கப் பட்டுள்ளதுடன், கிழக்கு மாகாண கழகங்களில் இருந்து இரண்டு வீரர்கள் தெரிவாகியுள்ளனர்.

**தேசிய காற்பந்து அணிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள முஸ்லிம் வீரர்கள்.**

**A குழாம்:**

மொஹமட் ரஹுமான் (முன்கள வீரர்), சபீர் ரசூனியா (முன்கள வீரர்), மொஹமட் சிபான் (மு.வீ) மொஹமட் அஸ்மீர் (மத்தியகள வீரர்), அபீல் மொஹமட் (ம.க.வீ), மொஹமட் ரிப்னாஸ் (ம.க.வீ), மொஹமட் முஸ்தாக் (ம.க.வீ), ராசிக் ரிஷாட் (கோல் காப்பாளர்), மொஹமட் பசால் (கொழும்பு கா.க)

**B குழாம்:**

சல்மான் அஹமட் (முன்கள வீரர்), மொஹமட் அர்சாட் (மு.வீ), ரியாஸ் அஹமட் (மு.வீ), ஷெஹான் யஷ்மில் (ம.க.வீ), அமான் பைசர் (ம.க.வீ), பரூட் பாயிஸ் (ம.க.வீ), மொஹமட் முஜாஹித் (ம.க.வீ), பாசித் அஹமட் (ம.க.வீ), மொஹமட் சஹீல் (ம.க.வீ), எஸ்.எம். வசித் (ம.க.வீ), மெஹமட் உஸ்மான் (கோல் காப்பாளர்)


## அருள் மிகு மாதம் ரமழானே வருக!

OMSED

எதிர்வரும் ரமழான் மாதத்திலும் வழமை போன்று நாடளாவிய ரீதியில் Ramadan Vacation Course மற்றும் Youth Towards Rayyan உட்பட பல நிகழ்ச்சிகளை நடாத்த OMSED Srilanka திட்டமிட்டுள்ளது.



RAMADAN VACATION COURSE
Youth Towards Rayyan

உங்கள் பிரதேசத்திலும் இவற்றை நடாத்த விரும்பினால் எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்.

0773773887, 0778462203



Printed and Published by Focus Media (Pvt) Ltd. 48, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org